
# வணிகத் துளிர்

## வணிக மாணவர் மன்றம்

VANIKA THULIR - COMMERCE STUDENTS UNION





Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No 3614


## யா/விக்ரோறியாக் கல்லூரி
சுழிபுரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிகத்துளிரை வாழ்த்துகின்றோம்

பொருண்மிய பலத்தைப் பெருக்கிடும் வங்கி
அருந்துணை யாகப் பணிசெய்யும் வங்கி — மக்கள் வங்கி

சேமிப்பை ஊக்கி வளர்த்திடும் வங்கி
செழிப்பினைத் தூக்கி நிறுத்திடும் வங்கி — மக்கள் வங்கி

மக்களோ டிணைந்த மாண்புறு வங்கி
தக்கோர் புகழும் தனித்துவ வங்கி — மக்கள் வங்கி

தேவைக்கேற்ப கடன்பெறு வசதியும்
வைப்புக்கேற்ப தாராள வட்டியும்
உங்களின் உயர்வினை நாடி வழங்கும்
உள்ளம் நிறைந்த உன்னத வங்கி — மக்கள் வங்கி

- நடைமுறை முதலீட்டு — சேமிப்பு கணக்குகள்
- சிறுவர் நிரந்தர — சேமிப்பு கணக்குகள்
- நிலையான வைப்புக்கள் — சேமிப்புச் சான்றிதழ்
- மகளிர் அதிர்ஷ்ட வைப்புக் கணக்குகள்
- கூட்டுறவு அபிவிருத்தி — சுயவேலைக் கடன்கள்

வாய்ப்பும் வசதியும் இன்னும் பலப்பல
வழங்கியே உறுதியாய்ப் பணிசெய்யும் நிறுவனம் — மக்கள் வங்கி

அருகிலுள்ள கிளையை நாடி
ஆலோசனை பெற்றிடுவீர்!

வாடிக்கையாளராகி வசதிகளைப் பெருக்கிடுவீர்!

# மக்கள் வங்கி

(இலங்கையில் அதிகூடிய கிளைகளையும் கோடிக்கணக்கான வாடிக்கையாளரையும் கொண்டு சேவை புரியும் சிறந்த வங்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No 3614

# வணிகத் துளிர்

# VANIKATH THULIR

வணிக மாணவர் மன்றம்
யா/விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.
1994

**Commerce Students Union**
**J/Victoria College,**
**Chulipuram.**
1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணிபம் என்பது வாழ்க்கை நடத்துவதற்காகும்.
வாணிபம் என்பது விருத்தியடைதலாகும்.
வாணிபம் என்பது அனுபவங்களைப் புதுப்பித்தலாகும்.
வாணிபம் என்பது சமூக நடவடிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

| | |
|---|---|
| திரு. | கா. சந்திரபாலன் |
| திரு. | K. குணபாலசிங்கம் |
| திரு. | சி. க. இந்திரராசா |
| திரு. | V. சண்முகநாதன் |
| திரு. | செ. சிவகுமாரன் |
| திரு. | இ. கைலைவாசன் |
| செல்வன் | தா. தவமன்னன் |
| செல்வன் | கு. பாலமுருகன் |
| செல்வன் | ந. சத்தியரூபன் |
| திருமதி | பொன். பாக்கியம் |
| திருமதி | A. வேலுப்பிள்ளை |
| திருமதி | S. தேவநாயகம் |
| செல்வி | S. சுகந்திராதேவி |
| திருமதி | தே. சிவகுமாரன் |
| திருமதி | S. அரியமலர் |
| திருமதி | ம. ஜெயசோதி |
| செல்வி | பு. நாகலிங்கம் |
| செல்வி | N. இன்பமலர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசியுரை

விக்ரோறியாக்கல்லூரி வணிகமாணவர் மன்றத்தின் கன்னி வெளியீடான 'வணிகத்துளிர்'க்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நூற்றாண்டிற்கு மேற்பட்ட பழமைவாய்ந்த இக்கல்வி நிறுவனம் இப்பிரதேச மாணவர்கட்கு கல்வி ஒளிபரப்பி உயர்ந்தோங்கி நிற்பதையிட்டு மகிழ்வெய்துகிறேன்.

வர்த்தகக் கல்வி பிரபல்யம் அடைந்துவரும் இக்காலத்தில் வர்த்தகத்துறை அறிஞர்களினதும், மாணவர்களினதும் ஆக்கங்களை பெருமளவில் தாங்கிவரும் வணிகத்துளிர் பலருக்கும் பயனுள்ளதாக அமையுமென நம்புகின்றேன்.

பல்வேறு இடர்களின் மத்தியில் கன்னிவெளியீடாக வெளிப்படும் வணிகத்துளிரின் வெளிப்பாட்டிற்கு அரும்பணியாற்றிய ஆசிரியப்பெருந்தகைகளுக்கும், மாணவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிகத்துளிர் எதிர்காலத்தில் பெருவிருட்சமாக வளர்ந்தோங்க என் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

யா/விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

திரு. கா. சந்திரபாலன்
அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



யா / விக்ரோறியாக் கல்லூரி வணிக மாணவர் மன்றம் வெளியிடும் '' வணிகத்துளிர் '' என்னும் சஞ்சிகை நன்றாக மலர வாழ்த்துகிறோம்.

யா / விக்ரோறியா கல்லூரி மாணவர் தமது ஆக்கங்களை மலராக வெளியிடுவது பெருமைக்குரியது. ''வணிகத்துளிர்'' மலர்வதை பார்த்து பேரானந்தம் அடைவது இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆவர். இவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

வணக்கம்

**க. கந்தசாமி**
**கல்விப் பணிப்பாளர்,**
**யாழ் .வலயம் 02.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



சைவம் வளர்த்த சான்றோர்களும் செந்தமிழ் வளர்த்த செம்மல்களும் செறிந்து வாழ்ந்து வரும் சீரிய கிராமம் சுழிபுரம். இங்குள்ள கல்விச்சாலைகளுள் முதன்மை ஸ்தானத்தை வகிப்பது யா / சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. புகழ் பூத்த அதிபர்களின் சேவையால் இந்த உயர் நிலை கிடைக்கப் பெற்றது யாவரும் அறிந்ததே.

பழமையும் பெருமையும் வாய்ந்த விக்ரோறியாக் கல்லூரியின் முதலாவது வணிக மலராக மலரும் "வணிகத் துளிர்" சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கல்லூரி அன்னையின் புகழை இந்த மலரின் மூலம் மிளிரச் செய்யும் வர்த்தக மாணவர் மன்றத்தின் முயற்சி பாராட்டுக்குரியது.

வர்த்தகத்துறை பிரபல்யம் அடைந்து வரும் இன்றைய கால கட்டத்தில் வணிகத்துளிருக்கு நல்ல வரவேற்பு இருக்குமென்பதில் ஐயமில்லை. இச் சஞ்சிகையில் மாணவர்களின் கட்டுரைகள் அதிகமாக இடம் பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

இன்றைய மிகவும் கஷ்டமான சூழ்நிலையிலும் மாணவரின் கல்வி அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு வணிகத் துளிரை வெளியிட முன்வந்த விக்ரோறியாக் கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தினரும் அவர்களுக்கு உறுதுணையாக நின்று செயற்பட்ட அதிபரும் ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

இம்மலர் மணம் பெற மன மகிழ்வுடனும் நல்லிதயத்துடனும் வாழ்த்தி விக்ரோறியா இந்த உலகினில் நன்கு வளர்ந்திட எல்லாம் வல்ல நடராசப் பெருமான் திருவருளை வணங்குகிறேன். ஆண்டு தோறும் வணிகத் துளிர் வளர் பிறையென வளர்ந்து முழுமதியெனத் திகழ வாழ்த்துகிறேன்.

கோட்டக்கல்வி அலுவலகம்,
சங்கானை.

**ப. விக்னேஸ்வரன்**
கோட்டக்கல்வி அலுவலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் நீண்டகாலக் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டு நிமிர்ந்து நிற்கும் யா / விக்ரோறியாக் கல்லூரி வணிக மாணவர் மன்றத்தினர் தமது முதன் முயற்சியாக ''வணிகத்துளிர்'' என்னும் சஞ்சிகையை வெளியிடுகின்றனர்.

தற்போது பாடசாலைகளில் வணிக மன்றத்தினரின் சஞ்சிகை வெளியீட்டு முயற்சி உச்சவளர்ச்சிப் போக்கில் நடைபெற்றுக் கொண்டுவருவது மகிழ்ச்சிக்குரியதே

கல்லூரியின் வணிக மாணவர்கள் தமது பொறுப்புக்களை ஏற்கும் அநுபவம், சவால்களைச் சமாளிக்கும் இயல்பு சகிப்புத்தன்மை ஆகியவற்றைச் சஞ்சிகை வெளியீட்டின் மூலம் பெற்றுக் கொள்கின்றனர்.

எனவே ''வணிகத்துளிர்'' மரமாக வளர்ந்து அறிவுக் கனிகளை தொடர்ந்து தரவேண்டுமென வேண்டுவதுடன் இம்முயற்சியில் ஈடுபட்ட ஆசிரியர்களையும், மாணவர்களையும் பாராட்டுகிறேன்.

வளர்க ''வணிகத்துளிர்'' !


கல்வித் திணைக்களம்,
யாழ். வலயம் 2,
கோப்பாய்.
1994 - 11 - 18.

நா. வரதராசா
உ.க.ப. வர்த்தகம்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகத்துளிர் விருட்சமாகட்டும்!

உலகெங்கும் காணப்படும் சகல துறைகளிலும் வணிகக் கல்வியானது, மிக அவசியம் வேண்டப்படுகிறது. இந்நிலையில் இன்று இக்கல்வியானது எமது பிரதேசத்தில் அதி உன்னத வளர்ச்சிப் போக்கில் செல்வது மகிழ்ச்சிக்குரியதே.

யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வணிக மாணவர் மன்ற வெளியீடாகிய வணிகத்துளிர் வணிகக் கல்வி சார்ந்த பல்வேறு தரமான கட்டுரைகளைத் தாங்கி வெளிவருவதானது மாணவர்களின் ஆளுமையை வெளிக்கொணர்ந்து அவர்களை எத்துறையிலும் தலைமைப் பண்புகளை ஏற்கும் வல்லுநர்களாக்கும் என்பது நிச்சயம்!

வணிகத்துளிரானது, ஈழத்தின் சகல பாகங்களிலும் தமிழ் மாணவர்களின் கரங்களிலும் தவழ்ந்து அவர்களை வணிகத்துறை வல்லுனர்களாக்க வேண்டுமென்பதே என் அவா!

இம்மலர் வெளியீட்டிற்கு அயராது உழைத்த மாணவச் செல்வங்களையும், இத்துறை சார் ஆசிரியர்களையும், ஒத்துழைப்பு வழங்கிய அதிபர் அவர்களையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் வணிகத்துளிர் கிளைகளைப் பரப்பி, விருட்சமாக வியாபிக்க என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

ப. சுந்தரலிங்கம்
முதன்மை ஆசிரியர்.

கல்வித் திணைக்களம்,
யாழ். வலயம் 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகத் துளிர் தொடர்ந்துமலர ...

வணிகக் கல்விப் போதனையில் எமது கல்லூரி பழமை வாய்ந்ததும், முன்னோடியானதுமாகும். எமது கல்லூரியின் வணிகக் கல்வியின் தந்தையென வர்ணிக்கப்படும் அமரர் M. A. கந்தையா அவர்களால் 1950ம் ஆண்டளவில் வணிகத்துறை உருவாக்கப்பட்டு அவரைத் தொடர்ந்து வந்த திருவாளர்கள் M. குலசேகரம், S. சிவசுப்பிரமணியசர்மா, S. திலகரத்தினம். M சின்னத்தம்பி, T. தனபாலசிங்கம், V. சிறீகாந்தன் ஆகியோரின் அயராத பணியினால் பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும், பட்டதாரிகளையும், கணக்காளர்களையும், தொழிலதிபர்களையும், பிரபலவர்த்தகர்களையும், பகுத்தறிவுள்ள நுகர்வோரையும் உருவாக்கியுள்ளது எமது விக்ரோறியாக் கல்லூரி.

அகில இலங்கை ரீதியாக வணிகக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டு அரச பொருளாதாரக் கொள்கையில் வணிகத் துறையை விரிவாக்க நடவடிக்கைகள் எடுத்த போது எமது கல்லூரி வணிகத் துறையும் விரைவான வளர்ச்சி பெற்றது. வணிக ஆசிரியர்களது அயராத உழைப்பினாலும், வணிக மாணவர்களது அர்ப்பணிப்பினாலும் உருவாக்கப்பட்ட வணிக மாணவர் மன்றம், செயற்கரிய பல செயற்றிட்டங்களை உருவாக்கி வணிகக் கல்வியை முன்னெடுத்துச் செல்வதிலும், சுய தொழிலில் ஈடுபட வழிகாட்டுவதிலும், பின்தங்கிய மாணவர்களது கல்வியை முன்னேற்றுவதிலும் அரும்பாடுபட்டு வந்துள்ளது.

வணிகத்துறை மாணவர்களது ஆக்கங்களை கையெழுத்துப் பிரதிகளாக எமது மன்றம் வெளியீடு செய்து வந்த போதிலும் அச்சுப் பிரதிகளாக அவற்றை வெளியிடாமை பெரும் குறையாக இருந்து வந்துள்ளது. எனினும் கன்னி மலராக உங்கள் கரங்களில் தவழும் ''வணிகத துளிர்'' இக்குறையை நீக்கி வைப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இம் மலரை வெளியிடுவதில் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த அதிபர், கா. சந்திரபாலன் ஆசிரியர்கள், வணிக மன்ற செயற்குழு உறுப்பினர்கள், குறிப்பாக: மன்றத் தலைவர் செல்வன தா. தவமன்னன் ஆகியோரை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இவர்களுடன் இப்மலருக்கு ஆசிச் செய்தி வழங்கியோர், கட்டுரை வழங்கியோர், நிதியுதவி புரிந்தோர், பாரதி பதிப்பக உரிமையாளர் திரு. இ. சங்கர், மலரை அழகுற அச்சிட்டு வழங்கிய அருண்பிறின்டேர்ஸ் ஆகியோருக்கும் என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிகத் துளிர் பல்லாண்டு காலம் சேவை செய்து நின்று நிலைத்திருக்க நடேசப்பெருமானின் அருளை வேண்டி அவர் பாதார விந்தங்களை இறைஞ்சுகிறேன்.

சி. க. இந்திரராசா
மன்றப் பொறுப்பாசிரியர்

121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன் தா. நவமன்னன்
தலைவர்
**வணிக மாணவர் மன்றம்- 1994**
சுழிபுரம் விக்ரோறியாக்கலலூரி.



# என் இதயத்திலிருந்து.....

எமது கல்லூரியின் முதலாவது வணிக மலராக ''வணிகத் துளிரை உங்கள் கரங்களில் அளிப்பதை இட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய உலகில் மாணவர்களின் பெருகி வரும் அபிலாசைகளின் புரட்சி காரணமாக பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்படுகின்றன. இவ்வகையில் எமது பாடசாலை 1994 ம் ஆண்டு வணிக கலை மாணவர்களும் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்கள்.

நவீன உலகில் பல்வேறு தேவைகள் பெருகி வருகின்றன. 21ம் நூற்றாண்டை புதிய சவால்களுடன் எதிர்நோக்கும் இன்றைய மாணவர்களுக்கு கல்வியுடன் பல்வேறு தொழில் மட்ட அறிவுகளைப் பெற பயிற்சி அளிப்பது அவசியமாகும். இதனூடாகவே சமுதாயத்தின் விரைவான அபிவிருத்தி நிர்ணயிக்கப்படுகிறது.

துரித கதியில் அபிவிருத்தி அடையும் உலகத்தின் ஊடாக தமது வாழ்க்கையை துணிவுடனும் நுண்மதியுடனும் செலுத்தக்கூடிய தலைமைத்துவப் பண்பையும், அறிவையும் திறனையும் விருத்தி செய்ய மாணவர்கள் பல்வேறுபட்ட கல்வித் தகவல்களை பெற வேண்டும். அதுவும் இன்றைய வர்த்தக உலகம் விரைவாக மாறி வளர்ச்சியடைந்து வருகிறது. அவற்றை அறிய இதுபோன்ற சஞ்சிகைகள் பெரிதும் உதவுகின்றன.

இன்றைய உலக வர்த்தகத்தில் முகாமைத்துவம் பெரும் பங்கு ஆற்றி வருகின்றது. இதை இன்றைய இளம் சந்ததியினருக்கு அறிமுகம் செய்ய வேண்டியது மிக அவசியமாகும். முகாமைத்துவம் நடைமுறையில் செயற்படுத்தும் கல்வியை மேலும் விரிவாக்கி அபிவிருத்தி செய்கின்றது. இதன் செயற்பாடு பொருளியல், வர்த்தக வளர்ச்சியோடு தொடர்புடைய கைத்தொழில், வங்கியியல், போக்குவரத்து. காப்புறுதி, களஞ்சியப் படுத்தல், தொடர்பாடல் ஆகியவற்றுடன் கணனியியல் புதிய றோபோ (இயந்திர மனிதன்). செயற்திட்டம் வரை பெரும் செல்வாக்கு செலுத்துகின்றது. விஞ்ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக செயற்பாடுகளையும் சிறப்பாக முன்னேற்றுகின்றது. இவ்வகையில் 1994 ம் ஆண்டு வணிக மாணவர் மன்றத்தின் முகாமைத்துவத் திறன் வணிகத் துளிராக துளிர்த்துள்ளது.

இத்துளிரில் பல்வேறு தரமான கட்டுரைகளும் அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ்வெளியீட்டைச் செய்வதற்கு எல்லாவித ஆலோசனைகளை வழங்கிய எமது அதிபர் திரு கா. சந்திரபாலன் அவர்கட்கும் உப அதிபர் திரு, க. குணபாலசிங்கம் அவர்கட்கும் மன்றப்பொறுப்பாசிரியர் திரு. சி. க இந்திரராசா அவர்கட்கும் செல்வி சு. சின்னத்துரை அவர்கட்கும் திரு. செ. சிவகுமாரன், திரு. இ. கைலைவாசன், திரு. V சண்முகநாதன், திருமதி தே. சிவகுமாரன் அவர்கட்கும் மற்றும் ஏனைய எல்லா வளிகளிலும் உதவியவர்த்தக, கலை ஆசிரியர்க்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பிட்ட காலத்தில் தேவையான ஆக்கங்களைத்தந்துதவிய விரிவுரையாளர்கட்கும் கட்டுரையாளர்கட்கும் சஞ்சிகை வெளியிட விளம்பர உதவியளித்த நிறுவன உரிமையாளர்கட்கும் எமது ஆலோசனைக்கு இணங்க சஞ்சிகையின் முகப்பு அட்டையை சிறப்பாக வடிவமைத்த திரு உ. பாரதி அவர்கட்கும் அழகாக அச்சிட்டுத் தந்த அந்திவானம் பதிப்பகத்தினருக்கும் அட்டையை சிறப்பாக அமைப்பதற்கு பண உதவி வழங்கிய இக் கல்லூரியின் பழைய மாணவ சங்கத்தினருக்கும், இதனை அழகாக அச்சிட்டுத்தந்த அருண் பிறிண்டேர்ஸ் அவர்கட்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

பொதுவாக மாணவர்கள் தம்மை பூரணமாக கற்றலுடன் பயிற்சியிலும் ஈடுபடுத்த வேண்டும் இதுவரை பொதுப்பரீட்சையில் வர்த்தக மாணவர்கள் அளித்த விடைகள் ஆக்கபூர்வமாக அமையவில்லை என பரீட்சை மதிப்பீட்டாளர்கள் தெரிவித்து உள்ளனர். எனவே வர்த்தக மாணவர்கள் இது போன்ற சஞ்சிகைகளையும் புதிய தகவல்களையும் கற்கவேண்டியது அவசியமாகும். இவ்வகையில் வணிகத்துளிர் வெளியிட என்னுடன் ஒத்துழைத்த அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

வணக்கம்

தாமோதரம்பிள்ளை
தவமன்னன்

சுழிபுரம்
24 - 03 - 95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

❋ வாழி நீயென்றும் வணிகத்துளிரே

❋ முன்நோக்கிய நாணய மாற்றுவீத ஒப்பந்தங்கள்

❋ வர்த்தகக்கல்வியின் முக்கியத்துவம்

❋ சந்தைப்படுத்தல் முகாமையில் நுகர்வோர் முக்கியத்துவம்

❋ நன்மதிப்பு

❋ நிறைவில் பதிவுகளும் ஒற்றைப் பதிவும்

❋ கொள்ளல் கொடுத்தல் கணக்கும் வருமானச் செலவுக்கணக்கும்

❋ விஞ்ஞானமும் அதன் வகைகளும்

❋ இரண்டாவது குடியரசு அமைப்பில் ஜனாதிபதி

❋ இலங்கையின் சனத்தொகை

❋ ஈழத்துத் தமிழ் நாவல்களில் பெண் பாத்திரப் படைப்புக்கள்

❋ குருலிங்க சங்கம வழிபாடு

❋ ஆத்ம விகாரியின் மோட்சப் பயணம்

❋ அனுமானம்

❋ கோயிற் கிரியைகள்

❋ சென்மதி நிலுவை

❋ நாடகமும் அரங்கியலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அதிபர்



திரு. கா. சந்திரபாலன்
(B. A Dip. in Ed.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர் ஆலோசனைக்குழு

இருப்பவர்கள்:-

திருமதி A. வேலுப்பிள்ளை, செல்வி S. சுதந்திராதேவி, திருமதி பொன் - பாக்கியம், திரு. K. குணபாலசிங்கம், செல்வன் தா. தவமன்னன், திரு. கா. சந்திரபாலன் திரு. V. சண்முகநாதன், திரு. சி. க. இந்திரராசா, செல்வன் கு. பாலமுருகன்

நிற்பவர்கள்:-

செல்வி த. இன்பமலர், திரு. செ. சிவகுமாரன், திருமதி தே. சிவகுமாரன், திருமதி A. சற்குணலிங்கம், திருமதி S. தேவநாயகம், திருமதி M. ஜெயசோதி, செல்வி பு. நாகலிங்கம், திரு. இ. கைலைவாசன், செல்வன் ந. சத்தியரூபன்

***

## வணிக மாணவர் மன்ற நிர்வாகசபை

இருப்பவர் இடமிருந்து வலம்:-

திருமதி A. வேலுப்பிள்ளை, திரு V. சண்முகநாதன், திரு K. குணபாலசிங்கம் (பிரதி அதிபர்), செல்வன் தா. தவமன்னன் (தலைவர்), திரு கா. சந்திரபாலன் (அதிபர்) செல்வன் கு. பாலமுருகன் (செயலாளர்), திரு சி. க. இந்திரராசா (மன்றப்பொறுப்பாசிரியர்), செல்வி S. சின்னத்துரை (மன்றப்பொறுப்பாசிரியர்).

நிற்பவர்கள் இடமிருந்து வலம்:-

செல்வி K. சைலாஜினி, (ஆண்டு 9 வகுப்புப் பிரதிநிதி) செல்வி T. நல்லீஸ்வரி (உப தலைவர்), செல்வி S. விஜிதா (உபசெயலாளர்), செல்வி N. இன்பமலர் (பத்திராதிபர்) செல்வி N. ஜெகதீஸ்வரி (பொருளாளர்) செல்வன் N. சத்தியரூபன் (உபபத்திராதிபர்) செல்வன் S. திலகரத்தினம் (94ம் ஆண்டு வகுப்புப் பிரதிநிதி) செல்வன் S. ஸ்ரீதரன் (95ம் ஆண்டு வகுப்புப் பிரதிநிதி)

வருகைதராதோர்:-

செல்வன் B. ஸ்கந்தராசா (ஆண்டு 10 வகுப்புப் பிரதிநிதி) செல்வன் S. செந்தில்க் குமரன் (ஆண்டு 11 வகுப்புப் பிரதிநிதி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் ஆலோசனைக்குழு




வணிக மாணவர் மன்ற நிர்வாகசபை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]



[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழிநீ யென்றும் வணிகத் துளிரே

### பண்டிதை, பொன். பாக்கியம் ஆசிரியை

வாழிநீ யென்றும் வணிகத் துளிரே
வையக மீதில் உன்புகழ் நிறீஇ
ஏழுலக கெங்கும் இசையது பரப்பி
இலங்கிடு மீழ நன்னா டதனில்
வடபா லுள்ள வளங்கள் நிறைபதி
சுழிபுர மென்னும் தொல்புகழ் பொற்பதி
அப்பதி அணங்கின் நன்னுதற் றிலகம்
விக்ரோரியா வென்னும் விளங்கு கல்லூரி
கல்வியிற் கலைகளில் கவினார் துறைகளில்
எல்லொளி யென்ன எங்கும் விளங்கிடும்
அன்னை அவளின் அழகிய உதரத்
துதித்த நன்முத்தம் பற்பல மன்றம்
அவற்றுள் ஒன்றே அறிவுடை வணிக
மன்றமென் றியம்பி மகிழ்வது கொள்வோம்
திரைகட லோடியும் திரவியம் தேடிய
மரபது கிளக்கும் மாண்புகள் பற்பல
அத்தகு மரபுக் கல்வியை இன்று
மெத்தவும் முறையாய்ப் போதனை செய்து
கணக்குடன் வாழ்ந்து பொருளா தார
வளமதை விருத்தி செய்திட வழிகள்
வகுத்திடும் எங்கள் வணிக மன்றே
உன்னரு மகாரின் கன்னிப் படைப்பாம்
வணிகத் துளிரை வளர்த்தே நன்கு
கொப்பும் கிளையும் குலுங்கிடும் பூவும்
காயும் கனியும் காணவே விழைந்தோம்
எங்கள் எண்ணம் இனிதே சிறந்து
எல்லோர் கரத்திலும் வணிகத் துளிர்தான்
தவழ்ந்தே அறிவுத் திறனை வளர்த்திட
எங்கள் கல்லூரி இதயத் திருந்து
மன்றுள் ஆடிய நட்டம் பயிலும்
சிவகாமி சமேத நடேசரை
வாழ்த்தி என்றும் வழிபடு வோமே.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. ----------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோக்கிய நாணயமாற்று வீத ஒப்பந்தங்கள்
# FORWARD EXCHANGE CONTRACTS

அந்நிய நாணயக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவோர் தமக்குத் தேவையான அந்நியச் செலாவணியை பெறும் வகைகளில் ஒன்றே முன்னோக்கிய நாணயமாற்று வீத ஒப்பந்தமாகும். வாடிக்கையாளர் ஒருவர் வங்கியுடன் எதிர்காலத்தில் அந்நிய செலாவணியில் நடைபெற இருக்கும் ஒரு கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைக்கு தேவையான நாணயமாற்று வீதத்தை ஒப்பந்தம் ஒன்றின் மூலம் முன்னரே தீர்மானித்துக் கொள்ளும் ஒரு நடவடிக்கையே முன்னோக்கிய நாணயமாற்றுவீத ஒப்பந்தம் எனப்படும். இங்கு எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் நாணயமாற்று வீதத்தை முன்னரே தீர்மானிப்பதால் முன்னோக்கிய நாணய மாற்றுவீத ஒப்பந்தம் எனப்படுகிறது. இலங்கையில் நடைமுறையில் இருக்கும் மிதக்கும் நாணய மாற்று வீதத்தினால் ஏற்படும் ஆபத்துக்களை (Risks) தவிர்த்துக் கொள்வதற்கேற்ற ஒரு சிறந்த முறையாகும்.

முன்நோக்கிய நாணயமாற்று வீதத்தை ஒப்பந்தம் மூலம் தீர்மானித்துக் கொள்ள வாடிக்கையாளர் விரும்பும் போது வங்கியாளர் அவருக்கு ஒரு நாணயமாற்று வீதத்தை குறிப்பிடுவர். வாடிக்கையாளர் திருப்தியடைந்தாலே ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படும். இவ்வாறு பூர்த்தி செய்யப்படும் ஒப்பந்தங்கள் வழமையில் 3 வகையாகக் காணப்படுகிறது.

**1) நிலையான ஒப்பந்தங்கள் - Fixed Contracts**

வாடிக்கையாளர் தனது கொடுக்கல் அல்லது வாங்கல் நடவடிக்கை எந்த தினத்தில் நடைபெறும் என்பதை திட்டவட்டமாக குறிப்பிடுதல் நிலையான ஒப்பந்தம் எனப்படும். இங்கு எதிர்காலத்தில் நடவடிக்கை இடம்பெறும் தினம் நிலையாகக் குறிப்பிடப் பட்டிருக்கும்.

உதாரணம்:- 9 - 12 - 94 அன்று வாடிக்கையாளர் வங்கியிடம்தான் 9 - 3 - 95 அன்று 50,000/- அமெரிக்க டொலர் தருவார் என்றும் அதற்குரிய நாணய மாற்று வீதத்தை ஒப்பந்தத்தின் மூலம் தீர்மானிக்க விரும்புவதாகக் கேட்கிறார். வங்கியாளர் ஒரு நாணய மாற்று வீதத்தை குறிப்பிடுவர். அதற்கு வாடிக்கையாளர் திருப்தியடைந்தால் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யலாம். பின் 9 - 3 - 95ல் வாடிக்கையாளர் குறிப்பிட்ட டொலர்ப் பெறுமதியை கையளித்து வங்கி குறிப்பிட்ட நாணயமாற்று வீதப்படி பெறுமதியை பெறுவர்.

இதன்படி குறிப்பிட்ட தினத்தில் நடவடிக்கை இடம்பெற வேண்டும் என்பதும் அத்தினம் வங்கியின் வேலைநாளாக இருக்கவேண்டும் என்பதும் முக்கியமாகும். நடவடிக்கை இடம் பெறும் தினத்தில் (9 - 3 - 95) நாணய மாற்று வீதம் கூடினாலோ அன்றிக் குறைந்தாலோ ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட நாணயமாற்று வீதத்தை வங்கி வழங்கவேண்டும். என்பதுடன் வாடிக்கையாளரும் அதை ஏற்கவேண்டும்.

**2) விருப்பத்துக்குரிய ஒப்பந்தம் - Optional Contracts.**

வாடிக்கையாளர் தனது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் எத்தினத்தில் நடைபெறும் என்பதைக் குறிப்பிடாது ஒப்பந்தம் செய்து கொள்ளும் தினத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து இன்னொரு தினத்தை குறிப்பிட்டு அவ்விரு தினங்களுக்கும் இடையில் ஏதாவது ஒரு நாளில் நிறைவேற்றுவதாக குறிப்படுதல் விருப்பத்திற்குரிய ஒப்பந்தம் எனப்படும்.

உதாரணம்:-

வாடிக்கையாளர் 9 - 12 - 94ல் வாடிக்கையாளர் வங்கியிடம் 9 -12- 94 லிருந்து 9 - 3 - 95 வரை ஏதாவது ஒரு நாளில் குறிப்பட்ட டொலர்ப் பெறுமதியை தருவார். அல்லது வாங்குவார் என்றும் அதற்குரிய நாணய மாற்று வீதத்தை ஒப்பந்தம் மூலம் தீர்மானித்தல் இதுவாகும். இங்கு வாடிக்கையாளர் நடவடிக்கை இடம்பெறும் தினத்தை தனது விருப்பத்தின் படி தெரிவு செய்வதால் விருப்பத்துக்குரிய ஒப்பந்தம் எனப்படும். இங்கு இவர் குறிக்கப்படும் தினம் மூன்று மாதங்களாகக் காணப்படுவதால் இது 3 மாத விருப்பத்துக்குரிய ஒப்பந்தம் எனப்படும்.

3) **நிலையானதும் விருப்பத்துக்குரியதுமான ஒப்பந்தம்**
**Fixed Cum Optional Contract**

வாடிக்கையாளர் தனது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் நடைபெறாது எனவும் அதன் பின் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதி யிலுள்ள ஏதாவது ஒரு தினத்தில் நடைபெறும் எனவும் குறிப்பிடின் அது நிலை யான விருப்பத்துக்குரிய ஒப்பந்தம் எனப்படும். அதாவது ஒப்பந்தம் செய்யப்படும் காலப்பகுதியிலிருந்து ஒரு நிலையான காலப்பகுதியின் பின்னர் விருப்பத்திற்குரிய தினம் தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் நிறைவேற்றப்படும்.
உதாரணமாக ஒப்பந்தகாலம் 9 - 12 - 94ல் இருந்து 9 - 3 - 95 வரை காணப்படின் 9 - 12 - 94 ல் இருந்து 9 - 2 - 94 வரை நடவடிக்கை இடம் பெறாது எனவும் 9 - 2 - 94ல் இருந்து 9 - 3 - 95 வரை ஏதாவது ஒரு தினத்தில் நடவடிக்கை இடம்பெறும் எனவும் குறிப்பிடப்படும். இது 2 மாதம் நிலையானது, 1 மாதம் விருப்பத்திற்குரியது என அழைக்கப்படும்.

இத்தகைய ஒப்பந்தங்களை வாடிக்கையாளர் தனது வங்கியூடாக அல்லது நேரடி யாக தலைமை அலுவலகத்தில் உள்ள வெளிநாட்டு நாணயப் பிரிவுடன் தொடர்பு கொண்டு தீர்மானிக்கமுடியும். ஒப்பந்தம் மேற்கொள்ளும்போது ஒப்பந்தம் மேற்கொள் ளும் நாணய வெளிநாட்டுப் பெறுமதி, எந்த நாணயம், ஒப்பந்த காலப்பகுதி எவ்வகை யான ஒப்பந்தம், நாணயத்தை வாங்க விரும்புகிறாரா அல்லது கொடுக்க விரும்புகிறாரா போன்ற விபரங்களை வங்கியில் அதற்குரிய இணைப்பிரதிகளில் நிரப்பி மூலப்பிரதியில் 10/- முத்திரையிட்டு அதன்மேல் ஒப்பமிட்டு வங்கியிடம் கையளிக்க வேண்டும். பின் வங்கியானது அவரது அறிவுறுத்தலின்படி காலப்பகுதியினை கருத்தில்க் கொண்டு நிலை யான காலம், முடிவுறும் திகதி ஒப்பந்தம் காலாவதியாகும் திகதி ஒப்பந்த இலக்கம் நாணயமாற்றுவீதம் என்பவற்றை அப்படிவத்தில் பூர்த்திசெய்து ஒப்பமிட்டு இணைப் பிரதியை வாடிக்கையாளருக்கு அனுப்பி வைக்கும் வாடிக்கையாளர் ஒப்பந்தத்தை பிரயோகிக்க விரும்பும்போது ஒப்பந்த இலக்கத்தை சுட்டிக் காட்ட வேண்டும்.

நாணய மாற்று வீத ஒப்பந்தங்கள் ஒப்பந்தம் செய்யும் திகதியிலிருந்து 6 மாதம் வரை செய்யப்படலாம். 6 மாதங்களுக்குள் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒன்றை (உதாரணம்: 3மாதம் 4 மாதம் நீடிக்க விரும்பின் ஒப்பந்தம்காலாவதியாகும் திகதிக்குமுன் எழுத்து மூல மான கோரிக்கை ஒன்றை வங்கிக்கு விடுவதுனூடே நீடிக்கமுடியும். ஆனால் நாணய மாற்று வீதம் திரும்பத் தீர்மானிக்கப்படும். 6 மாதத்திற்கு மேலே நீடிக்கவிரும்பின் அதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் வர்த்தக வங்கிக்கு கிடையாது வாடிக்கையாளர் நீடிக்க விரும்பின் அதற்கான காரணத்தை விளக்கி மத்திய வங்கிக்கு விண்ணப்பித்து அதன் அனுமதியுடன் நீடிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர் ஒருவர் செய்து கொண்ட ஒப்பந்தம் ஒன்றை நிறைவேற்றாது விடின் அதனால் வங்கிக்கு ஏற்பட்ட நாணயமாற்று வீத இழப்புத் (Loss in Exchange தொகை முழுவதையும் வாடிக்கையாளர் செலுத்த வேண்டும். அன்றேல் அவரது அனுமதியின்றி அவரது கணக்கில் இருந்து பற்று செய்யும் அதிகாரம் வங்கிக்குண்டு முன்னோக்கிய நாணய மாற்றுவீத ஒப்பந்தங்களால் வாடிக்கையாளருக்குப் பல்வரும் நன்மைகள் கிடைக்கின்றன.

1) தளம்பல் நாணயமாற்று வீதத்தினால் ஏற்படும் ஆபத்துக்கள் தவிர்க்கப்படும்

2) வாடிக்கையாளர் எதிர்காலத்தில் நடைபெறப்போகும் ஒரு நடவடிக்கைக்கு தான் எவ்வளவு தொகை செலுத்த வேண்டி வரும் அல்லது தான் எவ்வளவு தொகை பெற்றுக் கொள்ள வேண்டிவரும் என்பதை முன் கூட்டியே அறிய உதவும்.

3) மேற்குறிப்பிட்டது போல் அவருக்கு கிடைக்கப் போகும் அல்லது செலுத்த வேண்டிய தொகை தெரியப்படின் லாபம் அல்லது நட்டம் அறியலாம்

4) முன்குறிப்பிட்டபடி லாபம் / நட்டத்தை தெரிந்து கொள்வதால் அவர் தனது பாதீடுகளை காசு தேவைகளை முன்கூட்டியே திட்டமிடக் கூடியதாக இருக்கும்.

5) ஏற்றுமதியாளர் ஒருவர் எனின் அவர் தனக்கு கிடைக்கப்போகும் தொகையை அறியக் கூடியதாக இருப்பதோடு அதற்கு ஏற்றபடி தன்னிடமிருந்து இறக்குமதி செய்யும் வெளிநாட்டு இறக்குமதியாளருக்கு விலைக்குறிப்பீடுகளை செய்து அனுப்ப முடியும் இதேபோல் வாடிக்கையாளர் இறக்குமதியாளர் எனின் தான் செலுத்த வேண்டிய தொகையை அறியக்கூடியதாக இருப்பதால் தனது வெளிநாட்டு ஏற்றுமதியாளரின் விலைக் குறியீடுகளை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ அவரால் முடியும்

இவ்வாறான நன்மைகள் காணப்படுவதால் முன்னோக்கிய நாணயமாற்று சிறந்ததாக காணப்படுகிறது.

(ஆதாரம்–இலங்கைவங்கிச் செய்தி)

செல்வி வி. ஷ்ஜிதா
ஆண்டு 13 (94) வர்த்தகம்.

விலைகொடுத்து ஒரு புத்தகத்தை வாங்குவதன் மூலம் விலை மதிகக முடியாத செல்வத்தை வீட்டுக்குக் கொண்டு செலகின்றீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகக் கல்வியின் முக்கியத்துவம்

உலக நாடுகளிடையே பல்வேறுபட்ட கல்வி நோக்கங்கள் முன்வைக்கப்பட்டு, அதற் கேற்ற முறையில் மாணவர்களை விருத்தி செய்கின்றமையை அறிய முடிகின்றது. மக்கள் சீனா, யப்பான், அமெரிக்க ஐக்கியக் குடியரசு, ஐக்கிய ராச்சியம் முதலிய நாடுகள் பலவும் தனியார் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு சமூக அபி விருத்தி, தேசிய அபிவிருத்தி போன்ற அம்சங்களைக் கட்டி எழுப்புவதையே தங்கள் கல்வி நோக்கங்களாகக் கொண்டுள்ளன. ஆனால் இலங்கையில் காலத்திற்கு காலம் மாற்றமுறும், சமூக மாற்றங்களுக்கு ஏற்ப கல்வி நோக்கங்களும் அறிக்கையிடப்பட்டிருத் தலை நாம் காணலாம். இலங்கையில் 1981 இன் ''வெள்ளை அறிக்கையில்'' கல்வி நோக்கமாகக் குறிப்பிடப்பட்டதன் சாரமாக ''பிள்ளையின் வளர்ச்சி இயல்பாக ஏற்பட இடமளித்து, அதன் மூலம் பிள்ளையைச் சமூகத்திற்கும், சமூகத்தின் தொழில் ஒன்றிற் கும் பொருத்தப்பாடுடைய முழுமனிதனாக்குதல்'' என்பது முன்வைக்கப்பட்டுள்ளது. இவ் வாறான கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகளை நிறைவேற்றும் குறிக்கோளாக முகாமைத் துவம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் போன்ற கல்வித் துறைகளில் மாணவர்களைப் பயிற்றுவித்தலில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தலையை (விவேகத்தை) மாத்திரம் வளர்த்துக் கொள்ளும் நூற்கல்வியை மட்டும் பெறாது, காந்திமகானின் கூற்றுக்கிணங்க தலை, இதயம், கைகள் போன்றவற்றையும் ஒருங் கிணைத்துச் செய்யக்கூடியதான தொழில் நுட்பம் சார்ந்த வர்த்தகக் கல்வியின் இன்றிய மையாமை உணரப்பட்டது. ''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'' என்னும் தமிழ் மொழி கூட, வணிகக் கல்வியின் சிறப்பை நமக்குத் தொன்றுதொட்டே உணர்த்தி நிற் கின்றது எனலாம்.

எமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தக் கூடிய ஒரு முத லீடாக வர்த்தகக்கல்வி விளங்குகின்றது. இவ் வர்த்தகக் கல்வியானது மாணவர்களது அறிவு, திறன் மனப்பாங்குகளை வளர்க்கக்கூடியதாக இருப்பதால் தேசிய ரீதியில் இலங்கையின் பொருளாதார வளங்களை உபயோகித்து அதற்கேற்றதான திட்டங் களுக்குத் தம்மை ஈடுபடுத்தி உச்சப்பயனை ஈட்டிக் கொள்ள வாய்ப்பை நல்குகின்ற தெனலாம். பாடசாலையில் பொதுக் கல்வியைப் பெறும் போதும், உயர்கல்வியைப் பெறும் போதும், பாடப் பிரிவுகளைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பங்களிலும் மாணவர்கள் பல தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். இன்றைய காலகட்டத்தைப் பார்ப்போமானால் பொதுக்கல்வியிலும் சரி, உயர்கல்வியிலும் சரி, பாடசாலையில் வர்த்தகம் கற்கும் மாண வர்களின் தொகை வருடாவருடம் அதிகரித்துக்கொண்டு வருகின்றதை அவதானிக்கலாம். யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உயர்வகுப்பில் வர்த்தகம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆறு ஆண்டுகளில் 30% த்திலிருந்து 60% மாக அதிகரித்துக் காணப்படுகின்றமை நோக்குதற்குரியதாகும். அதற்கான காரணங்களில் முதன்மை பெறுவது. மாணவர்கள் நாட்டின் பொருளாதாரத் தேவையை உணர்ந்து அதற்கேற்ற தொழிலைப் பெறும் குறிக்கோளை முன்வைத்தே தமது கல்வி இலக்கை அடைய முற்படுகின்றனர். என்றால் மிகையாகாது. இதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய வெட்டுப்புள்ளியின் (வர்த்தகத்துறை) அளவு அதிகரித்துச் செல்வது குறிப்பிடத்தக்கது.

பொதுக்கல்வியில் வர்த்தகவியல் கற்கும் மாணவர்கள் கணக்கியல், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, செயலாளர் நடைமுறை, விற்பனைத்துவம், கூட்டுறவு முதலிய பாடங் களைக் கற்பதன் மூலம், பொதுக்கல்வியை முடித்து, உயர்கல்வியைத் தொடராத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்திலும், கணக்கு எழுதுவினைஞனாகவோ, முகாமையாளராகவோ, கணக்குப் பதிவாளராகவோ, சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளராகவோ, தனியார் அரசாங்க நிறுவனங்களில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருப்பதை நடைமுறையில் காணலாம். எனவே, பொதுக் கல்வியில் தொழில் நுட்பப் பாடங்களை மாணவர்கள் கற்கும்போது செயல்முறை ரீதியாகக் கற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. கற்றல் கற்பித்தல் செயற்பாடானது பாடசாலையில் மட்டும் அமையாது சமூகத்துடன் தொடர்பு கொண்டு நடைமுறை ரீதியான செயற்பாடுகளிலும் கற்றல் நிகழ்ச்சிகள் இடம்பெற, கல்வியின் இலக்கை அடைய நூற்கல்வியை மட்டும் கொடுக்காத கல்வியாக வர்த்தகக் கல்வி இன்று அமைந்திருப்பதைக் காணலாம். இதற்கு ஏற்றாற் போலவே, இக் கல்வி பயிலும் மாணவர்களது தொழில் கூட்டமாக வகுப்பறையில் மட்டுமன்றி, சந்தைகள், கூட்டுறவு நிலையங்கள், வங்கிகள், திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது. கற்ற அணியினரும் பாடசாலையை விட்டு விலகியதும் மனம் சோராது தொழில் நிலையங்களில் தொழில் பெற்றுக்கொள்ளச் சுலபமாக அமைவதுடன் தொழிலை நாடிச் செல்லவும் இவ் வர்த்தகக் கல்வி கைகொடுத்துதவுகின்றது. அத்துடன் சுய தொழிலில் ஈடுபடவும் உந்து சக்தியாக வர்த்தகக்கல்வி துணைபுரிகின்றது. இவ்வாறு வர்த்தகக் கல்வி துணைபுரிவதற்கு இடைநிலைப் பாடசாலைகளில் வர்த்தகக் கல்வி கற்பித்தலில் கட்புல செவிப்புல சாதனங்களின் பங்களிப்பும் காரணமாக அமைகின்றது.

கற்பித்தல் - கற்றல் செயற்பாட்டின்போது கற்பித்தல் சாதனங்களின் முக்கியத்துவம் முன்னரிலும் பார்க்க இன்று வெகுவாக உணரப்பட்டுள்ளது. மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் மாத்திரம் பூரணமாகக் கற்றுக்கொள்ள முடியாதென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மாணவர்களை நற்பிரசையாக சமூக நீதி உணர்வுடையவராக, பொருளாதார வளமுடைய ஒருவராக ஆக்குவதற்கான ஆலோசனை, வழிமுறைகள் ஆகியனவும் அவசியமாகிறது. ஏனெனில் கண், காது, மூக்கு, நாக்கு, சருமம் எனும் ஐம்பொறிகளினூடாக நாம் கற்றல் அனுபவங்களைப் பெறுகிறோம். அது மட்டுமல்ல மேற்படி புலன்களைத் தனித்தனியாகப் பயன்படுத்திப் பெறும் அனுபவங்களிலும் பார்க்க, ஒரு சில புலன்களின் ஒன்றிணைப்பினால் கூடிய பயனுள்ளதும், பிழையற்றதும், நிலையானதுமான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

ஒரு புலனுறுப்பினூடாகப் பெறும் அனுபவத்தை மற்றொரு புலனுறுப்பினூடாகப் பெறுவது மிகவும் கடினமாகும். சாதாரணமாக அப்பிள் பழத்தின் சுவை பற்றி ஒருவர் விபரிப்பதை எந்தளவில் செவிமடுத்த போதிலும் அதனைச் சுவைத்தறியும் வரை அதன் இனிமையை உணர முடியாது. அது போன்றே ஒரு பூவினது இதழின் மென்மையை உணர்வதற்கு அதனைத் தொட்டேயாக வேண்டும். மல்லிகையை முகர்வதன் மூலமே அதன் நறுமணத்தை அறியலாம். ஒரு பொருளின் அமைவைத் தெளிவாக்கிக் கொள்ள, அதனைக் கண்களால் பார்த்தல் வேண்டும். ஆகவே, கசடறக் கற்பதாயின் கற்றல் நடவடிக்கைகளின் போது பொருத்தமான புலனுறுப்புகளினூடாகக் கற்றல் அனுபவங்களைப் பெறல் வேண்டும். கற்றல் கற்பித்தல் நுட்ப முறைகள் விருத்தியடைவதற்கும் இதுவே காரணமாயமைகிறது.

எந்த ஒரு துறையை எடுத்தாலும் அத்துறைகள் வெறும் கல்வி அறிவிற்கும் பதவிக்கும் மாத்திரமாகவே அமைந்து விடுகின்றது. ஆனாலும் எத்துறையும் பின்னிப் பிணைந்திருப்பது வாழ்க்கை ஓட்டத்திலே தான் அவ்வாழ்க்கை ஓட்டத்தைச் செவ்வனே நடாத்தி வரவிற்கேற்ப செலவை மேற்கொண்டு, தனது கல்வி அறிவு மட்டத்திற்கு ஏற்பத் தொழில் வாய்ப்பைப் பெற்றுச் சீரான வாழ்க்கை வாழ வழிவகுப்பது வர்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக் கல்வி ஒன்றேதான் என்று கூறுதல் சாலவும் பொருந்தும். அதே போன்றுதான் வர்த்தகக் கல்வியில் கட்புல - செவிப்புல சாதனங்களின் பயன்பாடும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது கட்புல செவிப்புல சாதனங்களால் அடையப்படும் பயன்களாவன.

1) கற்றல் வேகமடைகிறது.

2) மாணவர்களது கவனத்தை ஈர்க்கின்றது.

3) மாணவர்களைச் செயலூக்கத்துடன் இயங்கச் செய்கிறது.

4) சிக்கலான எண்ணக்கருக்களையும் எளிதில் விளங்க முடிகிறது. (உதாரணமாகக் காசோலையைப் பயன்படுத்திக் கற்கும் போது அதனை இலகுவாக இனம் காண முடிகின்றது)

5) மாணவர்கள் புத்தூக்கத்துடன் பாடங்களைக் கற்க வழிவகுக்கின்றது.

6) கற்றல் ஒரு விருப்புக்குரிய செயலாக மாறுவதுடன் புதிய நடைமுறை விடயங்களை அறிய முடிவதோடு அப்பாடங்களில் மிகுந்த தெளிவும், அவை நீண்ட காலம் மனதில்நிலைத்திருக்கக்கூடியதாகவும் அமைகிறது.(உதாரணமாக காசோலை பணம் எனும் பகுதியைப் படிக்கும் போது படம்கிறப்பட்டிருப்பதைவிட அக்காசோலையை நேரில் பார்த்து நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்கும் முறை, படிவம் நிரப்பும் முறை, நடைமுறைக் கணக்கு இலக்கம், கோடிடல் முறைகள்,புறக்குறிப்பிடல், கையொப்பமிடல், காசோலையைப் பூரணப்படுத்தும் முறை, மற்றும் தாள் நாணயத்தில் காந்த மயமாக்கப்பட்ட இடம்,வெவ்வேறு நாட்டு நாணயங்கள் போன்றவற்றை ஐயமின்றி அறிந்து கொள்ள முடிகின்றது.)

7) சொற்களின் மூலம் பெறும் விளக்கத்தைவிட ஆழமான விளக்கத்தைப் பெற முடிகின்றது. (உதாரணமாக நாம் வங்கியில் ஓர் நடைமுறைக் கணக்கை ஆரம்பிக்க வேண்டுமானால் தயக்கமின்றி மனத்துணிவுடன் வங்கிக்குச் சென்று படிவங்கள் நிரப்பும் முறையை, மற்றவர்களின் உதவியை நாடாமல் நாமே பூரணப்படுத்த முடிகின்றது )

8) மொழித்திறன், சொல்வளம், பேச்சுத்திறன் என்பவற்றை விருத்தி செய்ய முடிகின்றது. (உதாரணமாக - வங்கி, காப்புறுதிக் கூட்டுத்தாபனம், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை நேரில் பார்வையிடுவதன் மூலம் அவற்றின் நடைமுறைச் செயற்பாடுகளை நேரில் அவதானித்துக் கொள்வதனால், காசேடு கணக்கியல் ஐந்தொகை, வருமானச் செலவுக் கணக்கு, பேரேடுகளின் இரட்டைப் பதிவுகள், பேரேட்டைப் பேணும் முறைகள் என்பவற்றை மிகவும் இலகுவாகக் கற்றுக் கொள்ள முடிவதோடு இந்நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடன்கலந்துரையாடுவதன் மூலம் மற்றவர்களுடன் பழகும் தன்மையும் மொழித்திறன், சொல்வளம் பேச்சுத் திறனையும் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது.

9) ஆசிரிய - மாணவ தொடர்புகள் விருத்தியடைகின்றது. அதாவது, 'உபகரணங்களைக் காண்பித்து நேரில் விளக்கம் கொடுக்கும்போது ஆசிரியரிடம் மாணவர்கள் வினாக்களை வினாவியும், உபகரணங்கள் தயாரிக்கும் போது ஆசிரிய - மாணவர்கள் சேர்ந்து செயலில் ஈடுபடுவதால் ஆசிரிய - மாணவ தொடர்பு விருத்தியடைகின்றது, இது போன்ற கல்விச் சுற்றுலாக்களை மேற்கொள்ளும் போது (துறைமுகம், காப்புறுதி நிறுவனம், வங்கி, உயர்சந்தை, கிளைக்கடைகள் என்பவற்றைப் பார்வையிடல்) ஆசிரிய மாணவ தொடர்பு விருத்தியடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) நேரத்தைச் சிக்கனமாகச் செலவிட வழிகிடைக்கின்றது. (உதாரணமாக பாட மூலம் சில விடயங்களை விளங்கிக் கொள்ள நீண்டகாலம் எடுக்கும். இது ஆசிரிய ருக்கும், மாணவருக்கும் சிரமமாகும். ஆனால் சிக்கலான பாடப்பகுதியை உப கரணங்களை நேரில் சென்று பார்வையிட்டு விளங்கிக் கொள்வதனால், நேரத் துடன், நீண்ட காலத்திற்தும் மனதில பதிந்துவிடுகிற து)

11) எத்தரத்திலுள்ள மாணவர்களும் இலகுவாக விளங்கிக் கொள்ள வழிவகுக்கின்றது. (உதாரணமாக, மீத்திறன் மாணவர் நடுத்தர மாணவர், மிகக் கீழ்நிலையிலுள் ளோர்) எந்த வகையிலுள்ளோருக்கும் உபகரணங்களைப் பயன்படுத்தி விளக்கம் கொடுக்கும்போது மிக இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இவ்வாறு நோக்கில் கற்பித்தல் - கற்றல் சாதனங்களால் ஏற்படும் பயன்கள் அளப் பரியதாகும்.

இத்தகைய வர்த்தகக் கல்வியானது வாழ்க்கைக் கல்வி என்பதற்கிணங்க மாணவனை இட்டுச் செல்வதோடு, கட்புல-செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்துவதனால் மாண வர்கள் சலிப்பு ஏற்படாமல், அவர்களது கவனத்தைத் திசை திரும்பும் செயல்ரீதியான தன்மை கொண்டமைவதோடு, இன்று நாடளாவிய ரீதியில் (இவ் வர்த்தகக் கல்வி யானது) மெருகூட்டப்பட்ட நிலையில் வீறுநடை போடுவதைக் காணமுடிகின்றது. எமது நாட்டின் கல்வியின் நோக்கை அடையும் விதத்தில் வர்த்தகக் கல்விபாடசாலை களில், பல்கலைக்கழகங்களில், தொழில்சார் நிறுவனங்களில் செயல் முறையுடன் இணைந்து கற்பிக்கப்படுவதால் அது மாணவர்களை நாட்டின் அபிவிருத்திப் பாதைக்கு இழுத்துச் செல்கின்றது என்று கூறினால் மிகையாகாது. வர்த்தகக் கல்வியானது மிகவும் இலகுவானதும், எமது அன்றாட வாழ்வில் சந்திக்கும் வணிகக் கருமங்கள்பற்றி யும், நாட்டின் பொருளாதார நிலைமைகள் (ஏற்றுமதி, இறக்குமதி, அந்நியச்செலாவணி நிலை) பற்றியும், தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும், வியாபார அமைப்புகள் [தனிவியாபார, மொத்த, சில்லறை) பங்குடமை, கம்பனி, கூட்டுத்தாபன] பற்றியும், இதனால் நாடுகள் கொண்டுள்ள உறவுகள் பற்றியும், எந்த ஒரு கல்வித்துறையிலும் அனுபவிக்காத, அறிந்திருக்காத பல்துறைக் கற்கை விடயங் களையும், பூரணமாக அறிந்து ஒரு தொழிலையோ, தனது வாழ்க்கையையோ செவ்வனே செயற்பட வைக்க உதவுகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இத்தனைக்கும் காரணம் வர்த்தகக் கல்வியில் கட்புல - செவிப்புல சாதனங்களின் பங்களிப்பும் அதிகரித் தமையுமாகும்.

எனவே, வர்த்தகக் கல்வியானது ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்று இருப்பது மாத்திரமன்றி, நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கின்றது. நாடு தன்னிறைவடைய வழிவகுத்துக் கொடுப்பதோடு, நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் மாற்றமடையும் போது, தொழில் நுட்பத் துறையில் முன்னேற்றம் ஏற்படும்போது, வணிகச் சூழலிலும் மாற்றமும் அபிவிருத்தியும் ஏற்பட்டு, அம்மாற்றத்தின் விளைவாக அறிவை நவீனப்படுத்தி, தொழிலைச் சீராக அமைத்துக் கொள்ள வர்த்தகக்கல்வி உறுதுணையாகின்றது. அதுமாத்திரமன்றி செயற்பாட்டுடன் கூடிய கல்வியாக இது அமைவதனால் உயர்கல்வியை அல்லது கல்வித் துறையை, மேலதிக, கல்வியைப் பெற்றுக் கொடுப்பது மாத்திரமல்லாமல், தொழில் ரீதியாக பிரவேசிக்கும் போது அத்தொழில்களை வெற்றிகரமாக எதிர்வு கொள்வதற் கும், சாதாரண பிரஜையாக அவருக்கு நாளாந்த வாழ்க்கையை நிறைவேற்றுவதற்கும் வழிவகுக்கின்றது. நாட்டின் செயற்பாட்டு ரீதியான வாணிபத் தொழிற்பாடுகளைக் கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமாக இவ் வர்த்தகக் கல்வி அமைவது - மாத்திரமல்ல, எதிர் காலத்தில் பகுத்தறிவுள்ள நுகர்வோரையும், புத்தியுள்ள பிரஜையையும், சுய தொழி லொன்றை இனங்காண வழிகாட்டியாகவும், தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்வு கொள்ளும் திறமையுள்ள பிரஜையையும் உருவாக்கி உலகை உண்மை வாழ்க்கைக்குத் திருப்புவதிலிருந்து இதன் முக்கியத்துவம் தெட்டத் தெளிவாக விளங்குகின்றது.

செல்வி சின்னத்துரை சுதந்திராதேவி
ஆசிரியை, வர்த்தகப் பட்டதாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைப்படுத்தல் முகாமையில் நுகர்வோர் நடத்தையின் முக்கியம்

## 1. 1 சந்தைப்படுத்தல்

நுகர்வோருக்கு எத்தகைய பொருட்கள் சேவைகள் தேவை என அறிந்து உற்பத்தி வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுவதுடன் விற்பனையின் பின் சேவைகளையும் உள்ளடக்கியதாக சந்தைப்படுத்தல் காணப்படுகிறது. சந்தைப்படுத்தல் நுகர்வோர் திருப்தியுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. நுகர்வோர் திருப்தியினை மேற்கொள்ளும் முகமாக மேற்கொள்கின்ற தொழிற்பாடுகள் சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகளாகக் காணப்படுகிறது.

## 2. 1 சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகள்

1) சந்தை ஆராய்ச்சி
2) வாங்குதல் / உற்பத்தி செய்தல்
3) தரம் பிரித்தல்
4) பொதி அமைத்தல்
5) வியாபாரக் குறியிடல்
6) விலையிடல்
7) களஞ்சியப்படுத்தல்
8) போக்குவரத்து
9) விற்பனை
10) மேம்படுத்தல்
11) விற்பனையின் பின் சேவைகள்

## 3. 1 சந்தைப்படுத்தலும் விற்பனையும்

சந்தைப்படுத்தல் பரந்த தொழிற்பாடுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. ஆனால் விற்பனை அதில் ஒரு தொழிற்பாடாகக் காணப்படுகிறது.

சந்தைப்படுத்தல் நுகர்வோர் திருப்தியினை ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டது. ஆனால் விற்பனை இலாப நோக்கம் கொண்டதாகவும் காணப்படுகிறது.

சந்தைப்படுத்தல் விற்பனையுடன் முடிவடையாமல் விற்பனையின் பின் சேவைகளையும் உள்ளடக்கியதாகவும் காணப்படுகிறது ஆனால் விற்பனையானது விற்பனையாளனிடம் இருந்து பொருட்களின் உரிமையினை கொள்வனவாளருக்கு மாற்றுவதுடன் முடிவடைகிறது.

## 4. 1 நுகர்வோர் நடத்தை

நுகர்வோர் பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்யும் போது சந்தையில் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பது பற்றி விளக்குவதே நுகர்வோர் நடத்தையாகும் குறிப்பிட்ட சந்தையில் பொருட்கள் சேவைகளை தெரிவு செய்யும் போது எல்லா நுகர்வோரும் ஒரேமாதிரியாக நடந்து கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. இவர்களுடைய தெரிவினை கீழ்வருமாறு பல காரணிகள் நிர்ணயிப்பதனை அவதானிக்கலாம்,

## 4. 2 நாகரீகம்

நுகர்வோர் நடத்தையில் நாகரீகமும் அதிக தாக்கத்தினைச் செலுத்துகின்றது. இனம், பரதேசம், நாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நாகரீகமும் வேறுபடுகின்றது. இ நாகரீகம் பொருள் தெரிவில் ஆதிக்கம் செலுத்துகின்றது. ஒரு பகுதி மக்களுக்கு நாகரீகமாக தெரிகின்ற பொருள் இன்னொரு பகுதி மக்களுக்கு அநாகரிகமாக தெரியலாம் உதாரணமாக நகரத்தில் உள்ளவர்கள் தயாரிக்கப்பட்ட உடன் உணவு கொள்வனவில் அதிக நாட்டம் செலுத்தும் அதேவேளை கிராமத்து மக்களுக்கு இவ் உணவுக் கொள்வனவு அநாகரிகமானதாக அமையும்.

## 4. 3 மதக் கொள்கை

மக்கள் பின்பற்றுகின்ற மதக் கொள்கையும் நுகர்வோர் நடத்தையினை நிர்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிக்கிறது பொருட்கள் சேவைகளின் தெரிவில் இவை ஆதிக்கம் செலுத்துவதனை அவதானிக்கலாம். உதாரணமாக இந்துக்கள் உயிர்க் கொலையை தவிர்ப்பதனால் இறைச்சி கொள்வனவில் அதிகநாட்டம் செலுத்த மாட்டார்கள்.

## 4.4 சமூக வகைகளும் பழக்கவழக்கங்களும்

பொருட்கள் சேவைகள் தெரிவில் சமூக வகைகளும், பழக்கவழக்கங்களும் அதிக ஆதிக்கத்தினைச் செலுத்துகின்றது இதிலும் கீழ்வரும் பிரிவுகள் முக்கியம் பெறுகின்றது

### அ) வருமானம்:-

நுகர்வோர் பொருட்கள் சேவைகளை தெரிவு செய்யும் போது ஏனையோரில் இருந்து தம்மை உயர்த்தி வேறுபடுத்திக் காட்டமுனைவர். உதாரணம் ஒரு நிறுவனத்தில் பணிபுரிகின்ற வருமானம் கூடியவர்கள் உணவு விடுதிகளில் சாப்பிடுவதற்கு முனைவர். ஆனால் வருமானம் குறைந்த பணியாளர்கள் வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுகளைக் கொண்டு வந்து உண்பதனை அவதானிக்கலாம்.

### ஆ) கல்வி அறிவு:

பொருட்கள் சேவைகள் தெரிவு செய்யும் போது நுகர்வோரின் கல்வி அறிவும் அதிக தாக்கத்தினைச் செலுத்துகின்றது உதாரணம் மரக்கறிகளை கொள்வனவு செய்யும் போது கல்வி அறிவுள்ளவர்கள் சத்துணவில் அதிக கவனம் செலுத்துகின்றனர். கல்வி அறிவு குறைந்தவர்கள் ருசிகரமான மரக்கறிகளையே தெரிவு செய்கின்றனர்.

### இ) சொத்து அல்லது செல்வம்:-

கொள்வனவாளர்களின் சமூக அந்தஸ்துக்கு ஏற்பவும் நுகர்வோர் நடத்தை வேறுபட்டுக்காணப்படும். இதற்கு ஏற்ப பொருட்கள் சேவைகள் தெரிவு வேறுபடும் உ-ம் உயர் பதவியில் இருப்போர் போக்கு வரத்துக்கு காரை கொள்வனவு செய்யும் போது சாதாரண லிகிதர் பதவியில் இருப்போர் போக்குவரத்துக்கு சைக்கிள் கொள்வனவு செய்வதனை அவதானிக்கலாம்.

### ஈ) சமூக அமைப்பு:-

எவ்வாறான சமூகச் சூழலில் வாழ்கின்றார்கள் என்பதனைப் பொறுத்தும் நுகர்வோர் நடத்தை வேறுபட்டுக் காணப்படுகிறது. வேலைச் சூழல் நண்பர்கள், ஆரம்ப சமூக அமைப்பு ஆகியன நுகர்வோர் நடத்தையினை நிர்ணயிக்கின்றது. உ-ம் நண்பர்கள் ஒரேமாதிரியான ஆடைகள் தெரிவு செய்வதனை அவதானிக்கலாம்.

## 4.5 குடும்ப அமைப்பு

கொள்வனவாளர்கள் பொருட்கள் சேவைகளை தெரிவு செய்யும் போது குடும்பம் பின்பற்றுகின்ற சமயம், அரசியல் கொள்கை, தனி நோக்கம், குடும்ப அமைப்பு, குடும்ப உறவு என்பனவும் ஆதிக்கம் செலுத்துகின்றது உதாரணமாக குடும்ப உறவு சாதகமாக இருக்கும் போது கணவன் மனைவி ஒவ்வொருவரின் நலன்களிலும் கவனம் செலுத்தி காப்புறுதி செய்வதனை அவதானிக்கலாம்

## 4.6 நுகர்வோர் நடத்தையினை நிர்ணயிக்கின்ற சொந்தக் காரணி

நுகர்வோருடைய நடத்தையினை அவர்களது சொந்த விருப்பு வெறுப்புகளும் ஆதிக்கம் செலுத்துகின்றது. சொந்தக் காரணிகளாக கீழ் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

### அ) வயதும் வாழ்க்கை வட்டமும்:-

நுகர்வோரின் வயதை அடிப்படையாகக் கொண்டு அதாவது இளம் வயதினர், நடுத்தர வயது, வயோதிபநிலை போன்றனவும் நுகர்வோர் நடத்தையினை நிர்ணயிக்கின்றது.

### ஆ) தொழில்:-

மக்கள் மேற்கொள்கின்ற தொழிலும், அவர்கள் தெரிவு செய்கின்ற பொருட்கள் சேவைகள் தெரிவில் ஆதிக்கம் செலுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. உதாரணமாக மேல்மட்ட பணியாளர்கள் தரமான ஆடைகள் தெரிவிலும் கீழ்பட்ட பணியாளர்கள் தரம் குறைந்த ஆடைகள் தெரிவிலும் ஆதிக்கம் செலுத்துவர்.

**இ) பொருளாதாரம்:-**

பொருளாதார நிலைமையும் நுகர்வோருடைய பொருட்கள் சேவைகள் தெரிவில் அதிக ஆதிக்கம் செலுத்துகின்றது. நுகர்வோரின் சேமிப்பு பண்பு, நுகர்வு நுட்பம், சொத்துடமை, கடன் பெறும் வலு, ஆகியன ஆதிக்கம் செலுத்துகின்றது. உயர்ந்த சேமிப்பு பண்புகளை அதிகரிக்க நுகர்வு நாட்டம் குறையும்.

**ஈ) வாழ்க்கை முறை:-**

வருமானம் குறைந்தவர்கள் சிலர் தமது வாழ்க்கைத்தரம் உயர்வாகவுள்ளது என்பதனைக் காட்டவே விரும்புவர். இந்த மனோநிலைக்கு ஏற்ப பொருட்கள் சேவைகள் தெரிவு அமைந்திருக்கும்.

**உ) சமூக நடத்தையும் சொந்த நடத்தையும்:-**

நுகர்வோர் திறமை, சந்தர்ப்பத்திற்கு ஏற்பவும் சமூக உறவிற்கு ஏற்பவும், தம்மைத் தயாராக்கிக் கொள்ளக் கூடிய அளவிற்கு நுகர்வோர் நடத்தை வேறுபட்டுக் காணப்படும். இதற்கு ஏற்பவே பொருள்கள் சேவைகள் தெரிவில் அதிக நாட்டம் செலுத்துவர்.

உதாரணம்:-உயர் கல்வி நிறுவன மாணவர்கள் தமது நிலைமைக்கு ஏற்ப தரம் கூடிய விலை கூடிய, நாகரிகமான ஆடைகளை தெரிவு செய்வதனை அவதானிக்கலாம்.

**ஊ) உளவியல் ரீதியான காரணங்கள்:-**

பொருட்கள் சேவைகள் தெரிவில் நுகர்வோர் அடிப்படைத் தேவைகள், மனதில் ஏற்படும் எண்ணம், தெரிவு குழப்பம், நுகர்வோர் மனதில் தெரிவு பதித்தல், நுகர்வோர் நம்பிக்கையும், எதிர்பார்க்கையும் ஆதிக்கம் செலுத்துவதனை அவதானிக்கலாம்.

சந்தைப்படுத்தல் முகாமையில் நுகர்வோர் பொருட்கள் சேவைகளை சந்தையில் தெரிவு செய்யும் போது ஒரே மாதிரியாக நடந்து கொள்ள மாட்டார்கள் என்றும் நுகர்வோர் நடத்தையும், இதனைப் பல காரணிகளும் நிர்ணயிப்பதனையும் அவதானிக்கலாம்.

*(இக்கட்டுரை A/L மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது)*

**இ. இரட்ணம்,**
B.Com (Hons) H.N.Dip. Acc, M.A.A.T,
விரிவுரையாளர்,
வணிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

*மனிதர்களின் அன்பு எப்பொழுதும் மறைவதில்லை.
அது இடம் மாறுகின்றது. அவ்வளவுதான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்மதிப்பு GOOD WILL

ஒரு தொழில் நிறுவனத்திற்கு, ஒரு பொருளுக்கு, ஒரு மனிதனுக்கு சமூகத்தில் உள்ள நற்பெயர் நன்மதிப்பு எனக் கொள்ளப்படலாம். நாம் ஒரு வியாபார ஸ்தாபனத்திற்கு நன்மதிப்புக் குறித்து இங்கு கவனிப்பதே பொருத்தப்பாடானதாகும். வியாபார நிறுவனத்தின் மீது அதன் வாடிக்கையாளர் காட்டும் அக்கறை, ஈடுபாடு என்பவற்றுக்கு நன்மதிப்பே காரணமாகும். வாடிக்கையாளர் ஒரு வியாபார நிறுவனத்துக்கு திரும்பத் திரும்ப வருவார்களானால் அது அவர்கள் அந் நிறுவனத்தின் மீது நன்மதிப்பு கொண்டுள்ளார்கள் என்பதைக் காட்டுகின்றது. தொடர்ச்சியாக நிறுவனத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர் தொகை அதிகரித்துச் செல்லுமாயின் நிறுவனம் உழைக்கும் இலாபத்தின் அளவும் அதிகரித்துச் செல்லும். நன்மதிப்பானது லாபம் உழைக்கும் சக்தியை அதிகரித்துச் செல்கின்றது. இது ஒரு வியாபாரத்தின் தேறிய சொத்தின் பெறுமதிக்கும் அந்த வியாபாரத்தின் கொள்விலைக்கும் உள்ள வேறுபாடு ஆகும். அதாவது ஓர் சொத்துக்களின் தேறிய பெறுமதியை விட மேலதிகமாகக் கொடுக்கப் பட்ட கொள்வனவு விலையே நன்மதிப்பாகும்.

வியாபார நிலையமொன்றின் நன்மதிப்பை ஏற்படுத்தும் காரணிகளாக பல கொள்ளப்படுகின்றன. அவற்றுள் பின்வருவன முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றன

1) நிலையத்தின் அமைவிடம்
2) நிலையத்தினால் விற்கப்படும் பொருளின் விலை
3) நிலையத்தினால் விற்பனை செய்யப்படும் பொருளின் தரம்
4) நிலையத்தின் உரிமையாளர், ஊழியரின் நற்பண்பும் உபசரணையும்
5) நிலையத்தின் தொடர்ச்சியான கவர்ச்சியான விளம்பரங்கள்.

நன்மதிப்பு கட்புலனாகாத தொட்டுணர முடியாத தன்மையுடையதால் ஒரு அருவச் சொத்தாகக் கொள்ளப்படுகின்றது. இது பெறுமதியுடையதும் நீண்டகால அடிப்படையில் லாபம் உழைக்க உதவியதும் ஆகும்.

ஒரு பங்குடமை முயற்சியைப் பொறுத்த வரையில் பின்வரும் சந்தர்ப்பங்களில் நன்மதிப்பானது மதிப்பிடப்படுகின்றது.

1) புதிதாக ஒரு பங்காளனை சேர்க்கும் போது
2) பங்காளர் ஒருவர் விலகும் போது
3) பங்காளர்களின் லாபநட்ட விகிதாசாரத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தும் போது
4) தொழில் கொள்வனவு இணைப்பின் போது

நன்மதிப்பின் பெறுமதியினை கணிப்பீடு செய்வதற்கு நிறுவனம் உழைக்கும் லாபமே அடிப்படையாகும். மூலதனம் மாறாது இருக்கும் போது லாபம் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுமாயின் நிறுவனத்தின் நன்மதிப்பும் அதிகரித்துச் செல்லும் லாபம் தொடர்ச்சியாகக் குறைந்து செல்லுமாயின் நன்மதிப்பும் குறைந்து செல்லும் இரண்டுக்கும் இடையிலான தொடர்பு நேரானதாக இருப்பதை கவனிக்கலாம்

நன்மதிப்பு மதிப்பீடு செய்வதற்கு பின்வரும் முறைகள் பின்பற்றப்படுகின்றன.

1) சராசரி மொத்தலாப முறை
Average Gross Profit basis
2) சராசரி தேறிய லாப முறை
Average Net Profit basis
3) சராசரி மிகைலாப முறை
Super - Profit basis
4) நிறையளித்த சராசரி முறை
Weighted Average basis
5) முதலாக்க முறை/ மொத்த வருமான முறை
Discounted Momentun basis

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த முறைகளில் எம்முறையினைப் பின்பற்றி நன்மதிப்பு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என பங்குடமை ஒப்பந்தங்களில் கூறப்பட்டிருக்கும்.

**சராசரி மொத்த இலாப முறை:-**

ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு கடந்த சில வருடங்களின் மொத்த இலாபங்களின் சராசரியை தரப்பட்ட எண்ணினால் பெருக்குவதன் மூலம் அல்லது அச்சராசரியின் இத்தனை மடங்கு அல்லது பங்கு நன்மதிப்பு என மதிப்பிடப்படும்.

உதாரணம்: மூன்று வருடங்களின் சராசரி மொத்த லாபத்தின் இரண்டு மடங்கு நன்மதிப்பாகக் கொள்ளப்படு .

| வருடம் | மொத்தலாபம் |
|---|---|
| 1992 | 35000/- |
| 1993 | 55000/- |
| 1994 | 60000/- |

சராசரி மொத்தஇலாபம்

$$= \frac{35000 + 55000 + 60000}{3}$$

$$= 50000/-$$

நன்மதிப்பு $= 50000 \times 2 = 100000/-$

**சராசரி தேறிய இலாப முறை:**

ஒப்பந்தத்தில்க் கூறப்பட்டவாறு கடந்த சில வருடங்களின் தேறியலாபங்களின் சராசரியைக் கணிப்பீடு செய்து தரப்பட்ட எண்ணினால் பெருக்குவதன் மூலம் அல்லது இத்தனை மடங்கு அல்லது பங்கு நன் மதிப்பு எனக் கொள்ளப்படும்.

உதாரணம்:- நான்கு வருடங்களின் சராசரி

தேறியலாபத்தின் $\frac{2}{3}$ பங்கு நன்மதிப்பு எனக் கொள்ளப்படும்

| வருடம் | தேறியஇலாபம் |
|---|---|
| 1991 | 18,000/- |
| 1992 | 36,000/- |
| 1993 | 42,000/- |
| 1994 | 48,000/- |

சராசரி தேறியஇலாபம்

$$= \frac{18000 + 36000 + 42000 + 48000}{4}$$

$$= 36,000/-$$

நன்மதிப்பு $= 36,000 \times \frac{2}{3} = 24,000/-$

**சராசரி மிகைலாப முறை:-**

ஒப்பந்தத்தில்க் கூறப்பட்டவாறு கடந்த சில வருடங்களின் சராசரித் தேறியலாபத்தினைக் கணிப்பீடு செய்து அதிலிருந்து பங்காளர்களின் ஒரு வருட மூலதனவட்டி, ஒருவருட சம்பளம் இரண்டையும் கழித்து வருவது சராசரி மிகைலாபம் ஆகும். அதாவது பகிர்விற்குரிய இலாபம் ஆகும். இதனைத் தரப்பட்ட எண்ணால் பெருக்குவதன் மூலம் அல்லது இத்தனை மடங்கு அல்லது பங்கு நன்மதிப்பு என மதிப்பிடப்படும்.

உதாரணம்:- கடந்த மூன்று வருட சராசரி மிகைலாபத்தின் 60% நன்மதிப்பு எனக்கொள்ளப்படும்

| ஆண்டு | தேறிய இலாபம் |
|---|---|
| 1992 | 24,000/- |
| 1993 | 32,000/- |
| 1994 | 34 000 - |

பங்காளர் மூலதனம் A 25,000/-
B 15,000/-

மூலதனவட்டி 8%

பங்காளர் சம்பளம் A4,000/- } வருடாந்தம்
B2,000/-

சராசரி இலாபம்

$$\frac{24000 + 32000 + 34000}{3}$$

$$= 30,000/-$$

மூலதனவட்டி = A 2,000
B 1,200

சராசரி மிகைலாபம்

$$= 30,000 - (3,200 + 6,000)$$

$$= 20,800/-$$

நன்மதிப்பு $= 20,800 \times \frac{60}{100}$

$$= 12,480$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறையளித்த சராசரிமுறை -**

ஒப்பந்தத்தில்க் கூறப்பட்டவாறு கடந்த சில வருடங்களின் தேறிய இலாபங்களை தரப்பட்ட நிறைகளால் பெருக்கி பெறப்படுவது நிறையளித்தலாபமாகும். நிறையளித்த இலாபத்தை மொத்த நிறை எண்களால் வகுத்து பெறப்படும் சராசரி நிறையளித்த லாபத்தினை குறித்த ஒரு எண்ணினால் பெருக்குவதன் மூலம் அல்லது அதன் இத்தனை மடங்கு அல்லது பங்கு நன்மதிப்பு எனக் கொள்ளப்படும்.

உதாரணம்: மூன்று வருடங்களின் நிறையளித்த சராசரிலாபத்தின் $\frac{1}{4}$ பங்கு நன்மதிப்பு ஆகும்.

| ஆண்டு | இலாபம் | நிறை |
|---|---|---|
| 1992 | 80,000 | 1 |
| 1993 | 65,000 | 2 |
| 1994 | 80,000 | 3 |

80,000 × 1 = 80,000
65,000 × 2 = 130,000
80,000 × 3 = 240,000

மொத்த நிறையளித்த இலாபம் = 450,000

நிறையளித்த சராசரிலாபம் $= \frac{450,000}{1+2+3}$

= 75,000/-

நன்மதிப்பு = $75,000 \times \frac{1}{4}$

= 18,750/-

**முதலாக்க முறை / மொத்த வருமான முறை**

இம்முறையின் கீழ் நன்மதிப்பு மதிப்பிடப்படும் போது நிறுவனத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம் உழைக்கும் என எதிர்பார்க்கப்படும் இலாபம் முதலில் மதிப்பிடப்படும். எதிர்பார்க்கப்படும் இலாபத்தை விட உழைத்த இலாபம் அதிகமாயிருக்குமிடத்தே நிறுவனத்துக்கு நன்மதிப்பு உண்டு என்ற முடிவுக்கு வரலாம். எனவே எதிர்பார்க்கப்பட்டதை விட அதிக லாபம் உழைக்கப்பட்டால் அல்லது அதிக லாபம் உழைக்க எவ்வளவு மூலதனம் இடப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றதோ அந்தத் தொகைக்கும் இட்ட மூலதனத்துக்கும் இடையிலான வித்தியாசம் நன்மதிப்பாகக் கொள்ளப்படும்.

பொதுவாகக் கணியத் தொழிலில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் தமது நன்மதிப்பைக் கணிப்பிட இம் முறையைப் பின்பற்றுகின்றன. வைத்தியம், கணக்கியல்த்துறை, சட்டத்துறை சார்ந்த அமைப்புக்கள் தமது குறிப்பிட்ட வருடங்களுக்கான மொத்த வருமானத்தின் சராசரியை ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணினால் பெருக்குவதன் மூலம் கிடைக்கும் தொகையை நன்மதிப்பு எனக்கொள்கின்றன இம்முறையில் உழைக்கப்பட்ட மொத்த வருமானத்திலிருந்து செலவுகள் கழிக்கப்படாமலே நன்மதிப்பு கணிக்கப்படுவது கவனிக்கத்தக்கது ஆகும்.

உதாரணம்:-

| | |
|---|---|
| முயற்சியில் இட்ட மூலதனம் | 100 000/- |
| எதிர்பார்க்கப்பட்ட இலாபம் | 10, 000/- |
| உழைத்த இலாபம் | 15, 000/- |

10,000/- இலாபம் உழைக்க இட்ட முதல் = 100, 000

எனவே 15, 000/ = இலாபம் உழைக்க இடப்படவேண்டிய முதல்

$= \frac{100,000}{10,000} \times 15,000$

= 150, 000/-

நன்மதிப்பு = 150, 000 − 1000, 00

= 50, 000/-

மேற்கூறிய ஏதாவது ஒரு முறையினைப் பின்பற்றி கணிப்பீடு செய்யப்படும். நன்மதிப்பு கணக்கேடுகளில்ப் பதியப்படும் முறையிலும் வேறுபட்ட முறைகள் பின்பற்றப்படுகின்றன.

**பங்காளர் ஒருவர் சேரும் போது நன்மதிப்பு சம்பந்தப்பட்ட கணக்குப் பதிவுகள்:-**

1) நிறுவனத்தின் நன்மதிப்பில் தனக்கு உரிய பங்கினை புதிய பங்காளன் காசாகக் கொண்டு வருதல். இச் சந்தர்ப்பத்தில் அத்தொகை பழைய பங்காளர்களுக்கு உரியதாகும். இதனை அவர்கள் புதிய பங்காளன் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று தமது இலாப நட்ட விகிதா சாரத்தில் பிரித்து எடுத்து கொள்வர். தமது மூலதனத்துடன் இத்தொகையை சேர்ப்பார்களாயின்.

காசுக் கணக்கு வரவு

பழைய பங்காளர் மூலதனக் கணக்கு செலவு (பழைய இலாபநட்ட விகிதாசாரம்)

எனப் பதிவுகள் செய்யப்படும். சில வேளைகளில் இவ்வாறு மூலதனத்துடன் சேர்த்தபின் பழைய பங்காளர்கள் அத் தொகையை மீளத் தாம் எடுத்துக்கொள் வதும் உண்டு.

2) புதிய பங்காளர் சமூகத்தில் நன்மதிப் பும் பரபல்யமும் கொண்டு இருப்பாரா யின் அல்லது ஏற்கனவே அந்நிறுவனத் தின் ஊழியராக இருந்திருப்பாராயின் அவரிடமிருந்து நன்மதிப்புப் பங்கினை பணமாகப் பெற்றுக்கொள்வது இல்லை. பதிலாக இச்சந்தர்ப்பத்தில் நிறுவனத்தின் நன்மதிப்பை மதிப்பீடு செய்து கணக்கேடுகளில்ப் பதிவுசெய்து விடுவர்.

நன்மதிப்புக் கணக்கு வரவு
பழையபங்காளர் மூலதனக் கணக்கு செலவு
(பழைய இலாபநட்ட விகிதாசாரம்)
இந் நன்மதிப்புக் கணக்கு ஐந்தொகை யில் ஒரு சொத்தாகக் காட்டப்படும்.

3) மேற்க் கூறியவாறு ஏற்படுத்தப்படும் நன்மதிப்பினை புதியபங்காளர் சேர்த்தபின் கணக்கேடுகளிலிருந்து நீக்க வேண் டும் என பங்குடமை உடன்படிக்கையில் கூறப்பட்டிருப்பின் நன்மதிப்புக் கணக்கை பின்வருமாறு பதிவுகள் செய் வதன் மூலம் பதிவழித்து விடவேண்டும்.

புதிய பங்காளர் உட்பட மூலதனக்கணக்கு வரவு (புதிய இலாபநட்ட விகிதாசாரம்)

நன்மதிப்புக் கணக்கு செலவு

பங்குடமை உடன்படிக்கையில நன் மதிப்புக்காக கணக்குகள் ஆரம்பிக்கக் கூடாது எனக் கூறப்பட்டிருப்பின் இச்சந் தர்ப்பத்தில் நிறுவனத்தின் நன்மதிப்பை மதிப்பிட்டு அதில் புதிய பங்காளரின் பங் கினை

புதிய பங்காளர் மூலதனக் கணக்கு வரவு
பழைய பங்காளர் மூலதனக் கணக்கு செலவு

எனப்பதிவுக்குட்படுத்த வேண்டும் இதனைப் பின்வரும் உதாரணத்தின் மூலம் விளக்குவோம்.

A யும் B யும் இரு பங்காளர்கள் இலாப நட்டங்களை 2: 1 என்னும் விகிதத்தில் பகிர்ந்தார்கள். அவர்கள் C என்னும் புதிய பங்காளரைச் சேர்த்துக் கொண்டார்கள். C யைச் சேர்த்துக் கொண்ட பின்னர் இலாப நட்டம் ABC ஆகியோர் இடையில் முறையே 2: 2: 1 என்னும் விகிதத்தில்ப் பகிரப்படல் வேண்டும். C யினை சேர்த்துக் கொள்வதன் பொருட்டு நிறுவனத்தின் மொத்த நன் மதிப்பு ரூபா 30,000 ஆக மதிப்பிடப்பட் டுள்ளது.

மேற் குறிப்பிட்ட 4 வெவ்வேறான முறைகளைப் பயன்படுத்தி நன்மதிப்பு சீராக் கத்தை எவ்வாறு கணக்கேடுகளில் பயன் படுத்தலாம் என நாட்குறிப்பில் விளக்குக.

| 1. | A | B | C |
|---|---|---|---|
| பழைய விகிதம் | 20,000 | 10 000 | |
| புதிய விகிதம் | 12,000 | 12,000 | 6,000 |
| | — 8,000 | + 2,000 | + 6,000 |

காசுக் கணக்குவரவு 6,000/-
A செலவு 4,000/-
B செலவு 2,000/-
(C யால் கொண்டுவரப்பட்ட பணம்)
A வரவு 4,000/-
B வரவு 2,000/-
காசுக் கணக்கு 6,000/-

C யினால் கொண்டு வரப்பட்ட பணம் A யினாலும் B யினாலும் எடுத்துக்கொள் ளப்பட்டமை

2. நன்மதிப்பு வரவு 30,000/-
A செலவு 20,000/-
B செலவு 10,000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C தனது நன்மதிப்பைக் காசாகக் கொண்டு வராத படியால் முழுத்தொகைக்கும் கணக்கு ஏற்படுத்தப்பட்டது.

3. நன்மதிப்பு வரவு 30,000/-
A செலவு 20,000/-
B செலவு 10,000/-
A வரவு 12,000/-
B வரவு 12,000/-
C வரவு 6,000/-
நன்மதிப்புச் செலவு 30,000/-

புதிய பங்காளர் நன்மதிப்புப் பங்கினை காசாகக் கொண்டு வராதபடியினால் நன்மதிப்புக் கணக்கு ஏற்படுத்திப் பின்னர் அது பதிவழிக்கப்பட்டது நன்மதிப்பிற்கு கணக்கு ஏற்படுத்தும் போது பழைய பங்காளருக்கு மட்டும் பழைய விகிதத்தில் செலவு வைத்தல் வேண்டும். ஆனால் பதிவழிக்கும் போது புதிய பங்காளர்களுக்கும் சேர்த்து எல்லோர் கணக்கிலும் புதிய விகிதத்தில் வரவு வைத்தல் வேண்டும்.

4. C' மூலதனக் கணக்கு வரவு 6,000/-
A மூலதனக் கணக்கு செலவு 4,000/-
B மூலதனக் கணக்கு செலவு 2,000/-

**பங்குடமையொன்றில் பழைய பங்காளர் விலகும் போது நன்மதிப்பு கணக்கேடுகளில் பதிதலும் பங்காளர் இடையே தீர்வு காணலும்:-**

1. விலகும் பங்காளரின் நன்மதிப்பு பங்கினைத் தொடர்ந்தும் வியாபாரத்தினை நடத்தும் பங்காளர்கள் தங்கள் சொந்தக் காசிலிருந்து கொடுத்தல்.
2. நன்மதிப்பு முழுத்தொகைக்கும் கணக்கு ஏற்படுத்தல்.
3. விலகும் பங்காளரின் நன்மதிப்புக்கு மட்டும் கணக்கு ஏற்படுத்தல்.
4. நன்மதிப்புத் தொகைக்கு கணக்கு ஏற்படுத்தி பின் அதனைப் பதிவழித்தல்.
5. நன்மதிப்புத் தொடர்பான செம்மையாக்கல்களை பங்காளர்களின் மூலதனக் கணக்கினூடாகச் செய்தல்.

ABC ஆகிய 3 பங்காளர்களும் இலாப நட்டங்களை முறையே 3: 2: 1 என்னும் விகிதத்தில் பகிரும் பங்காளர்கள். C வியாபாரத்திலிருந்து விலகினார் A யும் B யும் தொடர்ந்து வியாபாரத்தினை முறையே 2:1 என்னும் விகிதத்தில் பகிர்ந்து நடத்தினார்கள் C விலகும் பொருட்டு நிறுவனத்தின் மொத்த நன்மதிப்பு ரூபா 30, 000 ஆக மதிப்பிடப்பட்டது.

| 1. | A | B | C |
|---|---|---|---|
| பழைய விகிதத்தில் | 15,000 | 10,000 | 5,000 |
| புதிய விகிதத்தில் | 20,000 | 10,000 | |
| | + 5,000 | | — 5,000 |

இங்கு C க்கு A ரூபா 5,000 காசாகக் கொடுப்பார். இது சம்பந்தமாகக் கணக்குகளில் எடபதிவும் இடம்பெறாது.

2. நன்மதிப்புக் கணக்கு வரவு 30,000/-
மூலதனக் கணக்கு செலவு A 15,000/-
B 10,000/-
C 5,000/-

நன்மதிப்பு முழுத்தொகையையும் ஏற்படுத்தி விலகும் பங்காளர் தொகை கொடுக்கப்படும் அல்லது கடன் கணக்கு மாற்றப்படும்.

3. நன்மதிப்புக் கணக்கு வரவு 5,000/-
C மூலதனக் கணக்கு செலவு 5,000/-

விலகிச் செல்லும் பங்காளரின் பங்குக்கு மட்டும் கணக்கு ஏற்படுத்தப்பட்டது.

ஒரு பங்காளன் விலகும் போது விலகும் பங்காளரின் பங்குக்கு மட்டும் நன்மதிப்புக் கணக்கு ஏற்படுத்தலாம் ஆனால் ஒரு பங்காளர் சேரும் போது சேரும் பங்காளரின் பங்கிற்கு மட்டும் கணக்கு ஏற்படுத்துவது தவறு முழுத்தொகைக்கும் தான் அப்போது கணக்கு ஏற்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நன்மதிப்புக்
கணக்கு வரவு 30,000
மூலதனக்
கணக்கு செலவு A 15,000/-
B 10,000/-
C 5,000/-

மூலதனக்
கணக்கு வரவு A 20,000/-
B 10,000/-
நன்மதிப்புக்
கணக்கு செலவு 30,000/-

நன்மதிப்புக் கணக்கு ஏற்படுத்தி அது பதிவழிக்கப்பட்டது.

5. A மூலதனக்
கணக்கு வரவு 20,000/-
B மூலதனக்
கணக்கு வரவு 10,000/-
A மூலதனக்
கணக்கு செலவு 15,000/-
B மூலதனக்
கணக்கு செலவு 10,000/-
C மூலதனக்
கணக்கு செலவு 5,000/-

நன்மதிப்பிற்கு கணக்கு ஏற்படுத்தாமல் மூலதனக் கணக்கினூடாக செம்மையாக்கல் செய்யப்பட்டது.

**பங்குடமையொன்றில் பங்காளர்களுக்கு இடையிலுள்ள இலாப நட்ட பகிர்வீதம் மாறும்போது நன்மதிப்புக் கணக்குகளைப் பதிதலும் பங்காளர் இடையில் தீர்வு காணலும்:-**

1. கணக்குகளில் காட்டாது தீர்வுகாணல் அதாவது பங்குடமைக்கு வெளியே தீர்வு காணல்.
2. இலாபநட்ட பகிர் வீதத்தினை மாற்ற முன் நன்மதிப்பு முழுத்தொகைக்கும் கணக்கு ஏற்படுத்தல்.
3. பங்காளருடைய இலாபநட்ட பகிர் வீதத்தில் நன்மதிப்புக்கு கணக்கு ஏற்படுத்தி பின் புதிய இலாபநட்ட பகிர் விகிதத்தில் நன்மதிப்பினை பதிவழித்தல்.
4. மாற்றம் சம்பந்தமான நன்மதிப்புச் செம்மையாக்கல்களை மாற்றம் சம்பந்தம் மூலதனக் கணக்கினூடாகச் சீராக்குதல்.

ABC ஆகிய மூன்று பங்காளர்கள் முறையே 3: 2 : 1 என்னும் விகிதத்தில் பகிரும் பங்காளர்கள் இப்போ ABC இலாப நட்ட பகிர் வீதத்தினை முறையே 1: 2: 3 என்னும் விகிதத்தில் மாற்றினார்கள். இதற்காக நிறுவனத்தின் நன்மதிப்பு 30,000/- என மதிப்பிடப்பட்டது.

| 1. | A | B | C |
|---|---|---|---|
| பழைய விகிதம் | 15,000 | 10,000 | 5,000 |
| புதிய விகிதம் | 5,000 | 10,000 | 15,000 |
| | − 10,000 | | + 10,000 |

C என்ற பங்காளர் A க்கு ரூபா 10,000 கொடுப்பர் இதற்கான எப்பதிவும் கணக்கேடுகளில் வராது.

2. நன்மதிப்புக்
கணக்கு வரவு 30,000/-
மூலதனக்
கணக்கு செலவு A 15,000/-
B 10,000/-
C 5,000/-

இலாபநட்ட விகிதம் மாற்றும் போது நன்மதிப்பு முழுத்தொகைக்கும் கணக்கு ஏற்படுத்தப்படும்.

3) நன்மதிப்புக்
கணக்கு வரவு 30,000/-
மூலதனக்
கணக்கு செலவு A 15,000/-
B 10,000/-
C 5,000/-
மூலதனக்
கணக்குவரவு A 5,000/-
B 10,000/-
C 15,000/-
நன்மதிப்புக்
கணக்கு செலவு 30,000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மதிப்புத் தொகைக்கு பழைய விகிதத்தில் கணக்கு ஏற்படுத்தப்பட்டு புதிய விகிதத்தில் பதிவழிக்கப்பட்டது.

4) மூலதனக்

| | | |
|---|---|---|
| கணக்கு வரவு | A | 15 000/- |
| | B | 10,000/- |
| | C | 5,000/- |
| மூலதனக் கணக்கு செலவு | A | 5,000/- |
| | B | 10,000/- |
| | C | 15,000/- |

நன்மதிப்புக் கணக்கு ஏற்படுத்தப்படாமல் இவை சம்பந்தமான செம்மையாக்கல்கள் பங்காளர் மூலதனக் கணக்குகள் மூலம் செய்யப்பட்டது அல்லது இதனைப் பின்வருமாறும் செய்வர்

| | | |
|---|---|---|
| மூலதனக் கணக்கு வரவு | C | 10,000/ |
| மூலதனக் கணக்கு செலவு | A | 10,000 |

எனப் பதிவு செய்தல் வேண்டும்.

உசாத்துணை நூல்கள்:

★ BOOK KEEPING AND ACCOUNTS
★ MODERN ACCOUNTING THEORY

T. Thavamannan
94 Com.

**மெட்ரோகார்ட்:**

டெலிகார்ட் பிரைவேட் லிமிட்டெட்டினால் அண்மையில் பேஃபோன் சேவையை ஒத்த "மெட்ரோகார்ட்" தொலைத் தொடர்பு சேவை அறிமுக படுத்தப்பட்டது மெட்ரோகார்ட்டின் உதவியுடன் உள்நாட்டு. வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களைப் பெறமுடியும் 150 ரூ, 300 ரூ. 600 ரூ ஆகிய விலைகளில் மெட்ரோகார்ட் கிடைக்கும் இவ்வட்டை பிரான்சின் 'சுப்பர்கார்' தொழில்நுட்பத்தினைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதால இதீப போலிகள் தயாரிப்பது தடுக்கப்படுகிறது ஏப்ரல் மாதத்தின்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் 5000 மெட்ரோபோன்கார்ட் "பூத"களை அமைக்கப்படவுள்ளன மெம்மஞ்சள் நிறத்தைக் கொண்ட இப்'பூத்களை இனம் காணமுடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவில் பதிவுகளும் ஒற்றைப் பதிவும்
# In Complete Records and Single Entry

கொடுக்கல் வாங்கலொன்றின் இரட்டை விளைவுகளையும் முழுமையாக கணக்குகளில் பதிவு செய்யாது அவற்றில் தெரிந்தெடுத்த சில அம்சங்களை மாத்திரம் பதிவு செய்தல் நிறைவில் பதிவு எனவும், ஒற்றைப் பதிவு எனவும் அழைக்கப்படுகிறது. ஓர் நிதி வருடத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களில் ஒரு சிலவற்றை மாத்திரம் பதிவு செய்து வைத்திருத்தல் நிறைவில் பதிவெனவும், அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களினதும் இரட்டை விளைவுகளுள் ஒன்றை மாத்திரம் பதிவு செய்தல் ஒற்றைப் பதிவெனவும் அழைக்கப்படுகின்றது.

இரட்டைப் பதிவுக் கோட்பாட்டிற்கு முரணான வகையில் கணக்குப் பதிதல் தனியொரு முறையன்று, குறைபாடுடைய ஆம் முறையின் கீழ் கணக்குகள் ஒழுங்கின்றி பதியப்படுவதற்குரிய காரணங்கள் பின்வருமாறு

i) தவிர்க்க முடியாத காரணங்களால் நடவடிக்கைகளைப் பதியாது விடுதல்.

ii) இரட்டைப் பதிவு முறை பற்றிய போதிய விளக்கமின்மை.

iii) இரட்டைப் பதிவு முறையில் மேலதிக செலவு ஏற்படுதல்.

iv) முறையான கணக்குகள் வைக்கப்படாத போதிலும் தொழில்சார் நபர்களைக் கொண்டு நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துப் பழகியமை.

குறைந்த மூலதனத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட சிறிய உற்பத்தி நிறுவனங்களும், பெரும்பாலான சிறிய வியாபார நிறுவனங்களும் இரட்டைப் பதிவு முறைக்கு அமைவாக கணக்கு வைப்பது தேவையற்றதெனக் கருதுவதனால் பெரும்பாலும் ஆள்சார் கணக்குகளையும், சில வேளைகளில் காசுக்கணக்கையும் வைத்திருக்கின்றன. இரட்டைப் பதிவு முறை இம்முறையில் இல்லாமையால் பல குறைபாடுகள் உள்ளன. அவையாவன.

i) பெயரளவுக் கணக்குகள் வைத்திருக்காமையால் இலாப நட்டத்தை சரிவர அறிய முடியாதுள்ளது.

ii) சொத்துக் கணக்குகள் பேணப்படாமையால் நிதி நிலைமையையுணர்த்தும் ஐந்தொகையை தயாரிக்க முடியாதுள்ளது.

iii) மோசடி கையாடுதலையும் ஏனைய மோசடிகளையும் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

iv) போதிய கணக்குகள் பேணப்படாமையால் சரிவர கணக்காய்வு செய்ய முடியாதுள்ளது.

ஒழுங்கற்ற பதிவுகளைக் கொண்டுள்ள இந்நிறுவனங்களுக்கும் இலாபநட்ட நிலைமையை அறியக் கூடிய கூற்றுக்களையும், நிதி நிலைமையை வெளிப்படுத்தக் கூடிய கூற்றுக்களையும் ஆண்டிறுதியில் தயாரிக்க வேண்டியுள்ளது. பெயரளவுக் கணக்குகள் பேணப்படா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையால் விற்பனைக் கணக்கு, கொள்வனவுக் கணக்கு என்பன இங்கு காணப்படா. நிதியாண்டுக் காலத்தில் பதிந்துவைத்த பெயருள் கணக்குகள், காசேட்டு சுருக்கம் போன்ற நிகழ்காலத் தகவல்கள் முந்திய வருட கணக்கறிக்கைகளில் இருந்து எடுக்கப்படும் கடந்தகால தகவல்கள் ஆண்டிறுதியில் மதிப்பிட்டுப் பெற்றுக் கொள்ளும் மதிப்பீட்டுத் தகவல்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியே முடிவுக் கணக்குகளைத் தயாரிக்க வேண்டியுள்ளது.

இரட்டைப் பதிவு முறையில் வைத்திருக்கும் கணக்குகளில் இருந்து தயாரிக்கப் பெறும் முடிவுக் கணக்குகள் போல நம்பகத் தன்மை வாய்ந்தவையாக ஒழுங்கற்ற பதிவுகளிலிருந்து முடிவுக் கணக்குகளைத் தயாரிக்க முடியாது போனாலும் கூட அங்கு கிடைக்கப்பெறும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்காணும் மூன்று முறைகளுள் ஏதேனுமொன்றைப் பிரயோகிப்பதன் மூலம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியும்.

அ) பூரணமற்ற பதிவுகளை இரட்டைப் பதிவுகளாக மாற்றிய பின்னர் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.

ஆ) மூலதன அறிக்கைகளைத் தயாரிப்பதன் மூலம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.

இ) வெளிப்படாத தகவல்களைக் கண்டுபிடிப்பதன் மூலம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.

### அ) பூரணமற்ற பதிவுகளை இரட்டைப் பதிவுகளாக மாற்றிய பின்னர் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் இரட்டைப்பதிவு முறையின் கீழ் கணக்குகளைத் தயாரிப்பதற்கு போதுமானவையாக இருப்பின் இம் முறையைக் கையாளமுடியும். இம் முறையின் போது இரட்டைப் பதிவு முறையை ஆரம்பிக்கவிருக்கும் திகதியிலுள்ள நிதி நிலைமையைக் காட்டும் கூற்றை முதலில் தயாரித்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் ஆரம்ப மூலதனத்தை அறிந்து சொத்துக்களையும், பொறுப்புக்களையும் பேரேட்டுக் கணக்குகளில் பிரதி செய்த பின்னர் வியாபார இலாப நட்டக் கணக்கையும், ஐந்தொகையையும் தயாரித்துக் கொள்ளலாம்.

### ஆ) மூலதன அறிக்கைகளைத் தயாரிப்பதன் மூலம் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

தொழில் முயற்சியின் தகவல்கள் அவற்றை இரட்டைப் பதிவுகளாக மாற்ற போதியதாக இல்லாத சந்தர்ப்பத்தில் இம் முறையினைக் கையாளலாம். சொத்துக் கணக்குகளையும், பெயரளவுக் கணக்குகளையும் பேணாது பெயருள் கணக்குகளை மாத்திரம் வைத்திருக்கும் தொழில் முயற்சிகளுக்கு வியாபார இலாப நட்டக் கணக்கைத் தயாரிக்க முடிவதில்லை ஏனெனில் கொள்வனவையும் விற்பனையையும் அறிந்து கொள்வதற்குத் தேவையான காசேட்டுத் தகவல்கள் இங்கு பேணப்படுவதில்லை. எனவே நிதியாண்டின் ஆரம்பத்திலும், இறுதியிலும் நிலைமைக் கூற்றுக்களைத் தயாரித்து தேறிய சொத்து (மூலதனம்) க்களை ஒப்பிடுவதன் மூலம் அவ்வாண்டின் இலாபத்தை அல்லது நட்டத்தை தீர்மானிக்க முடியும்

மொத்தச் சொத்துக்களிலிருந்து பொறுப்புக்களைக் கழிப்பதன் மூலம் தேறிய சொத்துக்கள் கணிக்கப்படுகின்றன. தேறிய சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாப நட்டங்களைத் துணியும் போது உரிமையாளரின் மேலதிக மூலதனமிடல், மீளப் பெறுதல் என்பவற்றையும் கணிப்பிற்குட்படுத்த வேண்டியுள்ளது மேலதிக மூலதனமிடுவதனால் வியாபாரத்திற்கு வெளியிலிருந்து வரும் பணமும், மீளப் பெறுவதனால் வியாபாரத்திலிருந்து வெளியேறும் பணமும், மொத்தச் சொத்துக்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் தேறிய சொத்துக்களை மாற்றியமைத்து விடுவதனால் வருடத்திற்கான உண்மை இலாப நட்டத்தை அறிய இவற்றையும் சீராக்க வேண்டியுள்ளது. இவற்றை பின்வரும் உதாரணக் கணக்கு மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

உதாரணம்: 1

சரவணன் தனது வியாபாரம் தொடர்பாக ஒழுங்கான கணக்கேடுகள் வைத்திருக்கவில்லை அவரது வியாபாரத்திலிருந்து பின்வரும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கொண்ட பட்டியலொன்றை மாத்திரமும் பெறக் கூடியதாக உள்ளது. இத்தகைய தகவல்களைப் பயன்படுத்தி 31 – 12 - 94 ல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தையும் அத்தேதியில் இருந்தவாறான ஐந்தொகையையும் தயாரிக்க வேண்டும்.

| சொத்துக்களும் பொறுப்புக்களும் | 01 - 01 - 94 | 31 - 12 - 94 |
|---|---|---|
| மோட்டார் வாகனம் (கிரயம்) | 60,000 | 1,40,000 |
| தளபாடம் (கிரயம்) | 25,000 | 25,000 |
| வருமதியுண்டியல் | 50,000 | 15,000 |
| கடன்பட்டோர் | 30,000 | 34,000 |
| கையிருப்புக்கள் | 45,000 | 60,000 |
| வங்கிமீதி | (2,000) | 11,000 |
| கைவசமுள்ள காசு | 500 | 5,000 |
| கடன் கொடுத்தோர் | 30,000 | 35,000 |

மே மாதத்தில் திடீர் அதிஷ்ட லாபச்சீட்டு மூலம் கிடைத்த 10,000/- வை வியாபாரத்திலே முதலிட்ட போதிலும் சரவணன் தனது மருத்துவச் செலவுகளுக்காக நவம்பர் மாதத்தில் 4000/- வை மீள் எடுத்துள்ளார். 2000/- அறவிட முடியாக் கடன்களாக பதிவழிக்கப்படுவதுடன் நிலையான சொத்துக்களுக்கு 20% தேய்மான ஏற்பாடும் ஐயக்கடன்களுக்கு 5% ஏற்ப்பாடும் செய்யபடுதல் வேண்டும்

சரவணன் வியாபாரம்

31 - 12 – 1994ல் முடிவடைந்த வருடத்திற்கான

இலாப நட்டக் கணிப்பீட்டுக் கூற்று

| சொத்துக்கள் | 01 - 01 - 94 | 31 - 12 - 94 |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | 60,000 | 1,40,000 |
| தளபாடம் | 25,000 | 25,000 |
| வருமதியுண்டியல் | 50,000 | 15,000 |
| கடன்பட்டோர் | 30,000 | 34,000 |
| கையிருப்புக்கள் | 45,000 | 60,000 |
| வங்கி | — | 11,000 |
| காசு மீதி | 500 | 5,000 |
| | 2,10,500 | 2,90,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | | |
| கடன் கொடுத்தோர் | 30,000 | | 35,000 | |
| வங்கி மேலதிக பற்று | 2,000 | (32,000) | — | 35,000 |
| | | 1,78500 | | 2,55,000 |

| | | |
|---|---|---|
| 31 - 12 - 1994ல் உள்ளபடியான தேறிய சொத்து | | 2,55,000 |
| 01 - 01 - 1994ல் ,, ,, | | (1,78,500) |
| | | 76,500 |
| கழி:- மேலதிக மூலதனம் | | (10,000) |
| | | 66,500 |
| கூட்டு:- எடுப்பனவு | | 4,000 |
| | | 70,500 |
| கழி:- மோட்டார் தேய்மானம் | 28,000 | |
| தளபாட தேய்மானம் | 5,000 | |
| அறவிட முடியாக் கடன் | 2,000 | |
| ஐயக் கடன் ஏற்பாடு | 1,600 | (36 600) |
| தேறிய இலாபம் | | 33,900 |

சரவணன் வியாபாரம்

31 – 12 – 1994 ல் ஐந்தொகை

| | | | கிரயம் | தி. பெ. தே | தேறியது |
|---|---|---|---|---|---|
| மூலதனம் | 1,78,500 | **நிலையான** | | | |
| +மேலதிக மூல | 10,000 | **சொத்து** | | | |
| | 1,88,500 | மோட்டார் | 1,40,000 | 28,000 | 1,12,000 |
| +தேறியஇலாபம் | 33,900 | தளபாடம் | 25,000 | 5,000 | 20,000 |
| | 2,22,400 | | 1,65,000 | 33,000 | 132,00 |
| —எடுப்பனவு | (4,000) | **நடைமுறைச்** | | | |
| | 2,18,400 | **சொத்து** | | | |
| **நடப்புப்** | | கையிருப்பு | | 60,000 | |
| **பொறுப்பு** | | வருமதியாளர் | 32,000 | | |
| கடன்கொடுத்தோர் | 35,000 | —ஐ. க. ஏற் | (1,600) | 30,400 | |
| | | வருமதியுண்டி | | 15,000 | |
| | | வங்கி | | 11,000 | |
| | | காசு | | 5,000 | 1,21,400 |
| | 2,53,400 | | | | 2,53,400 |

## இ) வெளிப்படாத தகவல்களைக் கண்டுபிடிப்பதன் மூலம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.

தொழில் முயற்சியொன்றின் கணக்கேடுகளில் வெளிப்படையாகத் தெரியாது மறைந்திருக்கும் தகவல்களை கண்டு பிடிப்பதன் மூலம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது மற்றுமொரு முறையாகும். பெயருள் கணக்குகளோடு காசுப் புத்தகத்தையும் பேணிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் முயற்சிகளுக்கு மொத்தக்கடன் கொடுத்தோர் கணக்கு, மொத்தக் கடன் பட்டோர் கணக்கு, சுருக்கிய காசேடு ஆகிய பேரேட்டுக் கணக்குகளை தயாரிப்பதன் மூலம் கடன் கொள்வனவு, கடன் விற்பனை, உரிமையாளர் பற்று, பதிவு செய்யப்படாத செலவுகள், வருமானங்கள் என்பவற்றைக் கண்டறிந்தபின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கலாம் இதனைப் பின்வரும் உதாரணத்தின் மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

உதாரணம்:- 2

பாலசிங்கம் என்பவர் பல ஆண்டுகளாக பல சரக்கு வியாபார மொன்றை நடாத்தி வருகின்ற போதிலும் முழுமையான கணக்குப் பதிவுகளின் தொகுதியொன்றை அவர் பேணி வரவில்லை 31 - 03 - 1994ல் முடிவடையும்

ஆண்டுக்கு அவரது குறிப்புப் புத்தகங்களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சொத்துக்களும் பொறுப்புக்களும் | 01 - 04 - 93 | 31 - 03 - 94 |
|---|---|---|
| காணியும் கட்டிடமும் (கிரயம்) | 50,000 | 50,000 |
| தளபாடம் | 20,000 | 25,000 |
| கையிருப்புக்கள் | பதிவு எதுவுமில்லை | 6,600 |
| கடன் பட்டோர் | 35,000 | 50,000 |
| கடன் கொடுத்தோர் | 25,000 | 10,000 |
| செலுத்துவதற்குரிய மின் கட்டணம் | 600 | 800 |

காசேட்டின் சுருக்கம் வருமாறு

01- 04 - 93 ல் இருந்தபடி மீதிகள்

| | |
|---|---|
| கைவசமுள்ள காசு | 5,675 |
| வங்கியிலுள்ள காசு | 35,000 |
| கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்டவை | 4,9[illegible],000 |
| கொடுப்பனவுகள் | |
| கடன் கொடுத்தோர் | 3,75,000 |
| சம்பளங்கள் | 55,000 |
| எடுப்பனவுகள் | 2,000 |
| புதிய தளபாடம் | 16,500 |
| மின்கட்டணம் | 7,500 |
| அச்சிடல் | 3,500 |
| மேலதிகத் தகவல்கள் வருமாறு | |
| பழுதடைந்த பொருட்கள் | 6,[illegible]00 |
| களவாடப்பட்ட காசு | 2,500 |
| 31- 03 – 94 ல் கைவசமிருந்த காசு | 5,600 |

பண்டங்கள் கொள்விலையுடன் 25% கூட்டி விற்கப்பட்டன

காணி கட்டிடங்களுக்கு 10% பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். 31- 03 – 1994ல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கையும் அத்திகதியிலுள்ள வாறான ஐந்தொகையையும் தயாரிக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பாலசிங்கம் பலசரக்கு வியாபாரம்,
## 31 - 03 - 94 ல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விற்பனை | 5,05,000 |
| ஆரம்ப இருப்பு | | 57,100 | | |
| கொள்வனவு | 3,60,000 | | | |
| கழி:- பழுதடைந்த பொருள் | (6,500) | 3,53,500 | | |
| | | 4,10,600 | | |
| கழி:- இறுதிஇருப்பு | | (6.600) | | |
| விற்பனைக் கிரயம் | | 4,04,000 | | |
| மொத்த இலாபம் | | 1,01.0 0 | | |
| | | 5,05,000 | | 505,000 |
| சம்பளங்கள் | | 55,000 | மொத்த இலாபம் கி/வ | 1,01,000 |
| கட்டிட பெ, தேய்வு 10% | | 5,000 | | |
| தளபாட பெ.தேய்வு | | 11,500 | | |
| மின்கட்டணம் | | 7,700 | | |
| அச்சிடல் | | 3,500 | | |
| பழுதடைந்த பொருட்கள் | | 6,500 | | |
| களவாடப்பட்ட காசு | | 2.500 | | |
| தேறிய இலாபம் | | 9 300 | | |
| | | 1,01,000 | | 1,01,000 |

## 'பாலசிங்கம் பலசரக்கு வியாபாரம்'
## 31 - 03 - 94 இல் உள்ளபடியான ஐந்தொகை

| | | | | கிரயம் | திரள் தேய்மானம் | தேறியது |
|---|---|---|---|---|---|---|
| மூலதனம் | 1,77,175 | | **நிலையான சொத்துக்கள்** | | | |
| தேறிய இலாபம் | 9,300 | | காணிகட்டிடம் | 50,000 | 5,000 | 45,000 |
| | 1,86,475 | | | | | |
| கழி: எடுப்பனவு | (2,000) | 1,84,475 | தளபாடம் | 36,500 | 11.500 | 25,000 |
| | | | | 86,500 | 16,500 | 70,000 |
| **நடைமுறைக் கடன்கள்** | | | **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கடன் கொடுத்தோர் | 10,000 | | கையிருப்பு | | 6,600 | |
| அட்டுறு மின்கட்டணம் | 800 | 10,800 | கடன்பட்டோர் | | 50,000 | |
| | | | வங்கி | | 63,075 | |
| | | | காசு | | 5,600 | 1,25,275 |
| | | 1,95,275 | | | | 1,95,275 |

## காசேடு

| | | | |
|---|---|---|---|
| **செய்கை** | | | |
| காசு மீதி (1 - 4 - 93) | 5,675 | கடன் கொடுத்தோர் | 3,75,000 |
| வங்கி மீதி (1 - 4 - 93) | 35,000 | சம்பளங்கள் | 55,000 |
| கடன் பட்டோர் | 4,90,000 | எடுப்பனவு | 2,000 |
| | | புதிய தளபாடம் | 16,500 |
| | | மின் கட்டணம் | 7,500 |
| | | அச்சிடல் | 3,500 |
| | | காசு களவு | 2,500 |
| | | காசு மீதி (31 - 3 - 94) | 5,600 |
| | | வங்கி மீதி(31 - 3 -94) | 63,075 |
| | 5,30,675 | | 5,30,675 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொத்தக் கடன் பட்டோர் க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீதி / கீ / வ (1 - 4 - 93) | 35,000 | காசு | 4,90,000 |
| விற்பனை | 5,05,000 | மீதி / செ (31 - 3 - 94) | 50,000 |
| | 5,40,000 | | 5,40,000 |
| மீதி / வ 1 - 4 - 94 | 50,000 | | |

**மொத்தக் கடன் கொடுத்தோர் க / கு**

| | | | |
|---|---|---|---|
| காசு | 3,75,000 | மீதி / வ (1 - 4 - 93) | 25,000 |
| மீதி / செ (31 - 3 94) | 1,0000 | கொள்வனவு | 3,60,000 |
| | 3,85,000 | | 3,85,000 |
| | | மீதி / வ (1 - 4 - 94) | 10,000 |

**மின் கட்டணக் க / கு**

| | | | |
|---|---|---|---|
| காசு | 7,500 | மீதி / வ (1 - 4 - 93) | 600 |
| மீதி / செ (31 - 3 - 94) | 800 | இலாப நட்டக் க / கு | 7,700 |
| | 8,300 | | 8,300 |
| | | மீதி / வ (1 - 4 -94) | 800 |

1 - 4 - 93 ல்

**மூலதன கணிப்பீடு**

| | | |
|---|---|---|
| காணி கட்டிடம் | 50,000 | |
| தளபாடம் | 20,000 | |
| கையிருப்பு | 5,71,00 | |
| கடன் பட்டோர் | 35,000 | |
| வங்கி | 35,000 | |
| காசு | 5,675 | |
| கடன் கொடுத்தோர் | | 25,000 |
| அட்டுறு மின் கட்டணம் | | 600 |
| மூலதனம் (1 - 4 - 93) | | 1,77,175 |
| | 2,02,775 | 2,02,775 |

விற்பனவுக் கிரயக் கணிப்பீடு

$$\frac{100}{125} \times 5,05,000 = 4,04,000$$

மொத்த இலாபக் கணிப்பீடு

$$\frac{25}{125} \times 5,05,000 = 1,01,000$$

இ. கைலைவாசன்
B Com

---

## உசாத்துணை நூல்கள்


1. **Business Accounting — 1**
   Frank Wood

2. **கணக்கியல் சுருக்கம் — 2**
   வே. அழகேசன்

3. **ஆசிரியர் கைநூல்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளல் கொடுத்தல் கணக்கும் வருமானச் செலவுக் கணக்கும்

# RECEIPTS AND PAYMENTS ACCOUNTS AND INCOME AND EXPENDITURE ACCOUNTS

மன்றங்கள், கழகங்கள், சங்கங்கள் போன்றவை இலாபமுழைப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டிருப்பதில்லை. இதனால் இவை வியாபார, இலாப நட்ட கணக்குகளைத் தயாரிப்பதில்லை எனினும் இத்தகைய அமைப்புக்கள் தமது செயற்பாட்டு பெறுபேறுகளை அறிந்து கொள்ளும் பொருட்டு தமது கணக்குப் பதிவுகளை ஓரளவு கணக்கீட்டு விதிகளுக்குட்படுத்தி முடிவுக் கணக்குகளைத் தயாரிக்கின்றன. இவ்வமைப்புக்களால் தயாரிக்கப்படும் முடிவுக் கணக்குகள் கொள்ளல் கொடுத்தல் கணக்கு, வருமானச் செலவுக் கணக்கு, ஐந்தொகை என்பனவாகும்.

## கொள்ளல் கொடுத்தல் கணக்கு
## Receipts And Payments Account

கொள்ளல் கொடுத்தல் கணக்கானது குறித்த காலப்பகுதிக்கான பெறுவனவுகள், கொடுப்பனவுகளின் சுருக்கமாகும். இதில் காசு, வங்கி நடவடிக்கைகள் இடம்பெறும்.

## வருமானச் செலவுக் கணக்கு
## Income And Expenditure Account

இலாப நோக்கங்கொண்ட நிறுவனங்கள் தமது செயற்பாடுகளின் மூலம் இலாபம் ஏற்பட்டுள்ளதா என அறிவதற்கு வியாபார, இலாபநட்ட கணக்கினைத் தயாரிக்கின்றன. இலாபநோக்கமற்ற அமைப்புக்களில் பெறுபேறுகளை அறிவதற்கு வருமானச் செலவுக் கணக்கு தயாரிக்கப்படுகிறது. வருமானச் செலவுக் கணக்கு தயாரிக்கப்படும்போது இலாப நட்ட கணக்கு போன்று அதே விதிகளே பின்பற்றப்படும். இவ் இரண்டையும் பின்வருமாறு ஒப்பிடலாம்.

| இலாப நோக்கங்கொண்ட நிறுவனம் | இலாப நோக்கமற்ற அமைப்பு |
| --- | --- |
| 1) இலாப நட்ட க/கு .. ...... | வருமானச் செலவுக் க/கு |
| 2) தேறிய இலாபம் ...... | செலவிலும் கூடிய வருமானம் |
| 3) தேறிய நட்டம் ......... | வருமானத்திலும் கூடிய செலவினம் |

## விசேட நோக்கத்திற்கான இலாபம் அல்லது நட்டம்
## Profit or Loss for a Special Purpose

இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பானது இலாபமுழைக்கக் கூடிய வகையில் ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாயின் அது தொடர்பான இலாபநட்டத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிய வேண்டியிருக்கும். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவ்வாறான நடவடிக்கைகளுக்கு தனியான வியாபார, இலாபநட்ட கணக்கினைத் தயாரிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. இவ்வாறு பெறப்படும் இலாபமானது குறித்த அமைப்பின் பிரதான நோக்கத்திற்காக செலவழிப்பதற்கு பயன்படுத்தப்படும்.

உதாரணமாக ஒரு விளையாட்டுக்கழகமானது மதுபானச்சாலை ஒன்றை நடத்தலாம். இதிலிருந்து கிடைக்கும் இலாபமானது விளையாட்டுச் செலவுகளுக்கு பயன்படுத்தப்படலாம். இங்கு மதுபானச்சாலையின் வியாபார நடவடிக்கைகளுக்கென தனியான ஒரு வியாபார, இலாபநட்ட கணக்கு தயாரிக்கப்பட்டு ஏதாவது இலாபம் அல்லது நட்டம் இருப்பின் அது வருமானச் செலவுக் கணக்கிற்கு மாற்றப்படும்.

## திரண்ட நிதி
## Accumulated Fund

இலாப நோக்கங்கொண்ட நிறுவனங்கள் மூலதன கணக்கினைக் கொண்டிருக்கும். ஆனால் இலாபநோக்கமற்ற அமைப்புகள் இம்மூலதனக் கணக்கிற்குப் பதிலாக திரண்ட நிதியினைக் கொண்டிருக்கும். அதாவது சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்குமிடையிலான வித்தியாசம் திரண்ட நிதி ஆகும்.

இலாப நோக்கம் கொண்ட நிறுவனம்

| மூலதனம் + பொறுப்புக்கள் = சொத்துக்கள் |
|---|

இலாப நோக்கமற்ற அமைப்பு

| திரண்டநிதி + பொறுப்புக்கள் = சொத்துக்கள் |
|---|

## சந்தா/ உறுப்புரிமைக் கட்டணம்
## Subscription / Membership fee

ஒரு நபர் குறித்த ஒரு கழகத்தில் அல்லது சங்கத்தில் அங்கத்துவம் வகிக்க விரும்பினால் மாதாந்தம் அல்லது வருடாந்தம் குறித்த தொகைப் பணத்தை சந்தாவாக செலுத்த வேண்டும். இதன் மூலம் அவர் அக்கழகத்தின் / சங்கத்தின் வசதிகளை அனுபவிக்க உரித்துடையவராகிறார். இங்கு குறித்த ஆண்டுக்குரிய சந்தாக்களே அவ்வாண்டு வருமானச் செலவுக் கணக்கில் வருமானமாகக் காட்டப்படும்.

## வசூலிக்கப்படாத சந்தாக்களும் முன்னெச்சரிக்கை எண்ணக்கருவும்.
## Outstanding Subscription and the Prudence concept

பொதுவாக வருமதியாக உள்ள சந்தாக்கள் ஒரு சொத்தாகக் கருதப்படும். எனினும் நீண்ட காலமாக நிலுவையாக இருந்து வரும் சந்தாக்கள் ஒருபோதுமே வசூலிக்கப்படாமலும் போகலாம். எனவே இவ்வாறு நிலுவைச் சந்தாவுக்குள் கொண்டு வந்து இந்தொகையில் சொத்தாகக் காட்டுவது தவறானதாகும். முன்னெச்சரிக்கை எண்ணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவின்படி சொத்துக்களின் பெறுமதி கூட்டிக் காட்டப்படக்கூடாது. இதனால் நீண்ட காலமாக நிலுவையாக இருந்துவரும் சந்தாக்கள் புறக்கணிக்கப்பட்டு முடிவுக் கணக்குகள் தயாரிக்கப்படும்.

*[குறிப்பு: ஒரு பரீட்சையில் நீண்டகாலமாக நிலுவையாக இருந்து வரும் சந்தா தொடர்பாக அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படாவிடில் வழமைபோல வருமதி சந்தாவாக-சொத்தாக காட்டவேண்டும்]*

## ஆயுட்கால அங்கத்துவ சந்தா
## Life Membership Subscription

கழகங்கள், சங்கங்களில் சில அங்கத்தவர்கள் ஆயுட்கால அங்கத்துவத்திற்காக ஒரு தொகையைக் கொடுப்பனவு செய்யலாம். அதாவது ஒரு கணிசமான தொகையை தற்போது செலுத்துவதன் மூலம் குறித்த நபர் தனது ஆயுட்காலம் முழுவதும் அவ் அமைப்பின் அங்கத்தவராக இருந்து அதன் வசதிகளை அனுபவிக்க முடியும். இவ்வாறு ஒரு தொகைப்பணம் பெறப்படும் போது அவ் அங்கத்தவர் பணத்தைச் செலுத்திய வருடத்துக்கான வருமானமாக முழுத் தொகையையும் வருமானச் செலவுக் கணக்கில் காட்டமுடியாது. அத்தொகை ஆயுட்கால அங்கத்துவ சந்தா கணக்கில் செலவு வைக்கப்பட்டு, வருடாந்தம் பொருத்தமான ஒரு தொகை அக்கணக்கிலிருந்து வருமானச்செலவு கணக்கிற்கு மாற்றப்படும். பொருத்தமான தொகை ஆனது குறித்த கழகத்தின் / சங்கத்தின் செயற்குழுவினால் தீர்மானிக்கப்படும். இவ்வாறு குறித்த தொகை வருமானச் செலவு கணக்கிற்கு மாற்றப்பட்டபின் ஆயுட்கால அங்கத்துவ சந்தா கணக்கில் எஞ்சியுள்ள மீதி, வருடாந்தம் வருமானச் செலவு கணக்கிற்கு பகிர்ந்தளிக்கப்படும் வரை ஐந்தொகையில் ஒரு பொறுப்பாக காட்டப்பட வேண்டும்.

## நன்கொடைகள்
## Donations

நன்கொடையானது ஒரு சொத்து வடிவில் (உ-ம்: காணிகட்டிடம் / தளபாடம்/ உபகரணம்) பெறப்படுமாயின் நன்கொடைப் பெறுமதி ஐந்தொகையில் திரண்ட நிதியுடன் காட்டப்படும். குறித்த சொத்து, சொத்துப்பக்கத்தில் ஒரு சொத்தாக நிரற்படுத்தப்படும். இது வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்படக்கூடாது.

நன்கொடை பணவடிவில் பெறப்படும்போது அது மீண்டெழாத, பெரிய தொகையாக இருந்தால் திரண்ட நிதியுடன் கூட்டப்படும். மாறாக சிறுதொகைப்பணம் நன்கொடையாகப் பெறப்படும் போது அது ஒழுங்கான, மீண்டெழும் தன்மை கொண்டதாக இருக்குமாயின் வருமானமாக வருமானச் செலவு கணக்கில் காட்டப்படும். வருமானச் செலவுக் கணக்கானது அவ் வருடத்தின் சாதாரண செயற்பாட்டைப் பிரதிபலிப்பதாக அமையவேண்டும் என்பதே பொதுவாக பின்பற்ற வேண்டிய கோட்பாடாகும்.

## பிரவேசக் கட்டணங்கள்
## Entrance Fees

புதிய அங்கத்தவர்கள் சேர்ந்து கொள்ளும்போது அவ் வருடத்துக்கான அங்கத்துவப் பணத்திற்கு மேலதிகமாக பிரவேசக் கட்டணம் ஒன்றைச் செலுத்த வேண்டும். இப்பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேசக் கட்டணங்கள் சாதாரணமாக அவை பெறப்படும் வருடத்திலேயே வருமான மாக காட்டப்படும். எனினும் குறித்த கழகமானது இத்தொகையை திரண்ட நிதியுடன் காட்டுவதற்கு தீர்மானிக்கலாம்.

பின்வரும் உதாரணம் மூலம் வருமானச் செலவுக்கணக்கினை தயாரிக்கும் முறை பற்றி விளங்கித் கொள்வோம்.

'இளஞ் சிட்டுக்கள்' விளையாட்டுக் கழகத்தின் பொருளாளரால் 31. மார்ச். 1994 இல் முடிவுற்ற ஆண்டுக்கு தயாரிக்கப்பட்ட கொள்ளல் கொடுத்தல் கணக்கு வருமாறு

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| மீதி கீ. கொ. வ 1. 4. 93: | | கழக கட்டிடத்திற்கு வெள்ளை | |
| கையிலுள்ள காசு | 196 | அடித்தல் | 580 |
| வங்கியிலுள்ள காசு | 5,250 | மைதான பராமரிப்பு | 1,500 |
| அங்கத்தவர் சந்தா: | | மதுபானசாலை விற்பனையாளர் | |
| சாதாரணம் | 1,575 | சம்பளம் | 5,800 |
| ஆயுள் | 800 | காப்புறுதி | 240 |
| வருடாந்த இரவு விருந்து - | | பொதுச் செலவுகள் | 1,100 |
| ரிக்கற் விற்பனை | 560 | கட்டிட சங்கத்தில் முதலீடு | 1,500 |
| மதுபானசாலை விற்பனைகள் | 21,790 | காரியதரிசிக்கு வெகுமானம் | 200 |
| நன்கொடை பெற்றது | 19[illegible] | வருடாந்த இரவு விருந்து செலவுகள் | 610 |
| | | புதிய தளபாடமும் பொருத்துகளும் | 1,870 |
| | | மதுபான சாலை கொள்வனவு | 13,100 |
| | | கழக கட்டிட வாடகை | 520 |
| | | மீதி கீ. கொ செ. 31. 3 94: | |
| | | கையிலுள்ள காசு | 239 |
| | | வங்கியிலுள்ள காசு | 3,102 |
| | 30,171 | | 30,171 |

பின்வரும் மேலதிக தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன

1) சாதாரண அங்கத்துவ சந்தா:

31 மார்ச் 1993 இல் முற்பணமாகப் பெற்றது 200/-
31 மார்ச் 1994 இல் முடிவுற்ற ஆண்டுக்காலத்தில் பெறப்பட்ட சந்தாவானது அடுத்துவரும் வருடத்திற்கென முற்பணமாகப் பெற்ற ரூ. 150/- ஐயும் உள்ளடக்கி யுள்ளது.

2) 1 ஏப்ரல் 1992 இல் ஆயுட்கால அங்கத்துவதிட்டமொன்று அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஆயுள் அங்கத்துவ சந்தா ரூ. 100/- இது பத்து வருட காலப்பகுதிக்கு வருமானமாக சேர்க்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது, இத்திட் த்தின் முதலாவது வருடத்தில் மொத்தமாக ரூ. 1100/- ஆயுட்கால அங்கத்துவ சந்தாவாக பெறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) 31 மார்ச் 93 இல் கழகத்திலுள்ள எல்லா தளபாட பொருத்துக்களும் 91 ஜனவரியில் ரூ. 8,000/- செலவில் வாங்கப்பட்டவையாகும். நிலையான சொத்துக்களுக்கு அவற்றின் வருட இறுதியிலுள்ள கொள்விலைப் பெறுமதியில் 10% பெறுமானத் தேய்வுக்கு ஏற்பாடு செய்வது கழகத்தின் கொள்கையாகும்.

4) கட்டிட சங்க முதலீட்டு கணக்கு மீதி 31 மார்ச் 93 இல் ரூ. 2676/- ஆக இருந்தது. 31 மார்ச் 94 இல் முடிவடைந்த வருட காலப்பகுதியில் ரூ. 278/- வட்டி முதலீட்டுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

5) கழகத்தின் ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும் வருமாறு

| | 31 . 3 . 93 | 31 . 3 . 94 |
|---|---|---|
| மதுபானச்சாலை இருப்பு | 1,860 | 2,110 |
| காப்புறுதி முற்பணம் | 70 | 40 |
| வாடகை நிலுவை | 130 | 140 |
| மதுபானச்சாலை கடன்கொடுத்தோர். | 370 | 460 |

தேவைப்படுவது.

அ) 31. மார்ச் 1994 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கழகத்தின் மதுபானச்சாலை வியாபார, இலாப நட்ட கணக்கு.

ஆ) கழகத்தின் 31. மார்ச் 1994 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கும் அத்திகதியிலுள்ள ஐந்தொகையும்.

**விடைகள்.**

'இளஞ்சிட்டுக்கள்' விளையாட்டுக் கழகத்தின் 31. மார்ச் 1994 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மதுபானச்சாலை வியாபார, இலாப நட்ட கணக்கு.

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு. | 1,860 | விற்பனைகள் | 21,790 |
| கொள்வனவுகள். | 13,190 | | |
| | 15,050 | | |
| கழி:- இறுதி இருப்பு. | (2,110) | | |
| விற்ற சரக்கின் கொ. வி. | 12,940 | | |
| மொத்த லாபம் மீ. கீ. செ. | 8,850 | | |
| | 21,790 | | 21,790 |
| மதுபானச்சாலை விற்பனையாளர் சம்பளம். | 5,800 | மொத்தலாபம். மீ. கீ. வ. | 8,850 |
| தேறிய லாபம் | 3,050 | | |
| | 8,850 | | 8,850 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 மார்ச் 1994 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானச் செலவு கணக்கு

| | தொகை ரூபா | | தொகை ரூபா |
|---|---|---|---|
| வருடாந்த இரவு விருந்து தேறிய செலவு (610—560) | 50 | | 190 |
| கட்டிடத்திற்கு வெள்ளை அடித்தல் செலவு | 580 | நன்கொடை பெற்றது. | 1,625 |
| மைதான பராமரிப்பு | 1500 | சந்தா: சாதாரணம் | 190 |
| காரியதரிசிக்கு வெகுமானம் | 200 | ஆயுள் | 278 |
| காப்புறுதி | 270 | பெற்றவட்டி (முதலீட்டிலிருந்து | |
| பொதுச்செலவுகள் | 1,100 | மதுபானச்சாலை தேறியலாபம் | 3,050 |
| கட்டிட வாடகை | 530 | | |
| தளபாட பெறுமானத் தேய்வு | 987 | | |
| செலவிலும் கூடிய வருமானம் | 116 | | |
| | 5,333 | | 5,333 |

## 31 மார்ச் 1994 இல் அன்றுள்ளபடி ஐந்தொகை

| | | தொகை ரூபா | | | தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| திரண்ட நிதி | 13 962 | | நிலையான சொத்துக்கள்: | | |
| கூட்டு: செலவிலும் கூடிய வருமானம் | 116 | 14,078 | தளபாட பொருத்துகள் | 9870 | |
| | | | கழி: பெறுமானத் தேய்வு ஏற்பாடு | (3387) | 6,483 |
| ஆயுட்கால அங்கத்துவ சந்தா | | 1,600 | கட்டிட சங்கத்தில் முதலீடு | | 4,454 |
| நடைமுறைப் பொறுப்புக்கள்: | | | நடைமுறைச் சொத்துக்கள்: | | |
| சடன் கொடுத்தோர் | 460 | | மதுபானச் சாலை இருப்பு | 2,110 | |
| வாடகை நிலுவை | 140 | | காப்புறுதி முற்பணம் | 40 | |
| சந்தா முற்பணம் | 150 | 750 | கையிலுள்ள காசு | 239 | |
| | | | வங்கியிலுள்ள காசு | 3,102 | 5,491 |
| | | 16,428 | | | 16,428 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்கைகள்.**

ஆரம்ப நிலைபரக்கூற்று – (1. ஏப்ரல் 94 இல்)

| | | | |
|---|---|---|---|
| திரண்ட நிதி | 13,962 | தளபாட பொருத்து | 8,000 |
| ஆயுட்கால அங்கத்துவ சந்தா (1100 – 110) | 990 | கழி பெ. தேய்வு ஏற்பாடு | (2,400) |
| | | | 5,600 |
| கடன் கொடுத்தோர் | 370 | கட்டிட சங்கத்தில் முதலீடு | 2,676 |
| வாடகை நிலுவை | 130 | மதுபானசாலை இருப்பு | 1,860 |
| சந்தா முற்பணம் | 200 | காப்புறுதி முற்பணம் | 70 |
| | | காசு | 196 |
| | | வங்கி | 5,250 |
| | 15,652 | | 15,652 |

சாதாரண சந்தா க/கு

| | | | |
|---|---|---|---|
| வ/செ. க/கு | 1,625 | மீ கீ. வ (முற்பணம்) | 200 |
| மீ. கீ. செ | 150 | வங்கி | 1,575 |
| | 1775 | | 1,775 |

மதுபானசாலை கடன் கொடுத்தோர் க/கு

| | | | |
|---|---|---|---|
| வங்கி | 13,100 | மீ கீ வ | 370 |
| மீ.கீ. செ | 460 | கொள்வனவு | 13,190 |
| | 13,560 | | 13,560 |

வாடகை க/கு

| | | | |
|---|---|---|---|
| வங்கி | 520 | மீ. கீ. வ. | 130 |
| மீ. கீ. செ | 140 | வ/செ. க/கு | 530 |
| | 660 | | 660 |

தளபாட பொருத்து க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ. கீ. வ | 8,000 | மீ கீ செ | 9,870 |
| வங்கி | 1,870 | | |
| | 9,870 | | 9,870 |

கட்டிட சங்க முதலீட்டு க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ. கீ. வ. | 2,676 | மீ. கீ. செ. | 4,454 |
| வங்கி | 1,500 | | |
| பெற்றவட்டி | 278 | | |
| | 4,454 | | 4,454 |

தளபாட பொருத்து பெறுமானத்தேய்வு க/கு

| | | | |
|---|---|---|---|
| பெ.தே.ஏற்பாடு | 987 | வ/செ. க/கு | 987 |
| | 987 | | 987 |

காப்புறுதி க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ கீ வ | 70 | வ/செ க/கு | 27 |
| வங்கி | 240 | மீ கீ செ | 40 |
| | 310 | | 310 |

தளபாட பொருத்து பெ.தே. ஏற்பாட்டு க/கு

| | | | |
|---|---|---|---|
| மீ.கீ.செ. | 3387 | மீ.கீ வ. | 2400 |
| | | பெ.தேய்வு | 987 |
| | 3387 | | 3387 |

ஆயுட்கால அங்கத்துவ சந்தா க/கு

| | | | |
|---|---|---|---|
| வ/செ. க/கு | 190 | மீ.கீ. வ. (1100–1010) | 990 |
| மீ.கீ.செ. | 1600 | வங்கி | 800 |
| | 1790 | | 1790 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:

★ தளபாட பொருத்து பெறுமானத்தேய்வு ஏற்பாடு - ஆரம்ப மீதி பின்வருமாறு கணிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 31.03. | 91 | இல் | 800 |
| 31.03. | 92 | இல் | 800 |
| 31.03. | 93 | இல் | 800 |
| | | | 2,400 |

★ 31. மார்ச் 94 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானமாக காட்ட வேண்டிய ஆயுட்கால அங்கத்துவ சந்தா:-

| | |
|---|---|
| 31.03.93 இல் முடிவுற்ற ஆண்டுக்காலத்தில் பெற்றது | 1,100/- |
| 31.03 94 இல் முடிவுற்ற ஆண்டு காலத்தில் பெற்றது | 800/- |
| | 1,900 |

ரூ. 1,900/- இன் 10% இவ்வாண்டு வருமானமாக காட்டப்பட்டுள்ளது.

★ நன்கொடையானது ஒப்பீட்டு ரீதியில் மிகச் சிறிய தொகையாக இருப்பதால் அது வருமானத்தைச் செலவுக் கணக்கில் வருமானமாகக் /காட்டப்பட்டுள்ளது.

செல்வி தனேஸ்வரி பொன்னையா
விரிவுரையாளர்,
முகாமைத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## உசாத்துணை நூல்கள்

1. **Business Accounting 1 — Sixth edition**
— Frank Wood

2. **A Practical Foundation in Accounting — Third edition**
— Harry Johnson and Austin Whittam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் அதன் வகைகளும்

விஞ்ஞானம் என்பதற்கு பலவிதமான வரைவிலக்கணங்கள் உண்டு அவற்றுள் சில வருமாறு.

விஞ்ஞானம் என்பது அனுபவரீதியான காரணகாரியத் தொடர்பைத் தெளிவுபடுத்தக் கூடிய தர்க்க ரீதியானதும் சர்வவியாபகத் தன்மை வாய்ந்ததுமான அறிவே விஞ்ஞான மென நவீன முறையியலாளர்களின் கருத்தாகும். இதனையே ஒவ்வொரு முறையியலாளர்களும் பல்வேறு விதமாகக் கூறுகின்றனர். அதாவது 'அனுபவச் சோதனைகளால் ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவு' என நெகல் குறிப்பிடுகின்றார். தோமஸ் கூனின் கருத்துப் படி இயற்கையைப் பற்றி, சமூகத்தைப்பற்றி திருப்திகரமான விளக்கத்தைத் தரும் அறிவே விஞ்ஞானம்' என்றார். கெம்பல் என்பவர் 'அனுபவரீதியானதும் எதிர்வுகூறக் கூடியதும் சர்வவியாபகத் தன்மை வாய்ந்ததாகவும் அமையும் அறிவே விஞ்ஞானம்' என்றார். மேலும் விஞ்ஞானம் என்பது பற்றி விஞ்ஞானம் முறைகளூடாகப் பெறப் படும் அறிவு, ஒழுங்குபடுத்தப்பட்ட ஆய்வின் மூலமாகப் பெறப்படும் திருப்திகரமான அறிவு இவ் வகையில் நியம விஞ்ஞானங்கள் பௌதீக விஞ்ஞானங்கள், உயிரியல் விஞ் ஞானங்கள், சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மேலும் விஞ்ஞானம் என்பது விஞ்ஞானிகளால் எழுதப்படும் விஞ்ஞானப் பிரச்சனைக்குரிய திருப்திகரமான விளக்கங்கள் அத்துடன் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ள விடயங்கள் அனைத் தையும் உள்ளடக்கியது விஞ்ஞானம் எனப்படுகிறது ஆனாலும் தற்போது காள் பொப்பரின் கருத்து பெரும் முக்கியம் பெறுகிறது. அதாவது "அனுபவ சோதனைகளின் மூலம் பொய்ப்பிக்கப்படக்கூடிய அறிவே விஞ்ஞானம்" என்கிறார். பொப்பரின் கருத்துப் படி அனுபவசோதனைகளின் மூலம் பொய்ப்பிக்க முடியாதவை விஞ்ஞானமல்லாதவை யாகும். எனவே பொப்பரின் கருத்துப்படி சமயம், சோதிடம், கைரேகை, சாஸ்திரம் போன்றனவும் அனுபவ விஞ்ஞானங்கள் என மயக்கத்தை ஏற்படுத்தக் கூடிய உளப் பகுப்பாய்வுக் கோட்பாடு, மாக்சியக் கோட்பாடு போன்றனவும் விஞ்ஞானமல்லாத வையாகும் எனவே பொப்பரின் கருத்துப்படி விஞ்ஞானத்தையும் விஞ்ஞானமல்லாத வற்றையும் வேறுபடுத்துவது தூய கணிதம், அளவையியல் போன்ற நியம விஞ்ஞானங் களுக்குப் பொருந்தாது. இவ்வாறாக விஞ்ஞானத்திற்கு பலவாறாக பலவிதமான கோணங் களில் பல விதமான வரைவிலக்கணங்கள் கூறப்படுவதை நாம் அவதானிக்கலாம். இதில் காள் பொப்பரின் கருத்து விஞ்ஞானத்தையும் விஞ்ஞானமல்லாதவற்றையும் வேறுபடுத் தும் ஒரு பிரமாணமாய் அமைவதுடன் விஞ்ஞானப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவ துடன் விஞ்ஞானம் முன்னேறுகின்றது.

விஞ்ஞான வகைகள் என்பதைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

(i) விஞ்ஞானம்

- நியமம் கூறும் விஞ்ஞானம்
- நியம விஞ்ஞானம்
- நியமமில் விஞ்ஞானம்
  - சமூகத் துறைகள்
  - இயற்கைத் துறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

(ii) விஞ்ஞானம்

- தூயவிஞ்ஞானம்
  - அனுபவ விஞ்ஞானம்
    - இயற்கை விஞ்ஞானம்
      - பௌதிக விஞ்ஞானம்
      - உயிரியல் விஞ்ஞானம்
    - சமூக விஞ்ஞானம்
  - அனுபவம்சாரா விஞ்ஞானம்
- பிரயோக விஞ்ஞானம்

நியமம் கூறும் விஞ்ஞானத்தினை உயர் நெறி விஞ்ஞானம், மதிப்பீட்டு விஞ்ஞானம் விடையீ விஞ்ஞானம், மேல் வரம்பிட்ட விஞ்ஞானம், கௌரவ விஞ்ஞானம் எனவும் அழைப்பர். நியமம் கூறும் விஞ்ஞானம் என்பது விதிகள் கோட்பாடுகளை விளக்குவதோடு அதன் வழியே ஒழுகுவதனையும் வலியுறுத்துகின்றது. இதனை மதிப்பீட்டு விஞ்ஞானமெனக் கூறுவதற்குக் காரணம் தனிமனித, சமூக தொடர்புகளுடன் தொடர்பு பட்டதாகும். அனுபவம் சார்ந்த அறிவாகவும் சில நியமங்களை வலியுறுத்தும் அறிவாகவும் அமைகின்றது. இதற்கு உதாரணமாக அழகியல், ஒழுக்கவியல், தொகுத்தறி அளவையியல் போன்ற துறைகள் உள்ளடங்கும். இவற்றுள் கற்பனை, ஊகங்கள், விருப்பங்கள் போன்றன இடம்பெறும். இவை பொதுவாக ஏதாவது ஒன்றின் பெறுமதியை மதிப்பீடு செய்வதனை நோக்கமாகக் கொண்டவை.

நியம விஞ்ஞானத்தை வகுமுறை விஞ்ஞானம், வடிவ விஞ்ஞானம், உய்த்தறி விஞ்ஞானம், விடைய விஞ்ஞானம், அனுபவம் சாரா விஞ்ஞானம் எனவும் அழைப்பர். நியம விஞ்ஞானம் என்பது அனுபவத்தைச் சாராது அல்லது பொருள் உண்மையை நோக்காது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக விதிமுறைகளைப் பெறும் இயல்களே அதாவது அனுபவத்தை சாராத உய்த்தறி முறைகளை அடிப்படையாகக் கொண்ட இயல்களே நியம விஞ்ஞானமாகும். இவ் விஞ்ஞானம் பகுத்தறிவை மாத்திரமே பயன்படுத்துகின்றது இவற்றின் முடிவு நிச்சயத் தன்மை வாய்ந்தது நியம விஞ்ஞானங்கள் உய்த்தறி முறைகளைப் பயன்படுத்துகின்றது.

அதாவது இவற்றை அனுபவசோதனைகளின் மூலம் பொய்ப்பிக்க முடியாது இதற்குள் உதாரணமாக தூயகணிதம், அளவையியல் (உய்த்தறி அளவையியல்) என்பன உள்ளடங்கும். இவற்றை விஞ்ஞானமாக ஏற்றுக் கொள்வதற்குக் காரணம் அனுபவத்தைச் சாராது உய்த்தறி முறைகளை அடிப்படையாகக் கொண்டது அத்துடன் அனுபவரீதியான விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்படும் விஞ்ஞான முறைகள் விஞ்ஞானக்கோட்பாடுகளில் இவை முக்கியமான பகுதியாக விளங்குவதுடன் விஞ்ஞானத்தில் திட்டவட்டமானதும் அதி செம்மையானதுமான முடிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் விஞ்ஞான உண்மைகளை நிறுவிக் காட்டுவதற்கும் இவை உதவியாகின்றன. இதனாலேயே தான் இவற்றை நாம் விஞ்ஞானமாகக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமமில் விஞ்ஞானத்தை விபரிப்பு விஞ்ஞானம், அனுபவ விஞ்ஞானம், விபரண விஞ்ஞானம், நோநிலை விஞ்ஞானம் எனவும் அழைப்பர். இதற்குள் சமூகத்துறைகளும் இயற்கைத்துறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. விபரிப்பு விஞ்ஞானம் என்பது உள்ளதை உள்ளவாறு விபரிப்பதாக அதாவது கூறுவதாக அமைகின்றன. இவை தனிமனித, சமூக அனுபவங்களைச் சார்ந்த துறைகளாகும். அதாவது இருப்பிலுள்ள உலகப் பொருட்களை உள்ளவாறே விபரிப்பதனை நோக்கமாகக் கொண்டவை இவ் விஞ்ஞானம் புலக் காட்சி, பகுத்தறிவு என்பவற்றை பயன்படுத்துவன இவற்றின் முடிவு நிகழ்திறன் வாய்ந்ததாக அமைந்திருக்கும் இவ் விஞ்ஞானங்கள் தொகுத்தறிமுறை, உய்த்தறிமுறை ஆகிய இரு முறைகளையும் பயன்படுத்துகின்றன. அவதானம், பரிசோதனை போன்ற அனுபவச் சோதனைகள் இவற்றில் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றன. இயற்கைச் சூழல், தனிமனித நடத்தை, சமூக நடத்தைகளை விளக்குவனவாகவும் அவற்றுக்கிடையிலான தொடர்புகளை ஆராய்வனவாகவும் காணப்படுகின்றன.

தூய விஞ்ஞானம் என்பது அறிவைப் பெறுவதனை நோக்கமாகக் கொண்டமைந்த விஞ்ஞானமாகும். மேலும் மக்களது அன்றாட பயன்பாட்டிற்கு நேரடியாக பயன் படாத விதிகள் கோட்பாடுகளை சார்ந்ததாக் காணப்படும். இவ் விஞ்ஞானத்திற்குள் அடங்குவன பௌதிகம், இரசாயனம், விலங்கியல். தாவரவியல், வானியல். நிலச்சரிதவியல், உடலியல், உயிரியல் போன்ற அனுபவ விஞ்ஞானங்களும் அளவையியல், தூய கணிதம் எனும் அனுபவமில் விஞ்ஞானங்களும் தூய விஞ்ஞானங்களாகும்.

பிரயோக விஞ்ஞானம் என்பது விஞ்ஞானத்தின் வாயிலாகப் பெற்ற அறிவைப் பயன்படுத்தி செயல்களைச் செய்வதற்கும் பொருட்களை உருவாக்குவதற்கும் உதவுவதே பிரயோக விஞ்ஞானமாகும். அதாவது விதிகள் கோட்பாடுகளை மக்களது அன்றாட பயன்பாட்டிற்குப் பயன்படுத்தும் துறைகளாகவே காணப்படும். இதற்குள் மனைப் பொருளியல், மிருக வளர்ப்பு, காடு வளர்ப்பு, விவசாயம், மருத்துவம், பொறியியல், சத்திர சிகிச்சை, ஆசிரியர் தொழில் போன்றன பிரயோக விஞ்ஞானத்தில் அடங்குவனவாகும். மேலும் பிரயோக விஞ்ஞானம் தூய விஞ்ஞான அறிவைப் பயன்படுத்துகின்றது. உதாரணமாக மிருக வளர்ப்பு எனும் பிரயோக விஞ்ஞானம் உடலியல் விலங்கியல் எனும் தூய விஞ்ஞானங்களைப் பயன்படுத்துகின்றது. விவசாயம் எனும் பிரயோக விஞ்ஞானம் தாவரவியல் எனும் தூய விஞ்ஞானத்தைப் பயன்படுத்துகின்றது. மருத்துவம் எனும் பிரயோக விஞ்ஞானம தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல் எனும் தூய விஞ்ஞானங்களைப் பயன் படுத்துகின்றது. இன்று ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது பெருமளவிற்கு விஞ்ஞானத்திலேயே தங்கியுள்ளது. இந்த வகையில் தூய விஞ்ஞானம் ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும். எனினும் ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு தூய விஞ்ஞானம் பிரயோக விஞ்ஞானத்தினூடாக மட்டுமே உதவ முடியும்.

இயற்கை விஞ்ஞானம் என்பது. இயற்கை அல்லது இயற்கை உலகு பற்றி ஆராயும் ஓர் அறிவுத் துறையே இயற்கை விஞ்ஞானமாகும். இயற்கை விஞ்ஞான ஆராச்சிக்குள் உயிருள்ளவையும் உயிரற்றவையும் அடங்குகின்றன. இயற்கை விஞ்ஞானங்கள் பெருமளவிற்கு புறவயப் பண்பினைக் கொண்டவை. இதனால் இவற்றுள் ஆராயப்படும் விடயங்களுள் அநேகமானவற்றை நேரடியாகக் கண்டு கொள்ள முடியும். அத்துடன் இயற்கை விஞ்ஞானங்கள் பெருமளவிற்கு ஒருமைக் காரணங்களைக் கொண்டவை மேலும் இவ் விஞ்ஞான நேர்வுகளும் நிகழ்ச்சிகளும் அடிக்கடி மாறும் தன்மை உடையவையல்ல. இயற்கை விஞ்ஞானத்தில் ஆய்வாளன் மனிதன் ஆய்வுப் பொருள் மனிதனுக்குப் புறத்தே உள்ள பொருட்களும் நிகழ்ச்சிகளும் ஆகும். எனவே இயற்கை விஞ்ஞானத்தில் ஆய்வாளனது ஒரு பக்கச் சார்பு, சுயநல மனப்பான்மை, சுய விருப்பு வெறுப்பு, தனிப்பட்ட அபிப்பிராயங்கள் போன்ற அகவயக் கூறுகளின் தாக்கங்களுக்கு உட்படுவதில்லை. இதனால் இயற்கை விஞ்ஞானத்தில் மிகச் சுதந்திரமான முறையில் ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். இயற்கை விஞ்ஞானத்திற்குள் பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் என்பன அடங்கும். இதில்

பௌதிக விஞ்ஞானம் என்பது இயற்கையிலுள்ள உயிரற்ற பொருட்கள் நிகழ்ச்சிகள், நிலமைகள் என்பன பற்றி ஆராய்ந்து அறிந்து விளக்குவதே இதுவாகும். இதற்குள் பின்வருவன அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) பௌதிகவியல்:- (மின்னியல், காந்தவியல், மின்காந்தவியல், இயக்கவியல், நீர்நிலையியல், வெப்பவியல், ஒலியியல், ஒளியியல்)
2) இரசாயனம் / இரசாயனவியல்
3) வானியல் / வானசாஸ்திரம்
4) நிலச்சரிதவியல் / புவிச்சரிதவியல் / பூகற்பவியல் / கல்லியல்

உயிரியல் விஞ்ஞானம் என்பது உயிரினங்களின் தோற்றம், அமைப்பு, வாழ்க்கை முறை, நடத்தைகள் என்பன பற்றி ஆராய்ந்து அறிந்து விளக்குவதே இதுவாகும். இதற்குள் பின்வருவன அடங்கும். தாவரவியல், விலங்கியல், நுண் உயிரியல், பிறப்பியல், உடலியல், நுண்பாக உயிரியல், உயிரியல் இரசாயனம் இழையவியல் போன்றனவாகும்.

சமூக விஞ்ஞானம் என்பது ஓர் சமூகத்துடன் தொடர்புடைய மனித நடத்தைகள் பற்றிய ஆய்வே இதுவாகும், சமூக விஞ்ஞான ஆய்வுகள் தனிமனித நடத்தை பற்றிய தாகவோ அல்லது குழு நடத்தை பற்றியதாகவோ அமையலாம். சமூக விஞ்ஞானம் பெருமளவிற்கு அகவயப் பண்பினைக் கொண்டவை. இதனால் இவ் விஞ்ஞானத்தில் ஆராயப்படும் விடயங்களுள் அநேகமானவற்றை நேரடியாகக் கண்டு கொள்ள முடியாது. சமூக விஞ்ஞானங்கள் பெருமளவிற்கு பன்மைக் காரணங்களைக் கொண்டவை. அத்துடன் இவ் விஞ்ஞான நேர்வுகளும் நிகழ்ச்சிகளும் சந்தர்ப்ப சூழ்நிலைக் கேற்ப அடிக்கடி மாறும்தன்மை உடையவை. சமூக விஞ்ஞானத்தில் ஆய்வாளனும் ஆய்வுப் பொருளும் மனிதனே. இதனால் சமூக விஞ்ஞானத்தில் ஆய்வாளனது ஒரு பக்கச் சார்பு, சுயநல மனப்பான்மை, சுயவிருப்பு வெறுப்பு, தனிப்பட்ட அபிப்பிராயங்கள் போன்ற அகவயக் கூறுகளின் தாக்கங்களுக்கு உட்பட அதிக வாய்ப்புண்டு. இதற்குள் பின்வருவன அடங்குகின்றன. அரசியல், பொருளியல், வரலாறு அல்லது சரித்திரம், மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், புதை பொருளியல் போன்றன. இவற்றுள் அடங்குவனவாகும்.

இவ்வாறு பலவாறு விஞ்ஞானத்தைப் பிரிப்பதன் மூலமாக எல்லா இயல்களையும் அடக்குவதோடு அவ் இயல்கள் எவ்வெத் துறைகளைச் சார்ந்ததாக அமைகின்றன. என்பதைத் தெட்டத் தெளிவாக அறிந்து கொள்ளக் கூடியதாக அமைகின்றது.

தா. உஷா
13 வர்த்தகம்


வாழ்த்துகின்றோம்

ஸ்ரீதேவி தையல் அகம்

ஆண்களின் ஆடைகள் நவீன முறையில்
தைத்துக் கொடுக்கப்படும்.

பிரதான வீதி, — சங்கானை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது குடியரசு அரசியலமைப்பில் "ஜனாதிபதி"

இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சியிலே 1978 ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியலமைப்பானது முக்கியமானதாக இருக்கின்றது. இவ் அரசியலமைப்பானது இதுவரை இல்லாத வகையில் ஒரு பலமான நிர்வாகியை ஏற்படுத்தியது. அவரே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாவர். இவ்வரசியலமைப்பின் முக்கிய குறிக்கோள் இலங்கையை ஒரு ஜனநாயக சோஷலிசக் குடியரசாக அமைப்பதாகும் எனக் கூறப்பட்டது. இந்த அரசியலமைப்பின் மூலகர்த்தா இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆவர். இந்த அரசியலமைப்பானது இலங்கையில் முன்பிருந்த அரசியலமைப்புக்களிலிருந்து பெரிதும் விலகி நிற்கின்றது. காரணம் இவ்வரசியலமைப்பு இலங்கையை ஜனாதிபதி ஆட்சி முறைக்குகீழ் கொண்டு வருகின்றது. அத்துடன் இவ்வாட்சி முறை இதுவரை இருந்து வந்த ''வெஸ்ட் மினிஸ்ரர்'' ஆட்சி முறைக்கு முடிவு கட்டியுள்ளது.

1977 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடந்த பொதுத் தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று ஆகிகாரத்திற்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியே, 1978 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இவ்வரசியலமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இதன்படி இலங்கை இதுவரை நான்கு ஜனாதிபதிகளையும் மூன்று ஜனாதிபதித் தேர்தல்களையும் சந்தித்துள்ளது. இவ்வாண்டு (1994) நவம்பர் மாதம் 9 ஆம் திகதி இலங்கை மக்கள் மூன்றாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் பங்கு கொண்டார்கள். ஒரு பலம் வாய்ந்த நிர்வாகியைக் கொண்ட அரசாங்க முறையை ஏற்படுத்த வேண்டுமென்ற ஐக்கிய தேசியக் கட்சியினுடைய நீண்டகால விருப்பத்தின் வடிவமே இந்த ஜனாதிபதி ஆட்சி முறையாகும். இந்த ஜனாதிபதி ஆட்சி முறையானது நடைமுறைக்கு வந்த காலத்திலிருந்து இன்று வரை பல விதமான வாதப் பிரதி வாதங்களுக்குட்பட்டதாகவே இருந்து வருகின்றது. இதற்குக் காரணம் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பானது ஜனாதிபதிக்கு வழங்குகின்ற மட்டற்ற அதிகாரங்களே ஆகும். பாராளுமன்றத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடுக்காத ஒரு நிர்வாகியாக ஜனாதிபதி இருந்து வருகின்றார். இலங்கையின் இரண்டாவது குடியரசு அமைப்பானது தென்னாசிய நாடுகளில் உருவாக்கப்பட்ட ஒரு விறைப்பான அரசியலமைப்பு என்ற கண்டனத்திற்குள்ளும் உள்ளாகின்றது. இவ்வரசியலமைப்பை பேராசிரியர் ஏ. ஜே. வில்சன், சட்டறிஞர் நீலன் திருச்செல்வம், பேராசிரியர் பீரிஸ் போன்றோர் இன்றும் பல விதமாக விமர்சிக்கின்றார்கள். இலங்கையின் ஜனாதிபதிப் தனியானது, பிரான்ஸ் ஜனாதிபதிப் பதவியின் அம்சங்களையும், அமெரிக்க ஜனாதிபதிப் பதவியின் அம்சங்களையும் அடியாதாரமாகக் கொண்டுள்ளது. ஆனால் அமெரிக்க ஜனாதிபதிக்கோ அல்லது பிரான்சு ஜனாதிபதிக்கோ இல்லாத அதிகாரங்களை இரண்டாவது குடியரசு அரசியல் திட்டம் இலங்கை ஜனாதிபதிக்கு வழங்குகின்றது. இலங்கை ஜனாதிபதி அரசின் அதிபதியாகவும், நிர்வாகத்துறையினதும், அரசாங்கத்தினதும், தலைவராகவும், அத்துடன் ஆயுதப்படைகளின் பிரதம தலைவராகவும் விளங்குகின்றார். ஜனாதிபதிப் பதவியினால் பெருமையடைகின்ற நாடுகளாக அமெரிக்காவும், பிரான்சும் விளங்குகின்றன. அவ்வாறானதொரு பெருமையை இலங்கை தனது ஜனாதிபதிப் பதவியினால் பெறறுக்கொள்ளவில்லை. ஏனெனில் இலங்கை மக்கள் ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாமல் செய்வதற்கான ஒரு மறைமுகமான அங்கீகாரத்தை தற்போதைய ஜனாதிபதி திருமதி. சந்திரிக்கா குமாரதுங்காவிற்கு வழங்கியுள்ளார்கள். தனது கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி ஜனாதிபதி ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையை இல்லாது ஒழித்து மீண்டும் "வெஸ்ட்ட "மினிஸ்டர் ஆட்சி முறையை கொண்டு வரும் என பொதுத் தேர்தலின் போதும், ஜனாதிபதித் தேர்தலின் போதும் அறிவித்திருந்தார். 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சந்திரிகா குமாரதுங்க இருபது இலட்சத்திற்கும் அதிகமான மேலதிக வாக்குகளைப் பெற்று நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார். இவர் 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கு முன்பாக ஜனாதிபதியாட்சி முறையை இல்லாது செய்வதாகக் கூறியுள்ளார். பொதுத் தேர்தலிலும், ஜனாதிபதி தேர்தலிலும் வெற்றி பெற்றிருக்கின்ற பொதுஜன ஐக்கியமுன்னணி அரசாங்கமானது நடைமுறையில் இருந்து வருகின்ற ஜனாதிபதி ஆட்சி முறைக்கு ஆப்பு வைத்துவிடக் கூடிய சான்றுகள் தோன்றியுள்ளன.

## இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்கள்:

| ஆண்டுகள் | முக்கிய போட்டியாளர்கள் | கட்சி | பெற்ற வாக்குகளின் வீதம் |
|---|---|---|---|
க்ஷணிகலிங்கம் என்பது உடனுக்குடன் பூசனை செய்வதற்காக மணல் கோமயம் அரிசிமா, சக்கரை முதலியவற்றால் சிவலிங்க வடிவாகச் செய்யப்படுவது. பரார்த்த லிங்கம் என்பது நாட்டில் எல்லா மக்களும் வழிபடும் பொருட்டு ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யும் மூலதான லிங்கம். இதை ஆக்கும்லிங்கம் எனவும் வழங்குவர். இது பெரும் பாலும் கருங்கற்களால் செய்யப்படும். ஆலயத்தில் மூலதனத்து லிங்கத்தை விட ஆலய கோபுரப் பலிபீடம் முதலியவும் லிங்கம் எனவும் கூறப்படும் வழக்கமுண்டு. மூலதனத்தில் உள்ளதை ஆக்குமலிங்கம் என்றால் போல வெளியில் அமைந்துள்ள கோபுரத்தை தூலலிங்கம் என்றும் பலி பீடத்தை பத்திரலிங்கம் எனவும் அழைப்பர்.

ஆன்மார்த்த லிங்கம் என்பது விசேட தீட்சை பெற்றவர் ஒருவர் தமது குருவினால் எழுந்தருளபபண்ணிக் கொடுக்கப்பெற்ற சிவலிங்கத்தைத் தமது ஆன்மா ஈடேற்றத்துக்காகத் தாம் தம் பூசையறையில் பூசித்து வரும் இலிங்கமாகும். இதை இஷ்டலிங்கம் எனவும் கூறுவர். இன்னும் உடையர் பூசை என்பதும் இதுவேயாகும்.

சங்கமம்:-

சங்கமம் என்பது அடியார்களிடம் சிவபெருமான் ஆலயங்களில் எழுந்தருளி இருப்பதை போல அடியார் இதயத்திலும் எழுந்தருளியிருப்பார். அன்பு பீடத்தை விரும்பி அவருள் தாமும் ஒருவராய் கலந்துறைவார் அடியார் என்பது சிவனடியாரையே குறிக்கும். அவரைத் தொண்டர் என்றும் கூறுவர். "தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே" என்று ஔவையார் கூறியுள்ளார். தொண்டர்கள் சிவபெருமானின் திருவடிப்பற்றை விட வேறு எவ்வித பற்றும் இல்லாதவர். அவர்களையே திருவள்ளுவர் நீத்தார் பெருமையிலும் வியந்து பாராட்டியுள்ளார்.

தொண்டர்கள் பெருமையை பெரிய புராணம் பேசுகின்றது. அது தொண்டர் புராண மாதலால் அக்கதை என்றும் பெரியபுராணம் என்றும் பெயர் பெற்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளே தாம் தொண்டர்களுக்கு அடியவன் என்றும் தொண்டர்களுக்கு தொண்டன் என்றும் பாடியருளியுள்ளார். அடியவராகிய தொண்டர் உலகவாழ்க்கையை வெறுத்து இறைவன் பொற்பாதத்தைப் பற்றினவர். ஆதலால் திருதொண்டர்களின் பாதங்களை நாம் மனமகிழ்ந்து கை குவித்துவணங்குதல் வேண்டும் என்று சைவசமய நெறி கூறுகின்றது. இவ்வணக்கம் இவருக்கன்று சிவனிடத்து வேறறநிற்கும் சிவபெருமானுக்கேயாம்.

சங்கமம் எனப்படும் சிவனடியார் உறவும், பகையும் இல்லாதவர். திருவருளின்பம் ஒன்றே நிலையானதெனக் கொள்பவர். அவர்கள் சீலத்தாலும், நோன்பினாலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிவிலும், அறிவிலும், அன்பிலும், அருளிலும் சிறந்து விளங்கியவர். அவர்கள் மாதேவர்க்கு ஏகாந்தராய் ஒழுகுபவர். அதனால் பழுதிலாத் துறவும் பண்புடனும் பக்தியுடனும் பூண்டவர். சிவத்தினைப் பிரியாச் சிந்தையர். ஆண்டில் இளைஞராய் இருப்பினும் ஞானத்தால் முதிர்ந்து இருப்பார்.

ஐந்தெழுத்து மந்திரமும் அடியார் கூட்டமும் மலவாதனை உண்டாகாதவாறு தடுக்கும். வீடுபேறு அடைவதற்கு அடியார் கூட்டம் சிறந்த சாதனமாகும். ஆகவே தான் மாணிக்கவாசகர் இறைவனை அழுது பின்வருமாறு பாடியுள்ளார்.

> "அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்"

இத்தகைய சிவனடியார்கள் கூட்டம் இன்று நேற்று உண்டானதல்ல. இவர்கள் படிவடியார் எனவும் பத்தாகிய தொண்டர் எனவும் திருமுறைகளிற் போற்றப்படுவதால் திருமுறை எழுந்த காலத்திலும் நிலவியவர்கள். கூட்டம் கூட்டமாக திருக்கோயில்களை தரிசித்து பாடியும் ஆடியும் பரமனைப்போற்றிப் பணிந்து கைத்தொண்டு காதலோடு செய்துமடங்களிலும் அம்பலங்களிலும்உழைத்தவர்கள் சிவபெருமானால் விரும்பி ஆட்கொள்ளப்பெற்றவர்கள்.

சிவனடியார் எவ்வுயிர்க்கும் அருளுடையவர் என்பதற்கு அடையாளமாக உருத்திராக்கமாலை அணிவர், ஆளடையாளத்திற்காக திரு நீறு பூசுவர் அத்திரு நீற்றின் வெண்மை போல உள்ளமும் தூய்மையானவர். இதனை சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறியுள்ளார்

> "மாசிலாத மணிஇதழ்திகழ்மேனி மேல்
> பூசு நீறு போல் உள்ளமும் புனிதர்கள்"

மேலும் ஓட்டையும் செம்பொன்னையும் ஒன்றாகவே மதிக்கும் துறவுள்ளம் படைத்தவர்கள். இதனை பெரியபுராணம்

> "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
> ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர்" கூறுகின்றது.

பூதலங்கள் நிலைகுலைந்தாலும் அடியார்கள் நிலையில் பிறழாதவர்கள். திருத்தொண்டினையே விரும்பி வேண்டுதலன்றி வீட்டின்பத்தையும் விரும்பாதவர்கள். இத்தகைய மேம்பாட்டினையுடைய தொண்டர்களின் வீரத்தை எம்மால் சொல்லமுடியுமோ என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

மேலும் தாயுமான சுவாமிகள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால்
> இன்ப நிலைதானே வந்து தெய்தும் பரா பரமே."

சிவனடியார்கள் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் இறைவனையே வழிபட்டு வாழ்வார்கள். இத்தகைய அடியார்க்கு அன்பில்லாதவர் ஈசனுக்கும் அன்பிலாதவர் எனக் குறிப்பிடுகிறார். அருணந்திசிவாச்சாரியார்

> "ஈசனுக்கு அன்பிலாதார் அடியார்க்கும் அன்பிலார்"

--சிவஞானசித்தியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகமும் அரங்கியலும் தொடர்பான சில தெளிவுகள்

1. ஒரு சமூகத்திற்கு நாடகம் பற்றிய தேவை ஏன்? ஒரு நல்ல நாடகம் சமூகத்திற்கு என்ன செய்ய வேண்டும்?

இதற்கு இரண்டு விதமான பெரும்பான்மையான பதில்கள் கிடைக்கின்றன. ஒரு நாடக ஆசிரியன் சமூகத்தில் அல்லது எந்த இடத்திலாவது தனது மனதுக்கு அதிக தாக்கம் கொடுத்த விடயத்தை அதன் பல சூழ்வுகளுடனும் தனது தனிப்பட்ட கருத்துக்களையும் புகுத்தி பார்வையாளருக்கு நிகழ்த்திக் காட்டுவதுடன் திருப்தி அடைந்து விடுதல் என்ற குறுகிய நோக்கும் சிலரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இங்கு ஒரு செய்தியை பெற்றுச் செல்லுதலும் தன்னை அல்லது தனக்குத் தெரிந்த ஒருவரை அடையாளம் கண்டு கொள்ளுதலுமே பார்வையாளர் பெறுகின்றவைகளாக இருக்கும். இவர்கள் இதுவே நாடகத்தின் தேவை எனவும் நல்ல நாடகம் எனவும் வாதாடுவர்.

1974இன் ஜூலை மல்லிகையில் இ. சிவானந்தன் அவர்கள் இக்கேள்விக்கு ஓர் பெரிய பரப்பை விரிக்கிறார். "அநியாய சக்திகளைப் பலவீனப்படுத்த நாடகக்கலையைப் பயன்படுத்த வேண்டும். எந்த ஒரு கலையும் பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். சுரண்டுவோரிடம் இருந்தும், அடக்குமுறையாளரிடமும் இருந்தும் உழைக்கும் மக்களை விடுவிக்க நாடகம் உறுதுணையாக அமையவேண்டும். மக்களுக்கு எதிரான இருண்ட சக்திகளை அம்பலப்படுத்தும் போதுதான் நாட்டபிவிருத்திக்கு நாடகம் கைகொடுக்க முனையும்" இதுவே நல்ல நாடகம் என்று இவர்கள் வாதாடுவர்.

2. இன்று க. பொ. த உயர்தர மாணவர்கள் அநேகர் நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாக எடுப்பது பற்றி...?

1982 இலிருந்து பாடசாலைகளில் உயர்தர மாணவர்களுக்கு நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டது. ஆரம்பத்தில் இத்துறையை விரும்பித் தேர்ந்தெடுத்து ஆவலுடன் கற்றபடியினால் எண்ணிக்கை குறைவாக இருந்தமையையும் இன்று யார் இத்துறையை உண்மையில் விரும்பிப் படிக்கிறார்கள்? யார் பல்கலைக்கழக நுழைவுவாயில் வரை செல்வதற்கான ஓர் வாகனமாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிய முடியாதிருக்கின்ற அளவுக்கு இப்பாடத்தேர்வு மாணவர் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனையும் காணக்கூடியதாக உள்ளது.

இப்பாடப்பரப்பின் எல்லை வெளிப்பார்வைக்கு குறைவு போலத் தோற்றமளிப்பதும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடமாகையால் இதன் பெறுபேறுகள் பருமட்டாக வெளிவருதலுமே மேலும் இப்பாடத்தை மாணவர்கள் தேர்ந்தெடுப்பதற்கு காரணங்களாக இருக்கலாம்.

3. 'பொய்க்கால்' "உயிர்த்து வந்த மனிதர் கூத்து" ஆகிய இரு நாடகங்களும் ஏனைய நாடகங்களில் இருந்து வேறுபட்டு நிற்பதற்குரிய காரணம் என்ன?

இவை இரண்டும் ஏனைய நாடகங்களைப் போல் பிரதி எழுதப்பட்டு நெறியாள்கை செய்யப்படாது புதிதளித்தல் என்ற புதுப்பண்பு மூலம் நிகழ்த்தப்பட்டவை. இங்கு நாடகக் கலைஞர்கள் அனைவருக்கும் தாங்கள் சொல்லப்போகும் செய்தி என்னவென்பதைத் தீர்மானித்து அதற்கான சட்டங்களை அமைத்து வலிமையான கட்டுப்பாடுள்ள பிரதியை கொண்டு இராது விவாத கள அரங்காக அனைவரும் கலந்துரையாடி காட்சிக் கோவைகளை அமைத்து பூர்த்தியாக்கும் ஓர் புதிய பரிணாமம் பெற்றமை.

4. "அபத்த நாடகம்" என்பதற்கு உதாரணமாக நாடகம் கற்பிக்கப்பட்டதே தவிர, அபத்த நாடகம் என்றால் என்ன என்பது பற்றிய தெளிவான விளக்கம் இதுவரை கற்பிக்கப்படவில்லையே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான தெளிவான விளக்கம் 1992ஆம் ஆண்டு செப்- ஒக் - மாத "வெளி" என்னும் சஞ்சிகையில் முரணியல் இயக்க நாடக முன்னோடிகள் இந்திரா பார்த்தசாரதியும், டாக்டர் ரவீந்திரனும் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தெளிவான விளக்கத்தைத் தருகின்றது. அவர்களது"

" absurd theatre என்பதை அபத்த நாடகம் என்று தமிழாக்கம் செய்து வழங்கி வருவது தவறு என்று எனக்குப் படுகிறது. Absurd என்ற ஆங்கிலச் சொல் 'absurd' என்ற latin சொல்லிலிருந்து வந்ததாகும். இதன் பொருள் தர்க்கத்துக்கு முரண்பட்டது" என்பதாகும். அபத்த என்ற சமஸ்கிருதத்திலிருந்து தமிழுக்கு வந்திருக்கும் சொல்லின் பொருள் தவறு என்பதாகும் "தவறு" என்று பொதுப்படையாகப் பொருளைத்தரும் சொல் தர்க்கத்துக்கு முரண்பட்டது என்று அபத்த நாடகம் என்பதன் உயிர் நாடிக் கருத்தை உணர்த்தாது: மட்டுமல்லாமல் அர்த்தமற்ற உலகில் மனித வாழ்க்கையின் அர்த்தத்தைக் கற்பித்துக் கொள்ள வேண்டியிருக்கிற ஒரு முரண்பாட்டுச் சூழ்நிலையை விளக்கும் வகையில் முரணியல் நாடகம்" என்று அழைக்கலாமென்று தோன்றுகிறது' இந்திராபார்த்தசாரதி.

ஷேக்ஸ்பியருடைய மக்பெத் தன்னுடைய வாழ்வின் இறுதித்தருணத்தில் வாழ்வின் அர்த்தமற்ற தன்மையை உணர்ந்து பின்வருமாறு பேசுகின்றான். "வாழ்க்கை என்பது முட்டாளால் சொல்லப்பட்ட புனைகதை. அது உணர்த்துவது ஒன்றுமேயில்லை. வெறும் அர்த்தமற்ற கோபமும் சரிதமும் தான்" இந்த ஒன்றுமேயில்லாத பொருளற்ற தன்மை ஒரு தத்துவமாக உருவாகி அத்தத்துவம் நாடகங்களின் மூலமாகப் பிரதிபலிக்கின்றது. இந்தத் தத்துவம் இருத்தலியம் என வழங்கப்படுகிறது. இத்தத்துவ அடிப்படையில் எழுதப்பட்ட நாடகங்கள் அபத்த நாடகங்கள் எனப்படும்."

5. யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்பு உளவளத்துணை அலகில் நாடகம் ஓர் சிகிச்சை முறையாகவும் பயன்படுத்தப்பட்டது அது எவ்வாறு?

எந்த ஒரு கற்கை நெறியும் ஒரு எல்லைக்கு உட்பட்டது அல்ல. அதுவும் இன்றைய நூற்றாண்டில் ஒரு பிரிவில் நன்றாக ஊறி இருந்த ஒரு துறை நாளை அந்நியப்பட்டு காலப்போக்கில் ஓர் புதிய கற்கை நெறியாகத் தோன்றும் அளவு வளர்ச்சி பெற்று வருகிறது. அந்த வகையில் நாடகம் ஓர் சிகிச்சை முறையாகப் பயன்படும் பண்பு மருத்துவத்துறைக்கும் நாடகத்துக்கும் இடையேயான ஊடாட்டத்தை வேண்டி நிற்கிறது. குறிப்பாகத் தொடர்ச்சியான போர்ச் சூழல் காரணமாகப் பாதிக்கப்பட்டோரின் உணர்ச்சிகளைவெளிக்கொணர்ந்து அவர்களது மனச்சிக்கல்களைக் குறைப்பதற்கு நாடகம் பயன்படுத்தப்படுகிறது. இம்முறை குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "அன்னையிட்ட தீ" எனும் நாடகத்தில் மிகச் சிறப்பாக வெளி வந்துள்ளது.

6. மொழியில்லாத மொழி மூலம் ஓர் செய்தியை நாகடமாக்கி மேடையேற்றினால் அது பார்வையாளர்களைச் சென்றுசேருமா ?

நிச்சயமாக. Drama என்ற சொல்லின் கிரேக்க வடிவத்தின் பொருளே 'நிகழ்த்தப்படும் ஒன்றே தவிர சொல்லப்படும் ஒன்று அல்ல,, மொழி தோன்றுவதற்கு முன்னர் நிகழ்ந்த தொடர்பு கொள்ளல்கள் எல்லாம் செய்கைகளாலும் சைகைகளாலும் நிகழ்ந்தவை. ஆனால் இந்த வகை நாடகம் ஒன்று மேடையேறும்போது பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

1- முதற் தடவையெனின் பார்வையாளரின் சிரிப்பைப் பெறவேண்டிவரும்.

2- மொழியில்லாத மொழி ஆகையால் இங்கு ஒவ்வொரு அசைவுகளுமே கருத்தை வெளிப்படுத்தும். எனவே ஒவ்வொரு அசைவுகளும் தெளிவாக இருக்க வேண்டும்.

3. Stylized play பல உட்சூழ்வுகள் கொண்டு நிகழ்த்தப்படுவதால் பார்வையாளருக்கு தெளிவின்மை ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. ஆகையால் Straight play நல்லது.

வேறென்ற தொலைக்காட்சியில் சிங்கள நாடகம் பார்ப்பதுபோல்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஒரு நல்ல நடிகன் பிறப்பிலே உருவாகின்றானா? பயிற்சியினால் உருவாக்கப்படுகின்றானா?

இதற்கு விடையளிப்பது சிக்கலானது. இவை இரண்டிற்கும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஒருவன் பிறக்கும்போது நிற்கின்ற கிரகங்களின் சஞ்சாரமும் அவனது பெற்றோர்களின் நிற மூர்த்தங்களும் இயல்பாகவே அவனுக்கு நடிப்பாற்றலைத் தருவித்திருக்கலாம். அவன் நல்ல நடிகனாகனாகவும் இருப்பான். இந்த உண்மையை மறுப்பவர்கள் பயிற்சிதான் ஒரு நல்ல நடிகனை உருவாக்கும் என்பார்கள். நடிப்புப் பயிற்சிகளைத் தொடர்ந்து பெற்று ஒரு நல்ல நடிகன் உருவாக்லாம். இங்கு ஆர்வம் பயிற்சியுடன் இணையவேண்டிய தேவை ஏற்படுகிறது. இருப்பினும் இவை இரண்டிலும் சிறந்த நடிகன் தோன்றலாம். ஆனால் இரண்டிற்கும் அடிப்படையாக இத்துறையில் உள்ள ஆர்வம், விருப்பு, முயற்சி என்பன மூலகாரணங்களாய்இருக் கின்றன என்பதை எவரும் மறுக்கமுடியாது.

**K. Tharmendraa**
**95 Arts**

# அனுமானம்

தரப்பட்ட தரவுகளிலிருந்து அல்லது எடுகூற்றுக்களிலிருந்து முடிவினைப் பெறும் சிந்தனை நெறியே அனுமானம் எனப்படும்.

உ-ம் $A_2$ B
$B_2$ C
∴A = C

இவ்வனுமானமானது இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றது. அவையாவன;

1. உடன் அனுமானம்
2. ஊடக அனுமானம்

உடன் அனுமானம் எனும் போது ஓர் தனி எடுப்பின் உட்கிடையை வெளிப்படுத்தும் நெறி எனப்படுகிறது.

உ+மாக:- குதிரைகள் எவையும்
கொம்புடையவை அல்ல
∴கொம்புடையவைஎவையும்
குதிரைகள் அல்ல.

இங்கு நாம் ஊடக அனுமானத்தைப் பற்றியே விரிவாக நோக்குவோம். இவ் ஊடக அனுமானத்தினை வழி அனுமானம் அல்லது நியாயத் தொடை அனுமானம் எனவும் அழைப்பர்.

பொது அம்சம் ஒன்றினைக் கொண்டுள்ளதும் தம்முள் ஒன்றினையாவது நிறையாகவும் உடையதுமான இரு எடு கூற்றுக்களிலிருந்து முடிவினை அனுமானித்தலே ஊடக அனுமானம் எனப்படும்.

உ-ம் எல்லா மனிதரும் இறப்பவர்
காந்தி ஒரு மனிதன்
∴ காந்தி இறப்பவர்

நியாயத்தொடை அனுமானத்தைப் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. தூய நியாயத்தொடை
2. கலப்பு நியாயத்தொடை

தூய நியாயத்தொடையினை மேலும் மூன்றாகப் பிரிக்கலாம்.

1. தூய அறுதி நியாயத்தொடை
2. தூய நிபந்தனை நியாயத்தொடை
3 தூய உறழ்வு நியாயத்தொடை

## தூய அறுதி நியாயத்தொடை

மூன்று கூற்றுக்களையும் அறுதி எடுப்புக்களாகக் கொண்டமைந்த ஓர் நியாயத் தொடையே தூய அறுதி நியாயத்தொடை ஆகும்.

உ+ம் எல்லா (மலர்களும்) (அழகானவை) ஆகும். P
(மல்லிகை) எல்லாம் (மலர்கள்) ஆகும் M
∴ (மல்லிகை) எல்லாம் (அழகானவை) ஆகும். P

S - சிறுபதம்
P - பெரும்பதம்
M - மத்திய பதம்

தூய அறுதி நியாயத்தொடை ஒன்றில் சிறுபதம், பெரும்பதம், மத்தியபதம் எனும் மூன்று பதங்களுண்டு. முடிவு கூற்றின் எழுவாய் சிறுபதமாகவும், பயனிலை பெரும்பதமாகவும் எடுகூற்றுக்கள் இரண்டிலும் காணப்படும் பொது அம்சம் மத்திய பதமாகவும் அமையும்.

தூய அறுதி நியாயத்தொடை ஒன்றில் பேரெடு கூற்று, சிற்றெடுகூற்று, முடிவு கூற்று எனும் மூன்று கூற்றுக்கள் உண்டு. பேரெடுகூற்று என்பது பெரும்பதத்தையும் மத்தியபதத்தையும் கொண்டமைந்த கூற்று சிற்றெடுகூற்று சிறுபதத்தையும் மத்திய பதத்தையும் கொண்ட கூற்று முடிவு கூற்றானது சிறுபதத்தையும், பெரும் பதத்தையும் கொண்ட கூற்றாகும்

தூய அறுதி நியாயத்தொடை ஒன்று வாய்ப்பானதாக அமைய வேண்டுமாயின் அது தூய அறுதி நியாயத்தொடை விதிகளுக்கு அமைவானதாக இருத்தல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய அறுதி நியாயத்தொடை விதிகளில் 6 பிரதான விதிகள், கிளைவிதிகள் என்பன உண்டு.

## தூய நிபந்தனை நியாயத் தொடை

மூன்று கூற்றுக்களையும் நிபந்தனை எடுப்புக்களாகக் கொண்டமைந்த ஒரு நியாயத் தொடையே தூய நிபந்தனை நியாயத் தொடை ஆகும்.

உ+ம் மழை பெய்தால்; நிலம் நனையும்
நிலம் நனைந்தால் பயிர் வளரும்
∴ மழை பெய்தால் பயிர் வளரும்

## தூய உறழ்வு நியாயத் தொடை

மூன்று கூற்றுக்களையும் உறழ்வு எடுப்புக்களாகக் கொண்டமைந்த ஒரு நியாயத் தொடையே தூய உறழ்வு நியாயத்தொடை ஆகும்

உ+ம் திருமணம் நிச்சயமாவது காதலில் அல்லது பொருத்தத்தில்
திருமணம் நிச்சயமாவது சொர்க்கத்தில் அல்லது பொருத்தத்தில் அன்று
∴ திருமணம் நிச்சயமாவது காதலில் அல்லது சொர்க்கத்தில்

இவ்வாறாகவே கலப்பு நியாயத்தொடையினையும் பின்வருமாறு மூன்று வகைப்படுத்தலாம்.

1 கலப்பு நிபந்தனை நியாயத்தொடை
2 கலப்பு உறழ்வு நியாயத் தொடை
3 இருதலைக் கோள் வாதம்

## கலப்பு நிபந்தனை நியாயத் தொடை

பேரெடு கூற்றினை நிபந்தனை எடுப்பாகவும், சிற்றெடு கூற்று முடிவுகூற்று ஆகிய இரண்டையும் அறுதி எடுப்புக்களாகவும் கொண்டமைந்த ஓர் நியாயத்தொடையே கலப்பு நிபந்தனை நியாயத் தொடை எனப்படும்.

உ+ம் மழை பெய்தால் நிலம் நனையும்
மழை பெய்துள்ளது
∴ நிலம் நனைந்துள்ளது

உடன்பாட்டாகாரி மறுப்பாகாரி எனும் இரு நியம முறைகளில் ஏதேனும் ஒன்றிலமைந்த கலப்பு நிபந்தனை நியாயத் தொடையே வலிதானதாக அமையும்

### உடன்பாட்டாகாரி

முன்னடையை விதித்து, பின்னடையை விதிக்கும் கலப்பு நிபந்தனை நியாயத் தொடையேஉடன்பாட்டாகாரி எனப்படும். இவ்உடன்பாட்டாகாரியில் அமைந்த கலப்பு நிபந்தனை நியாயத்தொடைகள் வலிதானவையாக அமையும். இவ் உடன்பாட்டாகாரியில் நான்கு வகைகள் உண்டு.

1 உடன்பட்டு உடன்படும்ஆகாரி
A எனின் C
A
∴ C

2 உடன் பட்டு மறுக்கும் ஆகாரி
A எனின் C அன்று
A
∴ C அன்று

3 மறுத்து உடன்படும் ஆகாரி
A அன்று எனின் C
A அன்று
∴ C

4 மறுத்து மறுக்கும் ஆகாரி
A அன்று எனின் C அன்று
A அன்று
∴ C அன்று

### மறுப்பாகாரி

பின்னடையை விதித்து முன்னடையை மறுக்கும் கலப்பு நிபந்தனை நியாயத் தொடையே மறுப்பாகாரி எனப்படும். இம்மறுப்பாகாரியில் அமையும் கலப்புநிபந்தனை நியாயத்தொடை வலிதானவையாக அமையும். இதன் வகைகளும் நான்காகும்.

1 மறுத்து மறுக்கும் ஆகாரி
A எனின் C
C அன்று
∴ A அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 உடன்பட்டு மறுக்கும் ஆகாரி

A எனின் C அன்று

C

---

ஃ A அன்று

3 மறுத்து உடன்படும் ஆகாரி

A அன்று எனின் C

C அன்று

---

ஃ A

4 உடன்பட்டு உடன்படும் ஆகாரி

A அன்று எனின் C அன்று

---

ஃ A

## கலப்பு உறழ்வு நியாயத்தொடை

உறழ்வு, அறுதி வகை எடுப்புக்களால் ஆக்கப்பட்ட ஒரு நியாயத்தொடையே கலப்பு உறழ்வு நியாயத்தொடை ஆகும்.

உ+ம் இராமன் உயரமானவன் அல்லது சீதை கட்டையானவள்

இராமன் உயரமானவன் அல்ல

ஃ சீதை கட்டையானவள்

இந் நியாயத்தொடை வாய்ப்பானதாக அமையவேண்டுமாயின் அது மறுத்து உடன்படும் ஆகாரியில் அமைதல் வேண்டும். மறுத்து உடன்படும் ஆகாரி எனும்போது மாற்றுக்களில் ஒன்றை மறுத்து மற்றையதை விதிக்கும் வடிவமே ஆகும்.

உ+ம் ஒன்றில் X அல்லது Y

X அன்று

---

ஃ Y

## இருதலைக் கோள் வாதம் அல்லது இருதலைக்கொள்ளி

பேரெடு கூற்றினை கூட்டு நிபந்தனை எடுப்பாகவும், சிற்றெடுகூற்றினை உறழ்வு எடுப்பாகவும் கொண்டமைந்த ஓர் நியாயத்தொடையே இருதலைக்கோள் எனப்படும். இதன் முடிவு இரண்டு வகையாக அமையலாம். முடிவானது அறுதி எடுப்பாக அமையும் ஆயின் எளிய இருதலைக்கோள் எனப்படும். இருதலைக்கோளின் முடிவு உறழ்வு எடுப்பாய் அமையுமாயின் அது சிக்கல் இருதலைக்கோள் எனப்படும்.

இவ் இருதலைக்கோள்களும் உடன்பாட்டாகாரியிலோ அல்லது மறுப்பாகாரியிலோ அமையலாம். உடன்பாட்டாகாரியில் அமையுமாயின் அவ்வகை இருதலைக்கோள் ஆக்கப்பட்டு இருதலைக்கோள் எனப்படுகிறது. மறுப்பாகாரியில் அமையும் போது அது அழிவு இருதலைக்கோள் எனப்படுகிறது.

ஆகவே இது நான்காகப் பிரிக்கப்படுகிறது.

1. எளிய ஆக்கப்பாட்டு இருதலைக்கோள்
2. எளிய அழிவு இருதலைக்கோள்
3. சிக்கல் ஆக்கப்பாட்டு இருதலைக்கோள்
4. சிக்கல் அழிவு இருதலைக்கோள்

### 1. எளிய ஆக்கப்பாட்டு இருதலைக்கோள்

ஒன்றில் A அல்லது B எனின், C ஆகும்.

ஒன்றில் A அல்லது B

---

ஃ C

### 2. எளிய அழிவு இருதலைக் கோள்

A எனின் C , D எனும் இரண்டும்

ஒன்றில் C அன்று அல்லது D அன்று

---

ஃ A அன்று

### 3. சிக்கல் ஆக்கப்பாட்டு இருதலைகோள்

A எனின் C மேலும் B எனின் D

ஒன்றில் A அல்லது B

---

ஃ ஒன்றில் C அல்லது D

### 4. சிக்கல் அழிவு இருதலைக் கோள்

A எனின் C, மேலும் B எனின் D

ஒன்றில் C அன்று அல்லது D அன்று

---

ஃ ஒன்றில் A அன்று அல்லது B அன்று

S. சுதாஜினி
*95 Com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்துளிர் இனிதே துளிர்க்க வாழ்த்துகிறோம்

ச. மகாலிங்கம்

ஆஸ்பத்திரி வீதி,
மூளாய்.

வணிகத்துளிர் வளம்பெற எமது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்

சி. சுப்பிரமணியம்

காரைநகர் வீதி,
மூளாய்.

பஞ்சு ஆட்ஸ்

ஓவியம் வரைபவரும் படம் பிறேம் இடுதலும் ( வீட்டு பெயின்ற்றிங், ஸ்பிறேபெயின்ற்றிங், புளொக் தயாரிப்பதற்கான படங்கள் வரைந்து கொடுப்பவர்கள் ) ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும்.

பிரதான வீதி,
சங்கானை.

வணிகத்துளிர் துளிர்க்க வாழ்த்துகின்றேன்

க. சித்திரவேல்

டச்சுறோட்,
மூளாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்துளிர் வாழையடி
வாழையாக நிலைக்க
எமது நல்வாழ்த்துக்கள் பற்பல

**கருமாரி**

**மோட்டோரஸ்**

J / 5281, அர்ச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.



வணிக வானில் விடிவெள்ளி
யாக வணிகத்துளிர்
பிரகாசிக்க எமது இதய
பூர்வமான வாழ்த்துக்கள்!

சைக்கிள், சைக்கிள் உதிரிப்
பாகங்கள் மற்றும் பல்வகைப்
பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

**இ. ச. பேரம்பலம்**

**நிறுவனம்**

50, சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

## பாரதி கல்வி நிறுவனம்

பிரதான வீதி, சித்தன்கேணி,

A/L கலை, வர்த்தக வகுப்புகளுக்கு இன்று தனித்துவம்
பெற்ற ஓர் நிறுவனம் சித்தன்கேணியில் இது மட்டுமே.

எமது யாழ். ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | Mr. மகேந்திரன் |
| கணக்கியல் | Mr. Sam |
| வர்த்தகம் | Mr. பசில் |
| அளவையியல் | Mr. சர்மா |
| தமிழ் | Mr. பாலா |
| இந்துநாகரிகம் | Mr. பாலா |
| இந்துசமயம் | Mr. காரை கெங்கா |

சகல பிரிவுகளும் நடைபெறுகின்றன

A/L 97 புதிய பிரிவு விரைவில் ஆரம்பமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்செல்வி உயர்கல்வி நிலையம்

ஐயனார் கோவில் வீதி,
மூளாய், சுழிபுரம்.

க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

## எமது நிறுவனத்தின் திறமைமிக்க ஆசிரியர்கள்

தமிழ் – செல்வி N. பங்கயச்செல்வி
இ. சமயம் – திரு P. கணேஸ்
பொருளியல் – திரு S. ஜெயா
அளவையியல் – திரு M. சிறீக்குமார்
புவியியல் - திரு V. விமல்
இ. நாகரிகம் – திரு S. ஜெயக்குமார்
நாடகமும் அரங்கியலும் – திரு P. சுரேஸ்.
கணக்கியல் - திரு S. பரன்
வர்த்தகம் – பிரபல ஆசிரியர்

*''விக்ரோறியாப் பூங்காவின்
வணிகத் தருவின்
துளிர்கள்
கிளை பரப்பி நின்று
மணம் வீசி வாழ
வாழ்த்திடுவோம்''*

வாழ்த்திடுவோர்,
தமிழ்ச்செல்வி உயர்கல்வி நிறுவனத்தினர்.

வணிகத்துளிர் வளர்ந்தோங்க
வாழ்த்துகின்றோம்.

## ராம் நகைத் தொழிலகம்

ஓடர்நகைகள் குறித்த தவணையில் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

91, Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

விருட்சமாக வளர்ந்து வணிகத் துறைக்கு நிழல்பரப்ப தன் முதல் அடியை எடுத்து வைக்கும் வணிகத் துளிரை வளர்க வளர்கவென வாழ்த்துகின்றோம்.

## லக்சுமி ஸ்ரோர்ஸ்

துணைவிச் சந்தி,
சங்கரத்தை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம்பாடி SKY LARK

எம்மிடம்

தினசரி பத்திரிகைகள், வாராந்த பத்திரிகைகள், மாதாந்த சஞ்சிகைகள், பாடப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அழகு சாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள் ஆகியன வற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான வீதி,
சுழிபுரம்.

வணிகத் துளிர் வளம்பெற
வாழ்த்துகின்றோம்

Main Street,
Chulipuram.

வணிகத் துளிர் மென்மேலும் வளர
எமது வாழ்த்துக்கள்

## அபிராமி வேளாண் களஞ்சியம்

கந்தரோடை வீதி,
மாகியப்பிட்டி.

உரம், கிருமிநாசினிகள், விதைகள் விற்பனையாளர்

வணிகத்துளிர் வளம்பெற வாழ்த்துகின்றோம்

## துர்க்கா பொத்தகச்சோலை

(புகழ்பெற்ற புத்தக வியாபாரிக்கும், புதினத்தாளின் பிரதம முகவர்க்கும்)
பஸ்நிலையம் முன்பாக,
சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்மதி நிலுவை

N. ஜெகதீஸ்வரி
95 Com

சென்மதி நிலுவை என்பது ஒரு வருட காலப்பகுதியில் அல்லது ஒரு காலாண்டு காலப்பகுதியில் ஒரு நாட்டிற்கும் உலகின் ஏனைய நாடுகளுக்கும் இடையே நடைபெறுகின்ற சட்டபூர்வமான அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் பதிந்து காட்டுகின்ற ஓர் அட்டவணையாகும். சுருங்கக் கூறின் ஒரு நாட்டின் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பதிவேடே சென்மதி நிலுவை என அழைக்கப்படும். இச் சென்மதி நிலுவை அட்டவணையில் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் வருமானங்கள், கொடுப்பனவுகள் என்ற வகையில் பதியப்படுகின்றன. அதாவது வருமானங்கள் எப்போதும் வரவுப் பக்கத்திலும் கொடுப்பனவுகள் எப்போதும் பற்றுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன. இங்கு வருமானங்கள் எப்போதும் கொடுப்பனவுகளுக்குச் சமமாக இருக்கும். சென்மதி நிலுவையில் அடங்கும் கணக்குகளை நடைமுறைக் கணக்குகள், மூலதனக் கணக்குகள் என இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். நடைமுறைக்கணக்கு என்பதனுள் பொருட்கள் சேவைகள் கணக்குகள் மாற்றல் கணக்குகள் என இருவகைக் கணக்குகள் உண்டு. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கின் ஒரு பிரிவான பொருட்கள் சேவைகள் கணக்கினை வணிகப் பொருட் கணக்கு சேவைகள் கணக்கு என இரண்டாக வகுக்கலாம். அதேபோல் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கிலுள்ள மாற்றல்கள் கணக்கினை தனியார் மாற்றல்கள், அரச மாற்றல்கள் என இரண்டாக வகுக்கலாம்.

இங்கு வணிகப் பொருட் கணக்கு என்பது ஒரு நாட்டினது வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளையும், அவற்றின் இறக்குமதிகளையும் காட்டும் ஒரு கணக்காகும். அதாவது, ஒரு நாட்டின் வணிகப் பொருட் கொடுக்கல் வாங்கல்களைக் காட்டும் கணக்காக இது அமைகிறது. இவ் வணிகப் பொருட்கணக்கைக் கட்புலனாகும் கணக்கு எனவும் கூறலாம். இக்கணக்கின் மீதி வர்த்தக நிலுவை அல்லது வியாபார நிலுவை எனப்படும். அதாவது வணிகப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதியிலிருந்து வணிகப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதியைக் கழிக்க வரும் தொகையே வர்த்தக நிலுவை ஆகும். வர்த்தக நிலுவை நேர் கணியப் பெறுமதியிலோ அல்லது எதிர்க் கணியப் பெறுமதியிலோ காணப்பட முடியும். குறிப்பிட்ட ஓர் ஆண்டிற்கான வணிகப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதியிலும் பார்க் இறக்குமதிப் பெறுமதி சிறிதாக இருப்பின் வர்த்தக நிலுவை நேர்க்கணியப் பெறுமதியைக் கொண்டிருக்கும். இதனைச் சாதகமான வர்த்தக நிலுவை என்பர். மாறாக வணிகப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதியிலும் பார்க்க இறக்குமதிப் பெறுமதி பெரிதாக இருப்பின் வர்த்தக நிலுவை எதிர்க்கணியப் பெறுமதியைக் கொண்டிருக்கும். இதனைப் பாதகமான வர்த்தக நிலுவை என்பர் இலங்கையின் வர்த்தக நிலுவையானது தொடர்ந்து தேர்ச்சியாக பற்றாக்குறையையே காட்டி வருகிறது. 93ஆம் ஆண்டில் இவ்வர்த்தக நிலுவையானது 554, 860 லட்சம் ரூபா வால் பற்றாக்குறையைக் காட்டியது.

சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் அடங்கும் சேவைகள் கணக்கு என்பது கப்பற் கூலி. துறைமுகச் செலவுகள், காப்புறுதி, பயணம், முதலீட்டு வருமானங்கள், (வட்டி, லாபங்கள், பங்கு லாபங்கள்), உல்லாசப் பயணம், நாணயத்துக்குப் புறம்பான தங்கம், பிறசேவைகள் அரசின் செலவுகள் (தூதுவர் தொடர்பான செலவு) என்பவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. சேவைகளின் மொத்தப் பெறுபனவுகளுக்கும், மொத்தக் கொடுப்பனவுகளுக்கும் இடையிலான வித்தியாசத் தொகை சேவைகள் நிலுவை ஆகும். இலங்கையில் இச்சேவைகள் கணக்கு நிலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையானது 82 ஆம் ஆண்டு முதல் பற்றாக் குறையினையே, காட்டி வந்தது. எனினும் 93ஆம் ஆண்டில் இச்சேவைகள் கணக்கு நிலுவையானது மிகைநிலையைக் காட்டிற்று. அதாவது 92 ஆம் ஆண்டு இலங்கை ரூபா வின்படி 14, 300 இலட்சம் ரூபா பற்றாக் குறையைக் காட்டிய இச்சேவைகள் நிலுவை 93இல் 20,430, லட்சம் ரூபா என்றுமில்லாத மிகையைக் காட்டியது. இதற்குப் பின்வருவன காரணமாக அமைகின்றன.

i) துறைமுக வருவாய்களின் பேரிலான அதிகரித்த தேறியஉட்பாய்ச்சல்

ii) நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக் களின் வளர்ச்சியினால் முதலீட்டு வருமானத்திலேற்பட்ட அதிகரிப்பு (92 இலும் பார்க்க 93 இல் 64 % பேலாக அதிகரித்துள்ளது).

iii) சுற்றுலாப் பயணிகள் மூலமான வருவாய்கள் 92 இலும் பார்க்க 93 இல் 5% ற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது.

வணிகப் பொருட்களின் ஏற்று மதிகளையும் இறக்குமதிகளையும் சேவைகளின் பெறுகைகளையும் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய கணக்கே, பொருட்கள் பணிகள் கணக்கு எனப்படும். இக்கணக்கின் நிலுவை, பொருட்கள் சேவைகள் நிலுவை எனப்படும். அதாவது, வியாபார நிலுவையையும், சேவைகள் நிலுவையினையும் கூட்ட வருவதே பொருட்கள் சேவைகள் நிலுவை எனப்படும். 93ஆம் ஆண்டில் இலங்கையில் இப்பொருட்கள் சேவைகள் நிலுவையானது - 5,344,330 இலட்சம் ரூபா பற்றாக்குறையைக் காட்டியது.

சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கினுள் அடங்கும் மாற்றல்கள் கணக்கு என்பதனுள் அரசமாற்றல்கள், தனியார் மாற்றல்கள் என இரு வகுதிகள் அடங்கும். அரசமாற்றல் என்பது ஒரு நாட்டு அரசாங்கமானது எதனையும் பெற்றுக் கொள்ளாமல் அல்லது எதனையும்கொடுக்காமல், வெளிநாடுகளுக்கு கொடுக்கின்ற அல்லதுவெளிநாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்கின்ற நன்கொடைகளையே குறிக்கின்றது. இவைதிருப்பிச் செலுத்தத்தேவையற்றவை. இவை வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்தும், சர்வதேச நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கின்றன. அத்துடன் இவ்வாறு மாற்றல்கள் செயற்திட்டக் கொடைகளாகவோ அல்லது செயற்திட்டமல்லா கொடைகளாகவோ (பண்டக்கொடை) ஒரு நாட்டுக்குக் கிடைக்கலாம் இலங்கையில் 93ஆம் ஆண்டில் இவ்வலுவல்கள் மாற்றல்கள் வீழ்ச்சியைக் காட்டியது. மாற்றல் கணக்கில் அடங்கும் தனியார் மாற்றல்கள், என்பது வெளிநாடுகளில் பணிபுரிவோர் தமது பெற்றோர், உறவினர், நண்பர்கள் தங்கி வாழ்வோர் ஆகியோருக்கு அனுப்புகின்ற பணத்தைக் குறிக்கும். இலங்கையில் இத்தனியார் மாற்றல்களின். தேறிய உட்பாய்ச்சல் தொடர்ந்து அதிகரித்தே வருகின்றது.93இல் இது 17% ஆல் அதிகரித்துக் காணப்பட்டது. இத்தனியார் மாற்றல்களையும், அரச மாற்றல்களையும் உள்ளடக்கிய மாற்றல் கணக்கு என்பது வெளிநாடுகளில் பணிபுரிவோர் அனுப்புகின்ற பணம், வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் நன்கொடைகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் ஒரு நாடானது மாற்றல்களைப் பெற்றுக்கொள்ளும் போதோ அல்லது மாற்றல் கொடுப்பனவுகளை செய்யும் போதோ அதற்குப் பதிலாக எதனையும் வழங்குவதோ அல்லது பெறுவதோ கிடையாது. எனவே. இது ஒரு பக்கக் கொடுப்பனவாகவே எப்போதும் அமையும். 93இல் இலங்கையின் மாற்றல்கள் கணக்கின் தேறிய உட்பாய்ச்சல் 65,590 இலட்சம் ரூபாவால் அதிகரித்துள்ளது.

ஒரு நாட்டினது சென்மதி நிலுவையில் உள்ளடங்கும் வணிகப் பொருள் கணக்கு, சேவைகள் கணக்கு, மாற்றல்கள் கணக்கு ஆகிய மூன்றையும் உள்ளடக்கியதே சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு ஆகும். அதாவது இந்நடைமுறைக் கணக்கினுள் வணிகப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதி இறக்குமதிப் பெறுமதிகள், சேவைகளின் பெறுவனவு கொடுப்பனவுகள், தனியார், அரசமாற்றல்கள் ஆகியவை உள்ளடங்கும். இந்நடைமுறைக் கணக்கின் மீதி நடைமுறைக் கணக்கு நிலுவை எனப்படும். அதாவது. ஒரு நாட்டில் குறிப்பிட்ட ஒரு ஆண்டில் வணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப் பொருட்கள், சேவைகள், மாற்றல்கள் ஆகியவற்றின் பெறுகைகளுக்கும், இவற்றின் மொத்தக் கொடுப்பனவுகளுக்கும் இடையிலுள்ள தொகையே நடைமுறைக் கணக்கு நிலுவை ஆகும். மேலும் இந்நடைமுறைக் கணக்கு நிலுவையினை வியாபார நிலுவை, சேவைகள் நிலுவை, மாற்றல்கள் நிலுவை ஆகிய மூன்று நிலுவைகளையும் கூட்டுவதன் மூலமும் அறிய முடியும். அத்துடன் பொருட்கள் பணிகள் நிலுவையுடன் மாற்றல் நிலுவையைக் கூட்டுவதன் மூலமாகவும் இந்நடைமுறைக் கணக்கு நிலுவையை காணமுடியும். இலங்கையில் 93ஆம் ஆண்டில் நடைமுறைக் கணக்கு நிலுவை - 186, 040 இலட்சம் ரூபாய் பற்றாக்குறையைக் காட்டியது. ஆனால் 93இல் வணிக கணக்கின் பற்றாக்குறை விரிவடைந்தபோதும் பணிகள் கணக்கிலும் மாற்றல் கணக்கிலும் காணப்பட்ட திருந்திய செயலாற்றம் (மிகை) காரணமாக, 92இல் 1,89 ,350 இலட்சம் ரூபாவாக இருந்த நடமுறைக்கணக்கு பற்றாக்குறை 93 இல் - 1,86, 040 இலட்சம் ரூபாவாக சிறிதளவாய் குறைந்துள்ளது. நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையில் 2ஆவது ஆண்டாக தொடர்ந்தும் இவ் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஒரு நாட்டில் குறிப்பிட்ட ஆண்டில் வணிகப் பண்ட கணக்கு பற்றாக்குறையினைக் காட்டுகின்றபோதும் நடைமுறைக் கணக்கு நிலுவை மிகையினைக் காட்டமுடியும். இந்நிலைமை பின்வருமாறு தோன்றும். அதாவது ஒருநாட்டின் சென்மதி நிலுவையில் அடங்கும் வணிகப் பொருட் கணக்கு, மாற்றல் கணக்கு, சேவை கணக்கு ஆகிய மூன்றும் சேர்ந்த கணக்கே நடைமுறைக் கணக்கு ஆகும். எனவே, குறித்த ஆண்டில் வணிகப்பொருட் கணக்கு பற்றாக்குறையைக் காட்டினாலும், அவ்வாண்டில் பணிகள் கணக்கு நிலுவையையும் மாற்றல் கணக்கு நிலுவையையும் கூட்ட வரும் நேர்கணியப் பெறுமதியானது அவ்வணிகப் பொருட்கணக்கு பற்றாக்குறை தொகையிலும் பார்க்க அதிகமாக இருக்கும் நிலைமையில், நடைமுறைக் கணக்கு நிலுவை மிகை நிலையை அதாவது நேர்கணியப் பெறுமதியைக் காட்ட முடியும்.

சென்மதி நிலுவையிலுள்ள ஓர் பிரிவு மூலதனக் கணக்கு என்பது ஆகும். ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டிற்கும் உலகின் ஏனைய நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற கடன்கள், முதலீடுகள் என்பவற்றின் கொடுக்கல் வாங்கல்களையும் அந்நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களையும் உள்ளடக்கிய கணக்கு, மூலதனக் கணக்கு எனப்படும். எனவே, ஒரு நாட்டிற்கும் உலகின் ஏனைய நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற மூலதன உட்பாய்ச்சல்களையும் வெளிப்பாய்ச்சல்களையும் உள்ளடக்கிய கணக்கு மூலதன கணக்கு ஆகும். இம் மூலதனக் கணக்கினுள் பின்வரும் இரு கணக்குகள் உண்டு.

1. நாணயமல்லா மூலதனம் /பணரீதியற்ற மூலதனம்.

2. நாணய மூலதனம் / பணமூலதனம்.

சென்மதி நிலுவைக் கணக்கினைச் சமப்படுத்தும் நோக்கத்திற்காக அன்றி வேறு நோக்கங்கள் கருதி, ஒரு நாட்டிற்கும் உலகின் ஏனைய நாடுகளுக்குமிடையில் நடைபெறுகின்ற மூலதனக் கொடுக்கல் வாங்கல்களைக் காட்டுகின்ற கணக்கே, நாணய மல்லாத மூலதனம் எனப்படும். எனவே, வெளிநாட்டு முதலீடுகள், வெளிநாட்டுக் கடன் கொடுக்கல் வாங்கல்கள் போன்றவற்றை உள்ளடக்கிய, கணக்கே நாணயமல்லாத மூலதனம் ஆகும்.

இதன் கீழ் பின்வரும் விடயங்கள் அடங்குகின்றன.

I நேரடி முதலீடுகள்
அ) பட்டியலிடப்பட்ட முதலீடு
ஆ) தனியார் முதலீடு

II நீண்ட காலக் கடன்
அ) அரச துறை
ஆ) தனியார் துறை

III குறுங்காலக் கடன்
அ) அரச துறை
ஆ) தனியார் துறை

நாணயமல்லாத மூலதனம் (தேறியது) 4,09,110 இலட்சம் ரூபாவாகக் காணப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணய மூலதனம் என்பது சென்மதி நிலுவைக் கணக்கினைச் சமப்படுத்தும் நோக்கம் கருதி மேற்கொள்ளப்படுகின்ற மூலதனக் கொடுக்கல் வாங்கல்களைக்காட்டு கின்ற கணக்கு ஆகும். இதன் கீழ் பின் வரும் விடயங்கள் அடங்குகின்றன

1. வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் (விழ்ச்சி / அதிகரிப்பு).

2. சர்வதேச நாணய நிதியத்துட னான கொடுக்கல் வாங்கல்கள் (I. M. F.)

3. சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக் கீடு (S. D. R.).

சென்மதி நிலுவையில் அடிப்படை நிலுவையானது பின்வருமாறு கணிப்பிடப் படுகிறது. சென்மதி நிலுவையில் நடை முறை கணக்கு நிலுவையுடன் தேறிய நீண்டகால மூலதனத்தைக் கூட்டுவதன் மூலம் பெறப்படும் தொகை அடிப்படை நிலுவை கணிப்பிடப்படுகின்றது. தேறிய நீண்டகால மூலதனம் என்பது. நாணய மல்லா மூலதனத்தினுள் அடங்கியுள்ள நேரடி முதலீடு நீண்டகாலக் கடன் என்ப வற்றின் பெறுகைகளுக்கும் கொடுப்பனவு களுக்கும் இடையிலான தொகையினைக் குறிக்கின்றது.

அடிப்படை நிலுவை = நடைமுறைக்கணக்கு + தேறிய நீண்டகால மூலதனம்.

சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கு நிலுவையுடன் தேறிய நாணய மல்லா மூலதனத்தைக் கூட்டுவதன் மூலம் பெறப்படும் தொகை திரண்ட நிலுவை எனப்படும்

திரண்ட நிலுவை = நடைமுறைக் கணக்கு நிலுவை + தேறிய நாணயமல்லாத மூல தனம்.

சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை மிகைநிலையாகவோ அல்லது குறைநிலையாகவோ அமையலாம். திரண்ட நிலுவை நேர்க்கணியமாகக் காணப்படு கின்ற போது நாணய அசைவு எதிர்க் கணியமாகக் காணப்படும். இதனால் வெளி நாட்டுச் சொத்துக்கள் அதிகரிக்கும். இதன் காரணமாக பணநிரம்பல் அதிகரித்து நாணய வெளியீடு அதிகரிக்கும். இதனால் பணவீக்க விளைவுகள் தோன்றும். திரண்ட நிலுவை எதிர்க்கணியமாகக் காணப்படு கின்றபோது நாணய அசைவுகள் நேர்க் கணியமாகக் காணப்படும். இதனால் வெளி நாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடையும். சென்மதி நிலுவையின் திரண்ட நிலு வையே சென்மதி நிலுவையின் மிகை நிலை ஆகும். இத்தகைய திரண்ட நிலுவையின் மிகை நிலை நாணய அசைவுகளின் பற்றாக் குறைமூலம் நீக்கப்பட்டு சென்மதி நிலுவை சமநிலை அடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்மதி நிலுவை அட்டவணையின் மாதிரிஅமைப்பு - 1993

| | | விபரம் | மில்லியன் ரூபா |
|---|---|---|---|
| 1) | | வணிகப் பொருட் கணக்கு | |
| | அ) | ஏற்றுமதிகள் | 138 174 |
| | ஆ) | இறக்குமதிகள் | 193 660 |
| | | வர்த்தக நிலுவை | -55 486 |
| 2) | | சேவைகள் கணக்கு | |
| | அ) | பெறுகைகள் | 36 050 |
| | ஆ) | கொடுப்பனவுகள் | 34 007 |
| | | சேவைகள் நிலுவை | 2 043 |
| 3) | | பொருட்கள் சேவைகள் கணக்கு நிலுவை (1 + 2) | -53 443 |
| 4) | | மாற்றல்கள் கணக்கு | |
| | அ) | தனியார் மாற்றல் (தேறியது) | 27 090 |
| | ஆ) | அரச மாற்றல் (தேறியது) | 7 749 |
| | | மாற்றல்கள் நிலுவை | 34 839 |
| 5) | | நடைமுறைக் கணக்கு நிலுவை (3 + 4) or (1 + 2 + 4) | -18 604 |
| 6) | | நாணயமல்லா மூலதனம் (தேறியது) | 40 917 |
| | அ) | தனியார் முதலீடு (தேறியது) | 12 379 |
| | | i) நேரடி முதலீடு தேறியது | 9 107 |
| | | ii) பட்டியலிடப்பட்ட முதலீடு (தேறியது) | 3 272 |
| | ஆ) | நீண்டகாலக் கடன் ) தேறியது) | 21 425 |
| | | i) அரசாங்க துறை (தேறியது) | 12 579 |
| | | ii) தனியார் துறை (தேறியது) | 8849 |
| | இ) | குறுங்காலக் கடன் (தேறியது) | 7 110 |
| | | i) அரசாங்க துறை (தேறியது) | |
| | | ii) தனியார் துறை (தேறியது) | 7 110 |
| 7) | | சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | |
| 8) | | பெறுமதிச் சீராக்கங்கள் | |
| 9) | | பிழைகளும் தவிர்ப்புக்களும் | 3236 |
| 10) | | திரண்ட நிலுவை (5 + 6 + 7 + 8 + 9) | 24129 |
| 11) | | நாணய அசைவுகள் | - 24129 |

ஒரு நாட்டின் சென்மதி நிலுவைப் பற்றக்குறையானது தொடர்ச்சியாக நீண்டகாலத்துக்கு ஏற்படும் நிலையே சென்மதி நிலுவைக் குறைநிலைப் பிரச்சினையாகும். இவ்வாறு தொடர்ச்சியாக சென்மதி நிலுவைப் பற்றாக்குறை ஏற்படும்போது அந்நாட்டினது வெளிநாட்டுச்சொத்துக்கள் கரைந்து குறைந்த மட்டத்தினை அடையும். மேலும் வெளிநாட்டுக் கடன் சுமையும் அதிகரிக்கும். இவ்வாறான நிலையில் சென்மதி நிலுவையில் ஏற்படும் ஒரு பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு அந்த நாட்டுக்கு எந்தவொரு மூலமும் இருக்க மாட்டாது. இப்படியான ஒரு நிலையே சென்மதி நிலுவைக் குறைநிலைப் பிரச்சினையாகும். இச் சென்மதி நிலுவைப் ஏற்படுவதற்கு பின்வருவன காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i) ஏற்றுமதி வருமானத்திலும் பார்க்க இறக்குமதிச் செலவு உயர்வாக இருத்தல், அதாவது, வர்த்தக நிலுவை தொடர்ந்து பற்றாக்குறையினைக் காட்டுதல்.

ii) அதிகரித்த சர்வதேசக் கடன்கள் காரணமாக கடன் மீளக் கொடுப்பனவுகள் அதிகரித்தல்.

iii) சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் தொடர்ச்சியாகப் பற்றாக்குறை ஏற்படுதல்.

iv) வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல் குறைவடைதல்.

இச் சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பின்வரும் வழிமுறைகள் பயன்படுத்தப்படும்.

i) ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தல்.

ii) உயர்ந்த இறக்குமதித் தீர்வைகளை விதித்தல், இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தல் போன்றவை மூலம் இறக்குமதிச் செலவுகளைக் குறைத்தல்.

iii) நாணய மாற்று வீதத்தை உறுதியாக வைத்திருத்தல்.

iv) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதன்மூலம் ஏற்றுமதிகளை அதிகரித்து இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்தும விசாரியின் மோட்சப் பயணம்

புஸ்பரட்ணம் சுகிர்தா
13 ஆம் ஆண்டு கலைப்பிரிவு

இரட்சணிய யாத்திரீகம் என்ற பாடற் பகுதியினூடு ஆத்தும விசாரியின் மோட்சப் பயணம் பற்றி எச். ஏ. கிருஸ்ண பிள்ளை என்பவர் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார். இவர் ஓர் வைணவ சமயத்தைச் சேர்ந்தவராய் இருந்தும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக்கொண்டமைக்குக் காரணம் யேசுகிறிஸ்து மீது இருந்த அளவற்ற பக்தியும் நம்பிக்கையுமே ஆகும். இவர் இறைசித்தன் ஒருவன் தான் செய்த பாவச் செயல்களை விட்டு உணர்ந்து தன்னைத் தான் உணர்ந்து எவ்வாறு சிறந்த வழியான மோட்சத்தை அடையும் நோக்கில் செல்லும் போது அவனுக்கு ஏற்படும் தடைகள் அத்தோடு அவன் செய்யும் முயற்சிகள் இறுதியாக அவ்விடத்தை செல்லும் வரை இப்பாடல் மூலம் சிறந்த மொழி நடையைக் கையாண்டு கூறியுள்ளார்.

ஆத்ம விசாரி []ஆனவன் தனது மோட்சப் பயணத்தை மேற்கொள்ளும் போது நான் இறைவனால் விரும்பப்பட்டாலும் சரி வெறுக்கப்பட்டாலும் சரி இழிந்தவன் என்று அவனால் விலக்கி விட்டாலும் சரி எல்லாம் கருணா மூர்த்தியான இறைவனது விருப்பம் தான் காரணம். அவ்வாறு செல்லும் போது அவன் முன்னர் செய்த தீவினைகள் எல்லாம் ''மலையின் நின்று வீசுவதாகிய தீச்சுவாலை போல'' வந்து முன் நின்ற போதும் கூட அவற்றை எல்லாம் விலக்கிவிட்டு வேறு எந்த வழியையும் சிந்திக்காது தான் எண்ணிவந்த பயணத்தை தொடர்கின்றான்.

இவ்வாறு அவன் செல்லும்போது மனதில் பல எண்ண ஓட்டங்கள் தோன்றுகின்றன. அதாவது, இந்த ஒடுக்கமான இடுக்கமான சிறிய வழியினூடு பாவியான யான் எவ்வாறு புகமுடியும்? உலகியல் ஆசைகளை வெறுத்தவர்களுக்கும் பருமித்த உடலை ஒடுக்கியவர்க்கும் கிடைக்காத இவ் வழி எனக்குக்கிடைக்குமோ? அதைவிட கள்வர், காம இச்சை உடையவர், வஞ்சகர், செல்வம் மிக உடைய விழிகண் குருடர், பிறர் பொருளை விரும்புவோர் மூர்க்கர், சீற்றம் உடைய விதண்டாவாதிகள் போன்றோர். இதற்குள் செல்வது அரிதாகும். அவ்வாறாயின் நான் எவ்வாறு செல்லமுடியும் என்று கவலையோடு யோசித்துக்கொண்டு வரும்போது திட்டி வாயிலுக்கு அருகில் வந்தபோது அச்சுவரில் மிகவும் அழகாக எழுதியிருந்த வாக்கியம் ''ஏழைகள் நின்று தட்டுங்கள் நீங்கிடும் இந் நீள் கதவு'' அதை வாசித்த விசாரி மனதில் புத்துணர்ச்சி கொண்டு அத் திட்டி வாயிற் கதவைத் தட்டுகிறான்.

அதாவது இத் திட்டிவாயிலை தேவர்கள் தலைவனான 'இறைவனால்தான் ஆக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தான் முதல் செய்த பாவங்கள் ஒவ்வொன்றையும் சொல்லித் தட்டுகின்றான். பொய்யான இவ் உலகின் மீது கொண்ட ஆசைகளை எல்லாம் விட்டு கருணையினைத் தந்து காத்தருளிய இறைவனது திருப் பாதங்ககளுக்கு நான் தொண்டன். அதைவிட ஆசை பாசம் என்னும் கொடிய சுழல் காற்றில் சிக்குண்டு வருந்தினேன். நாய் போல இழிந்தவனாகிய நான் எனக்கு இறைவனது திருவருள் வந்து கிடைத்தது. அதனால் அழிவினை உடைய உலகினை விட்டுவந்து விட்டேன். கதவினைத் திறவுங்கள் நான் பரிசுத்த வேதத்தைக் கற்கமாட்டேன். நன்மை செய்யவும் நினைக்கேன். அதே நேரம் தீமையை வெறுக்கேன் என்றாலும் மோட்சத்தை விரும்பி வந்துவிட்டேன். போகமாட்டேன் என்ற மனஉறுதியோடு தட்டுகின்றான். அப்போது கொடியவர்களிலும் கொடியவன் இழிந்தவர்களுள்ளும் இழிந்தவன் எனினும் தேவகுமாரன் யேசுகிறிஸ்துவின் அடியார்களுக்கு எல்லாம் அடியவன் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத் தாழ்த்தி கழிவிரக்கத்தோடு கதவைத் திறவுங்கள் என்று பலமுறை புலவாக கூறி ஆத்ம விசாரி தட்டிக் கொண்டே நின்றான்.

அப்போது திட்டிவாயிற் காவலன் தோன்றி ஆத்மவிசாரியின் வாயில் இருந்து வந்த சொற்களைக் கேட்டு, இவன் உள்ளத்திலே நல்லுணர்ச்சியும் கழிவிரக்கமும் மிகுதியாக உள்ளது, கபடம் அற்றவன் என்று எண்ணி, அஞ்சாதே எனக்கூறி திட்டிவாயிற் கதவினைத் திறந்தான். அப்போ விசாரி முகமலர்ந்து காவலனைப் பார்த்து தாய் போல எதிரில் வந்தாய் பாவியான நான் வரமுடியுமா என வினாவினான். உடனே அவ்விடத்தூடுவருவராக என்று உள்ளே இழுத்து மறுபடியும் கதவைப் பூட்டிவிட்டு திட்டிக் காவலன் ஆத்மவிசாரி நெருக்கமான இவ்வழியினை விரும்பி வருவோர்களை அச்சுறுத்தி வெருட்டும்பேய்களின் தலைவனான சாத்தானின் கோட்டை இவ்வாயிலுக்கு அருகே உள்ளது. அவன் உன்மேல் சீற்றம் கொண்டு வலிய அம்புகளை விட்டு உயிரை அழித்து உண்டு விடுவான் என்றுதான் அவசரமாக உன்னை இழுத்தேன் எனக் கூறினான். அதைக் கேட்ட ஆத்மவிசாரி பயத்தோடு உள்ளம் நடுங்கி தன்னைக்காப்பாற்றியமைக்கு செய்யக்கூடிய உதவி உண்டோ வானத்தையும் உலகத்தையும் கொடுத்தால் கூடத்தகாது. ஆகவே நான் செய்யக் கூடிய பிரதி உபகாரம் எதுவும் இல்லை. இறைவனுடைய கருணையே பெருகிடும் எனக் கூறினான்.

இவ்வாறு இருவருக்கும் இடையில்உரையாடல் தொடர்ந்தது. கிறிஸ்துபிரானது விளம்பரம் கிடைக்கப் பெற்றதும் அச்சத்தோடு அவர்களுக்குக் கூறினேன். அவர்களை விளக்கி புத்தி தடுமாறியபோது சுவிசேடகன் அறிவுரை கூறி இவ்வாயில் அடைக எனவும் வழிகாட்டினான் என ஆத்ம விசாரி கூறினான். அவ்வாறு மோட்ச வழியை விரும்பி வரும்போது மென்னெஞ்சார் இடையே வந்து உலகியல் சேற்றில் விழுந்து திரும்பிய போது சகாயன் என்பவன் முத்திக்குச் செல்லும்வழியை விபரித்துக் கூற அறிந்தேன். அதைக்கொண்டுதான் நான் இவ் வாயிலை அடைந்தேன் என்று, தான் வந்தபோது ஏற்பட்டவற்றைக் கூறினான் ஆத்மவிசாரி.

இதை எல்லாம் கேட்ட காவலன் கூறுவது: மேலாகவுள்ள முத்தி நகரத்தின் தலைவரான இறைவன் எம்மை விரும்பி தம் அரசகுமாரனான யேசுகிறிஸ்துவை சிலுவையிலே பலியிட்டு, எமக்கு முத்தியின்பத்தை எமக்கு ஆக்கி அருளினார். அதேபோல கொடையாளியான ஆபிரகாம் சகல வசதிகளும் படைத்தவர். தனது சொத்து சுகங்கள் யாவற்றையும் கொடுத்ததுடன் தனது ஒரே மகனையும் பலிகொடுக்கவும் தயங்கவில்லை. மோசே இறையடியவனானவன். தன் அரசுரிமை சகலதையும் இழந்து தனது இனமக்களுக்காக எண்ணவியலாத துன்பங்களை அனுபவித்து உள்ளார். தீர்க்கதரிசி ஆகிய தானியேல் எனது உறுப்புக்கள் அரியப்பட்டாலும் சரி உயிர் போனாலும் இறைவனை அன்றி வேறு தெய்வத்தை வணங்கேன் என்று, சிங்கத்தின் குகையிலே முடங்கிக் கிடந்தார். இவர்களைப்போல் முச்சித்தர்களானவர்கள் அரசனால் கொடிய தீயில் வீசி எறியப்பட்டபோது, இறையருளால் அவர்களுடன் தேவதூதன் ஒருவனுமாக நான்கு பேர் ஆக காணப்பட்ட இதை அரசன் வியப்புற்றான். இறையருளே இவர்களைக் காப்பாற்றியது. இதைவிட பரிசுத்த வேதாகமத்தின் வழிநின்று முத்தியின்பத்தை கருதி அதற்கு எதிராக கல்லெறி, சிறைவாசம், நிந்தனை மொழி, வாள் வெட்டு, கசையடி போன்றவற்றால் துன்புறுத்தியும் பல கஸ்டப்பட்டு முத்தியடைந்தனர். இவ்வாறு முத்தியின்பத்தை நாடி வருவோர் பல கஸ்ரங்களை அனுபவித்துத்தான் வருகின்றார்கள்.

இவ்வாறாக எல்லாம் கூறிய திட்டிக்காவலன் ஆத்மவிசாரிக்குத் இதுதான் நேரான வழி. இதன்படி சென்றால் முத்தி நகரத்தை அடைவாய் என்றபோது, ஆத்மவிசாரி, தான் வேறு எதுவித நினைவும் மனதில் கொள்ளவில்லை. என் முதுகில் உள்ள பாவச் சுமையே மேலும் வாட்டுகிறது. மனதில் எவ்விதமான அமைதியும் இல்லை. உன்னைப்போல் ஆறுதல் கூறித் தேற்றக்கூடியவர்கள் எதிர்ப்படுவார்களா என்றபோது, இப்பகல் கழிவதற்குள் இவ்வழியின் ஒரு பக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஞானத்தினை விளக்குபவனாகிய வியக்கினியின் வீட்டை எதிர்ப்படுவாய். அங்கு நூலறிவாளனை வினாவினால் விளக்குவான். இவ்வாறு ஆத்மவிசாரியின் வருத்தம் நீங்கும்படி வாயிற்காவலன் நல்ல மொழிகளை எடுத்துரைத்து, செல்வாயாக என்று ஆசிர்வாதத்தோடு விடை கொடுத்தான். இவ்வாறாக ஆத்மவிசாரியின் மோட்சப் பயணம் விளங்குகிறது.

Appropriate Technolo... ...ces
121, POINT-P... ...AD
NALLUR, ...A
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்துளிர் என்றும் புதுப்பொலிவுடன்
மிளிர எமது வாழ்த்துக்கள்

## பூபாலசிங்கம் பொத்தகசாலை

சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

வணிகத்துளிர் துளிர்த்த
வாழ்த்துகின்றேன்

## நகைமாடம்

அ. க. இராசரத்தினம்
காரைநகர்,
மூளாய்.

வணிகத்துளிர் வாழையடி வாழையாக
நிலைக்க எமது வாழ்த்துக்கள்

## வரன்நாதன்

தரகு வாணிபம்

110, K. K. S வீதி,
சுன்னாகம்.

பலசரக்குப் பொருட்கள்
மொத்தமாகப்
பெற்றுக் கொள்ளலாம்

உரிமையாளர்கள்
செ. யோகேஸ்வரன்
நா. விஜயநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்துளிர்சிறப்புற வெளிவர
எமது வாழ்த்துக்கள்

## ஏ. சி. எஸ்.

## தொகுதி ஸ்தாபனங்கள்

90, K. K. S. வீதி,
சுன்னாகம்.

சகலவிதமான பாடசாலை
உபகரணங்களுக்கும்
நாடவேண்டிய இடம்

வணிகத்துளிர் புதுப்
பொலிவுடன் மிளிர
வாழ்த்துகிறோம்

## PACKE ENTERPRISE

54, K. K. S. ROAD,
CHUNNAKAM.

சகலவிதமான T.V. டெக்
ரேடியோக்கள்
திருத்திக் கொடுக்கப்படும்

வணிகத்துளிர் ஆண்டு
தோறும் வளர
எமது வாழ்த்துக்கள்

## செல்லப்பா களஞ்சியம்

இட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான
பொருட்களுக்கும்

உரிமையாளர்
செ. வே. சிற்சபேசன்

வணிகத்துளிர் துளிர்க்க
வாழ்த்துகிறேன்

## ந. ஏரம்பமூர்த்தி

பலசரக்கு வியாபாரம்

பறாளாய் வீதி,
சுழிபுரம்.



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA.
No.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்துளிர் துளிர்த்து
விருட்சமாக வளர எமது
நல்வாழ்த்துக்கள்!

பெண்களுக்கான அனைத்து
வகை ஆடைகளையும்
கண்ணுக்கினிய கவர்ச்சிகர
மான நவநாகரிக முறையில்
அதிவிரைவில் தைத்துக்
கொடுக்க யாழ்நகரில்
சிறந்த ஸ்தாபனம்

## சூயிக் காமன்ஸ்

183, சிறப்பு அங்காடி
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.
கிளைஸ்தாபனம்: 162, நாவலர்
வீதி, யாழ்ப்பாணம்.



வணிகத்துளிர் வளம்பெற
எமது இதயம் கனிந்த
நல்வாழ்த்துக்கள்

என்றும் யாழ்நகரில்
அழகிய தையல் வேலைகளுக்கு
நாடவேண்டிய இடம்

## சிற்றி ரெயிலர்ஸ்

(நகரத் தையலகம்)
123, இராணி தியேட்டர்
முன்பாக
யாழ்ப்பாணம்.



வணிகத் துளிர் ஆண்டு
தோறும் துளிர்த்து வளர
எமது உளம் கனிந்த
நல்வாழ்த்துக்கள்

## குமார் தையலகம்

மேஜர் சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்
சி. சூரியகுமார்



வணிகத் துளிரே
நீ வளர்க வளர்கவே
வருடா வருடம் புதிய அறிவு
தந்து வளர்கவே!

## கிருஷ்ணா தையலகம்

Dr. சுப்பிரமணியம் வீதி.
சுன்னாகம்.

ஆடவர்களின் ஆடைகள்
நவநாகரிக முறையில்
தைத்துக் கொடுக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்துளிர் நீடூழி
வாழ்க!

த. தெய்வேந்திரம்
மிதிவண்டித் திருத்தகம்

சுழிபுரம்

வணிகத்துளிர் துளிர்க்க
எமது வாழ்த்துக்கள்

தவம்
மிதிவண்டிகடை

பதிவு இல: யா. 06 / 0274

# றெமிங்ரன் கல்வி வளர் சோலை

மூளாய் - சுழிபுரம்

ஆண்டு 08 - O/L வரை

கனிதம் — ஸ்கந்தா
வளர்மதி
விஞ்ஞானம் — தேவதாஸ்
ஜெயா
தமிழ் — கணேஸ்
செல்வி
ஆங்கிலம் — ரவி
சபா
சமூகக்கல்வி — ஐங்கரன்
முருகானந்தன்
வர்த்தகம் — லோகேஸ்
சமயம் — மனோ
கலமகா
விவசாயம் — மஞ்சுளா
சுகாதாரம் — ஜெகா

A/L கலை/வர்த்தக/விஞ்ஞானம்

கணக்கியல் — கைலைவாசன்
பொருளியல் — சண்
வர்த்தகம் — நாதன்
அளவையியல் — லோகேஸ்
தமிழ் — ஈசன், மதிவதனன்
இந்துநாகரிகம் — மதிவதனன்
இந்துசமயம் — ஜெயக்குமார்
புவியியல் — ஐங்கரன்
அரசியல் — சீலன்
தூயபிரயோககணிதம் — தாஸ்
இரசாயனவியல் — குமரன்
பௌதிகவியல் — வெக்ரர்

K. மனோ
நிர்வாகி

21 ஆம் வெற்றி ஆண்டிலும் சாதனை தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்துளிர் என்றும் புதுப் பொலிவுடன் மிளிர எமது
நல்வாழ்த்துக்கள்

பல்வகை கிருமி நாசினிகளையும் கிருமி நாசினித் தெளிகருவிகளையும்
நல்லின விதைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ள யாழ். நகரில் சிறந்த ஸ்தாபனம்

# லங்கம்

219, 221 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
ப. வடிவேல்

---

வணிகத்துளிர் துளிர்க்கும் இவ்வேளையில் இத்துளிர் இனிதே
துளிர்த்து வளம் பெற எமது நல்லாசிகள்

# பிரகாஸ் பல்பொருள் வாணிபம்

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர்

157, சந்தோசம் தெரு, (கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

---

வணிகத்துளிரே வாழ்க! வளர்க!
புகழொளி கொண்டு மிளிர்க!

# மதி நகை வாணிபம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
பொ. சுந்தரலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கத்துளிர் வளம் பெற வாழ்த்துகின்றோம்

# லிங்கம் கூல் பார்

52, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org